# மலையாள இலக்கண வரலாறு

முனைவர் வே.சா.அருள்ராசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்- 613 005

# மலையாள இலக்கண வரலாறு

முனைவர் வே. சா. அருள்ராஜ்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-278-9

தமிழப பலகலைககழக வெளியீடு : **218**

திருவளளுவராண்டு *2031 மார்கழி - திசம்பர் 2000*

நூல : ***மலையாள இலக்கண வரலாறு***

ஆசிரியா : வே. சா. அருள்ராஜ்

பதிபபு : முதற்பதிப்பு

விலை . உ.ரூ. 75/-

பககம் : *120*

படிகள் : *500*

அசசுப பதிவம் : திருவள்ளுவர் கணினி மையம்,
தஞ்சாவூர்

அசசு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி
அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்

துணைவேந்தர்

## அணிந்துரை

மலையாள இலக்கண வரலாறு, அம்மொழியின் இலக்கிய வளர்ச்சி மாற்றத்தால் பல கால கட்டங்களில் மாறுதல் செய்யவேண்டிய சூழல்கள் தோன்றின. வட மொழியின் ஆதிக்கம் மலையாள மொழியில் குடிகொண்ட காலங்களில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டன எனலாம். மலையாள இலக்கிய வரலாற்றில் ஏறக்குறைய 200 ஆண்டுகள் 'கதகளி' என்னும் நாட்டிய நாடகங்கள் செல்வாக்கு பெற்றன. கதகளி நாட்டிய நாடகத்திற்கு இதிகாசங்கள் கருவாக அமைந்தன. இந்நிலையில்தான் வடமொழியைப் பழைய மலையாளத்தில் புகுத்தினர். இந்நிலையே மணிப்பிரவாள நடை அமைய வழி வகுத்தது. மலையாள மொழிக்கவிஞர் அனைவரும் மணிப்பிரவாள நடையில் 'கதகளி' நாடக நாட்டியத்திற்குப் பாடல்கள் இயற்றினர். இத்தகைய நாடகங்கள் இன்றும் 'கண்ட காவியங்கள்' என்றும், 'திருச்திய காவியங்கள்' என்றும், 'சிராவிய காவியங்கள்' என்றும் பெயர் பெற்றன. மணிப்பிரவாள நடையில் எழுதாத கவிஞர்கள் அரைக் கவிஞர்கள் என்றும் குறைக் கவிஞர்கள் என்றும் குறை கூறினர். மணிப்பிரவாள நடைக்கு ஏற்றவாறு மலையாளத்தில் இலக்கணங்கள் அமைக்கப் புலவர்கள் தலைப்பட்டனர்.

இந்நிலை உருவாவதற்கு முன்னர்த் தோன்றிய இலக்கியங்கள் எல்லாம் எழுத்தால் மலையாளமாகவும், படித்தால் நல்ல தமிழாகவும் காணப்பட்டன. இதற்கு 'இராமகதை' என்ற நூல் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மலையாள வரலாற்றுக் காலகட்டத்தில் இராமகதைக்கு முன்னர்த் தோன்றிய இலக்கியங்கள் தமிழாக உள்ளன.

தமிழில் சங்க இலக்கியங்கள் சில மலையாள நாட்டில் தோன்றியவை. இதில் இருந்து மூல திராவிட மொழி தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தது என்ற உண்மை புலனாகிறது. மலையாள மொழிக்கு இலக்கணம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில்தான் எழுதப்பட்டது; 'லீலா திலகம்' என்ற மலையாள மொழி இலக்கணம் இந்த வரிசையில் முதல் இடம் பெறுகிறது.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்து 1851இல் 'ஹெர்மன் குண்டர்ட்' என்பவர் 'மலையாள பாஷா வியாகரணம்' என்ற இலக்கண நூலை எழுதியுள்ளார்.

எழுத்தச்சன், ராஜராஜவர்மா முதலிய மலையாள அறிஞர்களும் கால்டுவெல், எமனோ, பர்ரோ முதலிய மேல் நாட்டு அறிஞர்கள் மலையாள மொழி வரலாற்றை அறிந்து இலக்கணத்தைச் செம்மைப்படுத்த முயன்றனர்.

மலையாளத்துக்குக் 'கேரள பாஷா' என்று வடமொழியாளர்கள் பெயர் சூட்டி இருந்தனர். தமிழ் மொழியைப் 'பாண்டிய பாஷா' என்று அழைத்தனர். இதனை 'லீலா திலகம்' என்ற இலக்கணம் முதல் நூற்பாவிலேயே சுட்டுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் வே.சா. அருள்ராசு அவர்கள் இவ்வரலாற்றுப் பேருண்மைகளை ஆய்ந்து மலையாள இலக்கண வரலாறு என்னும் இந்நூலினைப் பெருமுயற்சியுடன் எழுதித் தொகுத்துள்ளார். திராவிட மொழிகளின் வரலாற்றுப் போக்கில் பல்வேறு பேருண்மைகளை இந்நூல் நிலைநாட்டுகிறது. ஒப்பிலக்கண நோக்கிற்கு இவர்தம் நூல் பெரிதும் பயன்படும்; இவருக்கு எம் பாராட்டுக்கள்!

**கதிர். மகாதேவன்**

# நன்றியுரை

"மலையாள இலக்கண வரலாறு" என்னும் தலைப்பில் குறுங்கால ஆய்வுத் திட்டம் ஒன்றைச் செய்ய அனுமதி அளித்து இவ்வாய்வறிக்கையினை உரிய காலத்தில் செய்து முடிக்க ஊக்கமும் ஆக்கமும் அளித்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் எனது பேராசிரியருமான மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் கி. கருணாகரன் அவர்களுக்கும், இவ்வாய்வறிக்கையினை நூலாக்கம் செய்ய அனுமதி அளித்ததோடு மிகச் சிறப்பான முறையில் அணிந்துரை வழங்கி என் ஆய்வு முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்துவரும் மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் கதிர். மகாதேவன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தற்பொழுது நிறைவேற்றப்பட்ட ஆய்வுத் தலைப்பில் ஆய்வை நடத்தத் துறையில் உரிய சூழலை ஏற்படுத்தி, ஆய்வுத் திட்டத்தின் கால எல்லையில் அவ்வப்போது எல்லா வகையாலும் உதவிபுரிந்த எனது மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய பேராசியரிரும் துறைத் தலைவருமான முனைவர் சு. இராசாராம் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இவ்வாய்வறிக்கையினை உருவாக்கும்போது என்னோடு கலந்துரையாடிப் பல்வேறு கருத்துக்களைப் பரிமாறி உரிய காலத்தில் ஆய்வறிக்கையினை முடிக்க ஊக்கம் அளித்த முனைவர் தா. ஈசுவரபிள்ளை, முனைவர் க. அன்பழகன், திரு கி. செகனாதன் ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இவ்வாய்வு நூலாக்கத்திற்குத் துணைநின்ற தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், நிதியலுவலர் (பொறுப்பு) திரு இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலாக்கத்திற்குத் துணைநின்ற அச்சகத்துறை மற்றும் பதிப்புத்துறை நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வே.சா. அருள்ராஜ்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | – | 1 |
| 2. | மலையாள இலக்கணம் : வரலாற்றுப்பார்வை | – | 6 |
| 3. | லீலாதிலகம் | – | 17 |
| 4. | ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம் | – | 39 |
| 5. | கேரள பாஷா வியாகரணம் | – | 46 |
| 6. | கேரள கௌமுதி | – | 49 |
| 7. | வியாகரண மித்ரம் | – | 61 |
| 8. | கேரள பாணினீயம் | – | 70 |
| 9. | ஐரோப்பியர்களின் மலையாள இலக்கணங்கள் | – | 87 |
| 10. | முடிவுரை | – | 108 |
| | நூற்பட்டியல் | – | 111 |

# முன்னுரை

காலந்தோறும் இலக்கணங்கள் உருவாகிக் கொண்டே வருகின்றன. அதற்குக் காரணம் இலக்கியங்களின் வளர்ச்சி நிலையே. ஒரு மொழியில் இலக்கியங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டால், அம்மொழியில் இலக்கணங்களும் வளர்ந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு கால கட்டத்திலும் தோன்றிய இலக்கணங்களை ஆய்வு செய்யும்போது அம்மொழியின் வளர்ச்சி நிலையை நன்கு புரிந்து கொள்வதோடு அம்மொழியின் தரத்தையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சிகள் வெளிவந்த போதிலும் தமிழில் இதுவரை மலையாள மொழியின் இலக்கண வரலாறு பற்றிய எந்த ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்திய மொழிகளுள் சிறந்த முக்கியமான மொழிகளின் இலக்கிய வரலாறுகளை வெளியிடுவதென மத்திய சாகித்திய அக்காதெமி வகுத்துள்ள திட்டத்தைப் போன்று இந்திய மொழிகளுள் முக்கியமானவற்றின் இலக்கண வரலாறுகளைச் சுருக்கமாகத் தமிழ் மொழியில் மக்களுக்குப் பயன்படும் தன்மையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிகள் பள்ளியில் மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டு முதன் முறையாக மலையாள இலக்கண வரலாறு என்னும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மலையாள மொழி இலக்கணத்தின் தோற்றுவாய் முதல் மிகச் சமீப காலம் வரையிலான இலக்கண வரலாறு என்பது மிக விரிந்த ஆய்வுப் பரப்புடையது எனினும், அவற்றைத் தமிழ் மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றை விடுபடாமல் சேகரித்துச்சுருக்கமாக வெளிக்கொணர வேண்டியுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்தின் இலக்கணங்களையும் தற்காலப்பார்வையில் அணுகி, அதன் திறனை அறிந்து மதிப்பீடு செய்வது ஒரு இலக்கண ஆசிரியனின் கடமையாகும். மலையாள

மொழி இலக்கணத்தைத் தமிழ் மொழியில் கொண்டு வரும் பணியில் முன் மாதிரியாகக் குறிப்பிடத்தக்க நூல் ஒன்றும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மலையாள மொழியின் தனித்தனி இலக்கணங்களில் சிலவற்றைத் தமிழில் எழுதியுள்ளனர். குறிப்பாக, கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகக் கருதப்படும் முதல் இலக்கண நூலாகிய லீலா திலகத்தை, டாக்டர் மா. இளைய பெருமாள் தமிழாக்கம் செய்துள்ளார். அத்துடன் 19ஆம் நூற்றாண்டில் எ.ஆர்.ராஜராஜ வர்மா எழுதிய கேரளப்பாணினீயத்தையும் பேராசிரியர் இளைய பெருமாள் தமிழாக்கம் செய்துள்ளார்.

டாக்டர் ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழியிலக்கணத்தை, டாக்டர் மா. இளையபெருமாள் அவர்களும், டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்களும் இரு பகுதிகளாகத் தமிழாக்கம் செய்துள்ளனர். டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள் 'மலையாள மொழியின் முதல் இலக்கணம்' என்னும் தலைப்பில் லீலாதிலகம் குறித்து நூல் ஒன்று எழுதியுள்ளார். ஒரு சில கட்டுரைகளும் தமிழில் எழுதப்பட்டுள்ளன.

மலையாள இலக்கண நூல்களெனப் பெயர் அறியப் பெறுவனவற்றுள் முதல இலக்கண நூல் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகுமென அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். அன்று முதல் இன்று வரை கிடைத்த இலக்கணங்களைப் பற்றிய வரலாற்றுப் பார்வையில் எழுதப்படுவது இவ்விலக்கண வரலாறாகும். இலக்கண வரலாற்றில் இலக்கணத்தை வளர்க்க எந்த அளவு இலக்கண ஆசிரியர்கள் உதவினர் எனப் பார்க்க வேண்டும்.

மலையாள மொழிக்கு எழுதப்பட்ட இலக்கணங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ. மலையாள இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள்

ஆ. வெளிநாட்டு இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள்.

இவற்றின் வேறுபாடுகள் என்னவென்றால் மலையாள இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள், அவர்களது அன்றாட வாழ்க்கையின் பயன்பாட்டு அடிப்படையில் இயற்றப்பட்டவைகளாகும். வெளிநாட்டு இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள், மொழிக் கூறுகளைப் பாகுபாடு செய்து தொடர்புடைய மொழிகளோடு ஒப்பீட்டு நோக்கில் இயற்றப்பட்டவைகளாகும். முதல் வகை இலக்கணங்களில், இரண்டாம் வகை இலக்கணங்களை விடக் கூடுதலான கோட்பாட்டு விவாதங்களைக் காணலாம். முதல்வகை இலக்கண ஆசிரியர்கள் அவர்களது மொழியின் வரலாற்றுத் தன்மைகளைப் பெருமளவில் எடுத்துக் கூறுவார்கள். ஆனால், இரண்டாம் வகை இலக்கண ஆசிரியர்கள் பிறமொழி எடுத்துக்காட்டுகளை எடுத்தாள்வார்கள்.

இதுவரை வெளியிடப்பட்ட எல்லா மலையாள இலக்கணங்களும் இவ்வாய்வில் இடம் பெற்றுள்ளன எனக் கூறமுடியாது. இருந்தாலும் முக்கியமான அனைத்து இலக்கணங்களின் வரலாறும் இதில் இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்கள் மலையாள இலக்கணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலேயே முக்கியமான இலக்கணங்களின் சுருக்கமான வரலாறு இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக்குரிய தரவுகளாக மூல நூல்கள் மற்றும் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் பல முதன்மை ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன. துணைத் தரவுகளாகக் கல்வெட்டுக் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், வரலாற்று நூல்கள், ஐரோப்பிய இலக்கண ஆசிரியர்கள் எழுதிய மலையாள இலக்கண நூல்கள் மற்றும் அறிஞர் பெருமக்களைப் பேட்டி கண்டது போன்றன அடங்கும். திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழியியல் கழகம் வெளியிட்ட டாக்டர் கே.என். எழுத்தச்சன் எழுதிய The History of the Grammatical Theories in Malayalam என்னும் நூல் இவ்வாய்வுக்குப் பெரிதும் பயன்பட்டது. ஆய்வின் அணுகுமுறை, தரவுகளைக் கொண்டு வரலாற்று அடிப்படையிலும் ஒப்பீட்டு அடிப்படையிலும் அமைந்துள்ளது. இவ்வாய்வு பத்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு.

அ. முன்னுரை

ஆ. மலையாள இலக்கணம் வரலாற்றுப் பார்வை

இ. லீலாதிலகம்

ஈ. டாக்டர் ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம்

உ. கேரள பாஷா வியாகரணம்

ஊ. கேரள கௌமுதி

எ. வியாகரணமித்ரம்

ஏ. கேரள பாணினீயம்

ஐ. ஐரோப்பியர்களின் மலையாள இலக்கணங்கள்

ஒ. முடிவுரை

ஒவ்வொரு இயலிலும் என்னென்ன செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன எனக் காண்போம்.

முதல் இயலாக அமையும் 'முன்னுரை' என்னும் பகுதியில் ஆய்வுப் பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வின் அணுகு முறைகள், ஆய்விற்கான தரவுகள் போன்றவை சுட்டப்பெறுகின்றன.

'மலையாள இலக்கணம்: வரலாற்றுப் பார்வை' என்ற இரண்டாவது இயலின் கண் இதுவரை வெளிவந்த மலையாள மொழி இலக்கணங்கள் குறித்து ஒரு வரலாற்றுப் பார்வையின் ஒட்டு மொத்தச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. இதில் மலையாள மொழியின் இலக்கண ஆசிரியர்கள் எழுதிய இலக்கணங்களும் ஐரோப்பியர் எழுதிய மலையாள இலக்கணங்களும் தரப்பட்டுள்ளன.

'லீலாதிலகம்' என்னும் மூன்றாவது இயலில் லீலாதிலகத்தின் காலம், லீலாதிலக ஆசிரியர் குறித்த குறிப்புகள், லீலாதிலகம் குறித்து அறிஞர்களின் கருத்துக்கள், லீலாதிலக இலக்கணத்தின் நோக்கமும் பயனும், அதன் உட்பிரிவுகள் மற்றும் அதன் முக்கியக் கூறுகள் ஆகியன ஆராயப்பட்டுள்ளன.

ஆய்வின் நான்காவது இயல் "ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம்" குறித்ததாகும். குண்டர்ட்டின் வாழ்க்கை வரலாறு, குண்டர்ட் இலக்கணத்தின் உட்பிரிவுகள்,

பெயர்கள், வினைகள், வேற்றுமைகள் இத்தியாதி போன்றன விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

'கேரள பாஷா வியாகரணம்' என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பகுதி இவ்வாய்வின் ஐந்தாவது இயலாகும்.

'கேரள கௌமுதி' என்னும் ஆறாவது இயலில் நூலின் அமைப்பு மற்றும் அதன் அறிமுகவுரை, எழுத்து, சொல் போன்ற இலக்கணக்கூறுகள் ஆராயப்பட்டுள்ளன.

ஏழாவது இயலில் 'வியாகரண மித்ரம்' என்னும் இலக்கணம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கணத்தின் பொதுப் பார்வை குறித்தும் இவண் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எட்டாவது இயல் 'கேரள பாணினீயம்' குறித்த இலக்கணத்தை விளக்குகிறது. எ.ஆர். ராஜராஜவர்மாவின் பிற இலக்கண நூல்களும் இவ்வியலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

"ஐரோப்பியர்களின் மலையாள இலக்கணங்கள்" என்னும் ஒன்பதாவது இயலில் ட்ருமண்ட், ஸ்பிரிங், சோசப் பீட், ஜார்ஜ் மாத்தன், கார்த்வெயிட், ஃப்ரோன்மேயர் ஆகியோர் எழுதிய மலையாள இலக்கணங்கள் குறித்த சுருக்கம் தரப்பட்டுள்ளது. அத்துடன் எல்.வி. இராமசுவாமி ஐயர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருக்கும் மலையாள மொழி இலக்கணங்கள் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

பத்தாவது இயலாகிய முடிவுரையில் ஆய்வின் குறிப்பிடத்தக்க சில முடிவுகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் இறுதியில் துணை புரிந்த நூல்களின் பட்டியல் இடம் பெறுகிறது.

# மலையாள இலக்கணம்: வரலாற்றுப் பார்வை

தென்னிந்தியத்திராவிட மொழிகளில் இலக்கிய உலகில் இறுதியாகத் தோன்றிய மொழி மலையாளம். மலையாள மொழிக்குக் கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் மேற்குக் கடற்கரைக் கிளைமொழிக் கூறுகளைக் கொண்டுள்ளன. இக்கல்வெட்டுக்களின் மொழிக்கூறுகள் படிப்படியாக வளர்ச்சி பெற்று மலையாள மொழியாகப் பரிணமித்தது. இக்கல்வெட்டுக்கள் தமிழ் மொழியிலும் காணப்பட்டன. மலையாள மொழியின் பழைய வடிவம் கொடுந்தமிழாகும். மலையாள மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு அங்கமாகவும், தமிழ் மொழியின் கிளை மொழியாகவும் விளங்குகிறது.

மலையாள மொழியைக் குறித்துக் கூறும்போது சில அறிஞர்கள் இது தமிழ் மொழியைப் போன்று திராவிட மொழியிலிருந்து தோன்றிய ஒரு மொழியெனக் கருதுகிறார்கள். வேறு சிலரோ இது கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழியிலிருந்து கிளைத்து எழுந்த ஒரு மொழியாகுமென நம்புகின்றனர். பழந்தமிழகத்தில் சேரநாடு என அழைக்கப்பட்டது வரலாற்று அடிப்படையில் அது கேரநாடு என்றிருக்கவேண்டும். கேர என்பதற்குத் தென்னைமரம் என்ற பொருள் உண்டு. தென்னை மரங்கள் நிறைந்த நாட்டை கேரநாடு என்று அழைத்திருக்க வேண்டும். மொழியியல் அடிப்படையில் பார்க்கும்போது கேர என்பது சேர என ஒலிமாற்றம் அடைந்து (*K>C/-{i,e} பிற்காலத்தில் சேரநாடு என வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

பதிற்றுப்பத்து, புறநானூற்றில் சில பாடல்கள், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, ஆதியுலா, பெருமாள் திருமொழி போன்றவை சேர நாட்டிலிருந்து தமிழ் இலக்கியத்துக்குக் கிடைத்த நன்கொடைகளாகும். அது போன்றே இளங்கோவடிகள், சேரமான் பெருமாள், குலசேகராழ்வார், வேணாட்டடிகள் போன்றோர் சேர நாட்டிலிருந்து கிடைத்த ஆசிரியர்கள் ஆவர். இவர்கள் தமிழ்

இலக்கியத்துக்குப் பல கொடைகளை வழங்கியுள்ளனர். கேரளா ஒரு தனிப்பட்ட நாடாக உருவானது கொல்லம் ஆண்டின் துவக்கமாகும். நம்பூதிரிப்பிராமணர்கள் இங்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்து வந்தனர். மலையாளம் தனியொரு மொழியாக உருவாவதற்கு இவர்களே ஒரு காரணமானவர்கள். சேர நாட்டிலுள்ள தமிழ் மொழியின் கிளை மொழி ஒரு தனி மொழியாக அதாவது மலையாளமாக, கி.பி 10ஆம் நூற்றாண்டிற்குப் பின் வளரத் தொடங்கியது. இவ்வாறு மலையாளம், தமிழ் மொழியிலிருந்து வேறுபடுத்தப்பட்ட ஒரு கிளைமொழியாக மாறியது.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் உருவெடுத்த மலையாள இலக்கியம் இராமசரிதமாகும். இக்கால கட்டத்தில் இராமசரிதத்தைப் பின்பற்றி வேறுபல நூல்களும் தோன்றின. வில்லடிச்சான் பாட்டுக்களாகிய சாமுண்டிக்கதை, மதிலகத்துக்கதை, இரவிக்குட்டிப் பிள்ளை போர், நீலிக்கதை, சதி சம்பக வள்ளி உலகுடைய பெருமாள் பாட்டு, புதுவாதப்பாட்டு, அஞ்சுதம்புரான் பாட்டு, இராமகதப் பாட்டு போன்ற இலக்கியங்கள் தமிழின் கிளைமொழியாகவே தமிழ் அணி இலக்கணத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

இவ்விலக்கியங்கள் மலையாள இலக்கிய உலகில் ஒரு சிறிய அளவே தாக்கத்தைக் கொண்டுள்ளன எனக் கருதப்படுகிறது. வடமொழியே மலையான மொழியின் செய்யுட்பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது.

கி.பி. 12 அல்லது 13ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருத அணியிலக்கணத்தின் தாக்கத்தால் மணிப்பிரவாளம் என்னும் மலையாள, சமஸ்கிருத மொழிகளின் கலப்பால் ஒரு புதிய செயற்கை மொழி உருவானது. எனவே, தமிழ் மொழியின் செல்வாக்கு படிப்படியாகக் குறையத் தொடங்கியது. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் நிரணம் கவிகள் மலையாள மொழியில் காணப்படும் தமிழ் மொழியின் அணியிலக்கணத்தை முற்றிலும் விடுவிக்க முயற்சிகள் மேற்கொண்டனர். இருப்பினும் அது முற்றிலும் வெற்றி பெறவில்லை.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செறுசேரியும், 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எழுத்தச்சனும் மலையாள மொழியைத் தமிழ் மற்றும் வடமொழி அணியிலக்கணங்களிலிருந்து விடுவித்து மலையாள மொழிக்கேயுரித்தாகக் காணப்பட்ட அணியிலக்கணங்களைக் கொண்டு இலக்கிய அந்தஸ்து பெற்ற ஒரு மொழியாக மாற்றினர். இருப்பினும் அங்கும் தமிழ்ச் செய்யுளின் தன்மைகள் தென்படுவதைக் காணலாம்.

தமிழ்மொழி படிப்படியாகத் தனது செயல்பாட்டை இழந்து வடமொழி தலை தூக்கச் செய்த வேளையில் பேச்சுத் தமிழ் வழக்காற்றில் இருந்து வந்தது. இக்கால கட்டத்தில்தான் மணிப்பிரவாள நடை தோன்றியது. இருந்தாலும் பாட்டு இலக்கிய வகை தமிழிலே காணப்பட்டது. கி.பி.10 அல்லது 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எந்த ஒரு இலக்கியமும் இன்றுவரை கிடைக்கவில்லை. இராமசரிதமும் சில மணிப்பிரவாள சம்புக்களும் கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன. ஒரு வேளை பாஷா கௌடில்யம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது 13ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலோ தோன்றியிருக்கலாம். இக்கால கட்டங்களில் இலக்கணங்களும், அகராதிகளும் தோன்றவில்லை. இதற்குக் காரணம் அறிஞர்கள் மலையாள மொழிக்குக் காட்டிய ஆர்வத்தைவிட வடமொழிக்குக் காட்டிய ஆர்வமே அதிகம். அத்துடன் ஜைனர்களும் புத்தர்களும் அறிவியல் நூல்களைப் பிற தென்னிந்திய மொழிகளில் படைத்தனர். இவற்றில் ஒரு நூல் கூட மலையாள மொழியில் எழுதப்படவில்லை. எனவே, மலையாள மொழி ஏனைய திராவிட மொழிகளிலிருந்து பின்னுக்கத் தள்ளப்பட்ட ஒரு மொழியாகக் கருதப்பட்டது.

## இலக்கண வரலாறு

பொதுவாக, ஒரு மொழியின் இலக்கணத்தை ஊகமுறையிலோ அல்லது வரலாற்று முறையிலோ எழுதுவது மரபு. ஒரு மொழியிலுள்ள சொற்களின் உருவ அமைப்பு, சொற்றொடர் மரபு ஆகியவற்றைத் தற்கால நடைமுறைக்கேற்றவாறு சோதனை மேற்கொண்டு அவற்றிற்கெல்லாம் உட்பிரிவுகள் அமையும் வகையில் விதிகள் அமைத்தல் என்பதை ஊகமுறை இலக்கணம் எனலாம். இன்னொன்றாகிய வரலாற்று முறை இலக்கணம் என்பது இலக்கணம் எழுத வேண்டிய மொழியின் ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள பல காலகட்டங்களில் தோன்றியுள்ள வேற்றுமைகளைக் கண்டு அவற்றிற்கேற்ற விதிகளை அமைத்தல், வரலாற்றை அடைப்படையாகக் கொண்டு உருவாகுவதால் இதற்கு வரலாற்று முறை இலக்கணம் என்ற பெயர் பொருத்தமாகவே அமையும். ஊகமுறையில் இலக்கணம் இயற்றுதல் என்பது எளிது. ஆனால், வரலாற்று முறையில் இலக்கணம் இயற்றுதல் என்பது பயன் மிகுந்த ஒன்றாகும். இலக்கண நூற்களை விஞ்ஞான நூற்களோடு சேர்த்துக் கணக்கிட வேண்டுமெனில், அது இரண்டாவது முறையாகிய வரலாற்று முறையில்தான் எழுதப்பட வேண்டும்.

ஒரு மொழியில் கவிதை எழுதுதல் எளிது. ஆனால், அது சரி, தவறு என விதித்தல், புதிய கருத்துக்களைத் தேவைக்கேற்பப் படைக்க வழியுண்டாக்கல், பழைய மரபுகளையும், மொழி நிலைகளையும் பேணுதல், மொழிக்குக் கேடு வராதபடி காத்தல், தவறான உரிமையால் ஏற்படும் விதி மீறலால் கேடுவராதிருக்க விதியமைத்தல் ஆகியவற்றையெல்லாம் இலக்கணமே செய்ய முடியும்.

வரலாறு என்பது வரும் வழி அல்லது வரும்முறை என்னும் பொருளது. வரலாற்று வகைகள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று மொழி வரலாறாகும். இதன் ஒரு சிறப்புக் கூறு இலக்கண வரலாறாகும். மற்றொரு சிறப்புக்கூறு இலக்கிய வரலாறாகும். ஒரு மொழியில் இலக்கிய வரலாறு முந்தையது; விரிவுடையது; அம்மொழியின் இலக்கண வரலாறு பிந்தையது; அளவால் இலக்கிய வரலாற்றினும் சுருங்கியது.

இருமுறைகளில் ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதலாம்.

1. முதலில் இலக்கியம் தோன்றி அதற்கு இலக்கணம் எழுதுவது ஒருமுறை. இது இயற்கையான வளர்ச்சி முறையில் அமைந்த ஒன்று.

2. முதலில் ஒரு மொழிக்கு இலக்கணத்தை எழுதி அதன் பின் அம்மொழியில் இலக்கியம் படைத்தல் வேறொருமுறை. புதுக்கவிதைகள், மற்றும் செய்யுள்கள் இயற்றும்போது இலக்கணத்தை அடிப்படையாக வைத்தே இயற்றுவதைக் காணலாம். கூறியது கூறலாகக் காணப்படும் இதில் புதிய இலக்கண நெறிகள் வளராது. ஆனால், இலக்கியங்கள் வளர்ச்சியடையும்.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்னும் நூற்கொள்கையே இலக்கியத்தின் முற்பாட்டையும் இலக்கணத்தின் பிற்பாட்டையும் விளக்கிவிடும்.

"எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்" என்பதுவும் இதற்குச் சான்றாகும். கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? என்பது போலவோ, விதை முந்தியதா? மரம் முந்தியதா? என்பது போலவோ வினாவி வினாவித் தடுமாறும் நிலையதன்று இலக்கிய இலக்கண முதன்மை ஆய்வு. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பினார்" என்பதே சாலச் சிறந்ததாகும்.

பொதுவாக, மொழியை மக்களின் கண்கள் என்பர். கண்ணைப் பாதுகாக்க இமைகள் இருப்பது போன்று மொழியைப் பாதுகாக்க இலக்கணங்கள் காணப்படுகின்றன. ஒரு மொழியில் இனிமையும், அழகும், செம்மையும் புகுத்தவும், மொழியைப் பாதுகாக்கவும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக்கணங்களைப் படைத்தனர் இலக்கண ஆசிரியர்கள். மலையாள மொழியில் இலக்கணத்தை வியாகரணம் என்றழைத்தனர். இலக்கணம் என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களைக் கொடுப்பதைக் காணலாம். பாவாணர், “இலக்கு- இலக்கணம் சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காக, கூறப்பெறும் மொழியமைதி இலக்கணம்” என்கிறார். வடமொழியிலும் இலக்கணம் வியாகரணம் என்றே அழைக்கப்படுகிறது.

எ.கா. பாணினீய வியாகரணம்.

வடமொழியில் குறி, குறிக்கோள், இயல், இயல் விளக்கம், விளக்கக்காட்டு என்னும் பொருள்களிலேயே லக்ஷ்ணா என்னும் சொல் ஆளப்பட்டிருக்கிறது. வடமொழி இலக்கண மரபில் லக்ஷ்ணம் என்னும் சொல் இலக்கணத்தைக் குறிக்கும் சொல்லாகும். இலக்கணம் என்பது பழந்தமிழ்ச் சொல்லாகும். நூல் என்ற சொல், தமிழில் இலக்கணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். குணநூல், கூத்தநூல், நன்னூல், சின்னூல், தொன்னூல் விளக்கம் என்பனவெல்லாம் இலக்கண நூற்களே. புலன் என்பதும் இலக்கணம் என்னும் பொருளுடையது.

இலக்கிய வரலாறு போல இலக்கண வரலாறு என்ற நூல் உருவாக்க முயற்சி சிறந்த ஒன்றாகும். இலக்கண வரலாற்றை அறிய ஒப்பிலக்கணம் மிகவும் இன்றியமையாதது. ஒப்பிலக்கணம் என்பது இனமொழிகளை ஒப்பிட்டுத் தொன்மொழியை மீட்டுருவாக்கம் செய்யும் முறையைக் குறிப்பதாகும். ஒரு இலக்கணம் காலந்தோறும் எப்படிக் கற்கப்படுகிறது? அது உயர்வாகக் கருதப்படுகிறதா? அதற்கான காரணம் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாகக் காணப்பட வேண்டும்.

மலையாளமொழி இலக்கணங்களில் முதலாவது எழுதப்பட்டதாகக் கருதப்படும் லீலாதிலகம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும். அதுவும் மலையாள மொழிக்குரிய இலக்கணமாகக் கருதப்படவில்லை. காரணம் வடமொழியிலே அது எழுதப்பட்டுள்ளது. அத்துடன் மலையாள மொழி இலக்கணத்தின் முழு விளக்கமும் இதில் எடுத்தாளப்பட வில்லை. இது மணிப்பிரவாளச்

செய்யுள் இயற்றுவதற்காக எழுதப்பட்ட ஒரு தொடக்க நூலாகும். மணிப்பிரவாளத்தின் தன்மையை விளக்கும்போது, மலையாள மொழியின் இயல்பான கருத்துக்களை ஒத்த வடமொழி மற்றும் கேரள பாஷா சொற்கள் மூலம் விளக்குவது பொருத்தமானதாகக் காணப்படும் என்கிறது. மலையாள இலக்கண விளக்கத்தில் இதுவே முன்னோடியாக விளங்குகிறது. அதே நூற்றாண்டில் அணியிலக்கணமாகிய "அலங்கார ஸம்க்ஷேபம்" என்னும் நூல் முழுமை பெறாத இலக்கணமாகக் காணப்பட்டது.

லீலாதிக இலக்கண நூலுக்குப் பின் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பாகம் வரை மலையாள மொழிக்கு எந்தவொரு இலக்கணமும் தோன்றவில்லை. 19-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் டாக்டர். குண்டர்ட்டும் அருட்திரு ஜார்ஜ் மாத்தன் அவர்களும் அவரவருடைய இலக்கணங்களைப் படைத்தனர். இவர்கள் இருவருமே திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில் வாழ்ந்து வந்தனர். அருட்திரு ஜார்ஜ் மாத்தன் அவர்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர் என்ற குறிப்பு கிடைக்காத காரணத்தாலும் மிஷனரியாக விளங்கியதாலும் இவர் வெளிநாட்டிலிருந்து வந்தவராக இருக்கலாம் எனக் கருதி இவரது இலக்கணம் மேலை நாட்டறிஞர்களின் இலக்கணங்களோடு சேர்க்கப்பட்டுள்ளது. மாத்தன் அவர்கள் கூறும்போது தன்னை "நாட்டுப் பாதிரி" என்றும் கூறியுள்ளார். குண்டர்டின் நூற்பட்டியலில் காணப்படும் "வியாகரண ப்ரவேஷம்" என்னும் நூலில் ஒன்றுமே தெளிவில்லை. ஒருவேளை இது வடமொழி கல்விக்காக எழுதப்பட்டதாக இருக்கலாம். ஆனால், ஐரோப்பிய மிஷனெரிகள் இந்த வகையில் பல நூல்கள் இயற்றியுள்ளனர். அவை மேற்கத்திய மிஷனரிகளுக்குப் பயனுள்ளவையாகக் காணப்பட்டனவேயன்றி மலையாள மொழிக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. கேரளத்தில் வாராபுழை மிஷனரி மையத்தில் டாக்டர் அஞ்சலோஸ் பிரான்சிஸ் என்பவர் எழுதிய நூல் மிகப் பழமை வாய்ந்தனவாகும். பவுலினஸ் என்னும் பங்கு தந்தை இது குறித்துக் கூறும்போது இந்நூல் பேச்சு வழக்குக்கு மாத்திரம் பயன்படுவதாகவும் வடமொழி கலப்போடு கூடிய எழுத்து மொழிக்கு ஒரு சிறிதும பயனில்லையெனவும் குறிப்பிடுகின்றார். இந்நூலின் ஒவ்வொரு பிரதி உரோம் நாட்டிலுள்ள வாடிகன் நூலகத்திலும் கார்டினல் போர்ஜியா நூலகத்திலும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய போலிஷ் மிஷனரி அர்னாஸ் பாதிரி கேரளாவில் 1699 முதல் 1732 வரை வாழ்ந்து வந்ததாகவும் அவர் மலையாள மொழிக்கு ஒரு இலக்கணம் போர்த்துக்கீசிய மொழியில்

எழுதியதாகவும் கூறப்படுகிறது. அவர் எழுதிய இலக்கணத்தின் பெயர் "Arte Malavar" (Art of Malabar) என்பதாகும். இந்நூல் 1993-ஆம் ஆண்டு மலையாள மொழியில் விரிவான முகவுரையுடன் கோட்டயத்திலுள்ள சங்கனாச்சேரியில் St. Joseph's Book Stall - இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 1713-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக கருதபபடுகிறது. பவுலினஸ்சும், பேரஸ் மூப்பனும் பிஷப் இல்டாபன்ஸ்சும் மலையாள மொழிக்கு இலக்கணம் எழுதி உள்ளதாக நம்பப்படுகிறது. இல்டாபன்ஸ் எழுதிய இலக்கணம் மட்டும் உரோம் நகரிலுள்ள போர்ஜிய நூலகத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. மற்ற இருவரின் இலக்கணங்கள் பற்றிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை (எழுத்தச்சன் 1975 :3).

1749-இல் ஆங்கிலேயராகிய இராபர்ட் ட்ருமண்ட் என்பவர், 'Grammar of Malayalam Language' என்னும் நூலை இயற்றினார். வேறொரு ஆங்கிலேயராகிய ஸ்பிரிங் என்பவர் ஐரோப்பியர்களின் பயன்பாட்டிற்காக 1839-ஆம் ஆண்டில் 'Outlines of a Grammar of the Malayalam Languge' என்ற இலக்கணத்தை எழுதி கிழக்கிந்திய கம்பனி அதிகாரிகளுக்கு உதவி புரிந்தார். மேலே கூறப்பட்ட எல்லா இலக்கணங்களும் இலத்தீன், போர்த்துக்கீசு மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. அருட்திரு ஜோஸப் பீட் என்பவர் 1841-இல் 'A Grammar of the Malayalam Language' என்ற இலக்கணத்தை எழுதி தாய்மொழிப் பேசுபவர்களுக்குத் தைரியத்தை ஊட்டும் வகையிலும், தாய்மொழி அல்லாதவர்களுக்கு அம்மொழியைப் பயில உதவும் வகையிலும் உதவி புரிந்தார்.

மலையாள மொழிக்கு முதன் முறையாக ஒரு முழுமையான இலக்கணம் எழுதிய பெருமை டாக்டர் குண்டர்ட் அவர்களைச் சாரும். குண்டர்ட 1851-இல் அறிவியல் ரீதியில் "மலையாளபாஷா வியாகரணம் தொகுதி -1" என்னும் இலக்கணத்தை எழுதி 1868-இல் முதன் முதலாக வெளியிட்டார். அதன் புதிய வெளியீடு 1962-ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது. குண்டாடின "First Catechism of Malayalam Grammar" 1869-இல் வெளிவந்தது. மலையாள இலக்கணத்தின் கலைச்சொற்களும் அணுகுமுறையும பெரும்பாலும் வடமொழி இலக்கணமாகிய பாணினீயத்திலிருந்து எடுக்கப்பட்டதாகவும் ஒரு சில பகுதிகள் தமிழ் இலக்கணமாகிய நன்னூலிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் குண்டர்ட் கூறுகிறார். கார்த்வெயிட் [Garth Waite] என்பவர் 1877-இல் "The essence of Malayalam Grammar Derived from the sentence" அல்லது

"மலையாள பாஷா வியாகரண ஸங்கிரஹம்" என்ற நூலை வெளியிட்டார்.

வெளிநாட்டினர் மலையாள மொழிக்கு இலக்கணங்கள் எழுதியது போன்றே சொந்த மண்ணில் பிறந்த அறிஞர் பெருமக்களும் தங்களது மொழிக்கு இலக்கணம் எழுதத் தொடங்கினர். அருட்திரு ஜார்ஜ் மாத்தன் என்பவருடைய இலக்கணமாகிய மலயாழ்மயுடெ வியாகரணம் 1863–ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன் கையெழுத்துப் பிரதி 1852–இல் தயாராகிவிட்டது. இந்நூல் 1969-இல் கோட்டயத்தில் மறுபதிப்பு செய்யப்பட்டது. மாத்தன் என்பவர் வடமொழியைச் சார்ந்தே தனது இலக்கணத்தைப் படைத்துள்ளார். பாச்சு மூத்தது என்பவரின் "கேரள பாஷயுடெ வியாகரணம்" 1876–இல் தோன்றியது. கோவுண்ணி நெடுங்காடி "கேரள கௌமுதி" என்னும் இலக்கணத்தை 1878–ஆம் ஆண்டில் வெளியிட்டார். இது வடமொழி இலக்கணப் பகுதியையும் மலையாளம், தமிழ், வடமொழி யாப்பமைதியையும் கொண்டு காணப்படுகிறது.

சிரியன் கத்தோலிக்க பாதிரி ஒருவர் வெளியிட்ட "அலங்கார சாஸ்த்ர வியாகரணம்" என்னும் இலக்கணம் 1881–ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. 1890–இல் பனம் பரணி ராமன் என்பவர் "A Manual of Malayalam Grammar" என்னும் இலக்கணத்தை வெளியிட்டார். எ.ஆர். ராஜராஜவர்மாவின் புகழ் பெற்ற இலக்கணமாகிய கேரள பாணினீயம் 1896–இல் வெளிவந்தது. 1917–இல் மறுபதிப்பு வெளியானது. அவர் மேலும் தொடக்கக் கல்வி. நடுநிலை, உய ,நிலைக் கல்வி மாணவர்களுக்கு முறையே பயன்படத் தக்க விதத்தில் "பாலவியாகரணம்", "மத்யம வியாகரணம்", "ஸப்தஸோதினி" போன்ற இலக்கணங்களை வெளியிட்டார். ஃப்ரோன்மேயரின் புகழ் பெற்றதும் மிகவும் பயனுள்ளதுமான 'A Progressive Grammar of Malayalam For Europeans' என்னும் இலக்கண நூல் 1889–ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன் மறு பதிப்பு 1913–இல் வெளியிடப்பட்டது. எம். சேஷகிரி பிரபு என்பவரும் எம். கிருஷ்ணன் என்பவரும் இணைந்து "வியாகரணமித்ரம்" என்ற இலக்கண நூலை 1904–ஆம் ஆண்டில் வெளியிட்டனர். அதன் இரண்டாம் பதிப்பு 1908–ஆம் ஆண்டில் வெளி வந்தது. அதன் மூன்றாம் பதிப்பை சேஷகிரி பிரபு என்பவர் மட்டும் கோழி கோட்டில் 1919-ஆம் ஆண்டில் வெளிக் கொணர்ந்தார்.

19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பல்வேறு நூல்கள் வெளி வந்தன. குஞ்ஞிகுட்டி என்பவர் 1886–இல் 'பாலபோதினி' என்ற இலக்கணத்தையும் எம். கிருஷ்ணன் என்பவர் 1898–இல் 'பாலவியாகரணம்' என்னும் இலக்கணத்தையும் வெளியிட்டனர். இதன், இரண்டாம் பதிப்பு 1908–ஆம் ஆண்டில் வெளி வந்தது. என். கேலப்பன் என்பவர் 1901–இல் தொடக்கப்பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்குரிய இலக்கணம் படைத்தார்.

1920–ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு இலக்கணப்பாடப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆனால், மக்களின் பயன்பாட்டிற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கணங்கள் மட்டுமே மிகுந்த செல்வாக்கைப் பெற்றன.

1. ஏ.ஆர். ராஜராஜவர்மா : அ. "கேரள பாணினீயம்"
   ஆ. "ஸப்தஸோதினி"
2. கோவுண்ணி நெடுங்காடி : "கேரள கௌமுதி"
3. சேஷகிரி பிரபு : "வியாகரணமித்ரம்"

குண்டர்டின் இலக்கணம் முழுமை பெற்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும் ஒரு இலக்கணமாக மிளிர்கிறது. அருட்திரு ஜார்ஜ் மாத்தன் என்பவரின் மலயாழ்மயுடெ வியாகரணம் அண்மை காலம் வரை அறிஞர் பெருமக்களுக்குத் தெரியாமலே இருந்தது. உண்மையிலே இவற்றிற்கெல்லாம் காரணம் எ.ஆர். ராஜராஜவர்மாவின் கேரள பாணினீயம் என்ற இலக்கண நூல் மற்ற எல்லா இலக்கணங்களையும் மலையாள இலக்கண உலகிலிருந்து மூடி மறைத்து விட்டதேயாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கண நூல்கள் அடுத்துவரும் இயல்களில் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

1. லீலாதிலகம்
2. குண்டர்ட் : மலையாள பாஷா வியாகரணம்
3. பாச்சு மூத்தது : கேரள பாஷா வியாகரணம்

4. கோவுண்ணி நெடுங்காடி: கேரள கௌமுதி

5. சேஷகிரி பிரபு : வியாகரணமித்ரம்

6. ஏ.ஆர். ராஜராஜவர்மா : கேரள பாணினீயம்

*இப்பகுதியில் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐரோப்பிய இலக்கண ஆசிரியர்கள் எழுதியுள்ள மலையாள இலக்கணங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை மிகப் பெரிய அளவில் கோட்பாடுகளைக் கொண்டு விளங்கவில்லையெனினும் அவற்றின் பயன்பாடும் மலையாள இலக்கண உலகிற்கு மிகவும் தேவைப்படுகின்றன.*

1. இராபர்ட் ட்ரூமண்ட் : Grammar of the Malabar Language

2. எப். ஸ்பிரிங் : Outlines of a Grammar of the Malayalam Langauge

3. ஜோஸப் பீட் : A Grammar of the Malayalam Language

4. ஜார்ஜ் மாத்தன் : மலயாழ்மயுடெ வியாகரணம்

5. கார்த்வெயிட் : மலையாள பாஷா வியாகரண சம்கிரஹம்

6. எல்.ஜே. ஃப்ரோன் மேயர்: A Progressive Grammar of Malayalam for Europeans

7. லத்தீன் மொழியில் எழுதப்பட்ட மலையாள இலக்கணங்கள்

*ஃப்ரொன்மேயர் எழுதிய நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாக இருப்பினும் இரு காரணங்களுக்காக இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலாவது காரணம், இது ஒரு அரிய நூலாகும். இரண்டாவது இதில் பல அரிய கருத்துக்கள் மலையாளிகளுக்கே தெரியாத செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. இதனுடைய ஒப்பீட்டு முறை ஏற்றம் பெற்றதாக விளங்குகிறது. இப்பகுதியில் "மத்யம வியாகரணம்" மற்றும் "ஸப்த ஸோதினி" ஆகிய இலக்கணங்களின் சிறுகுறிப்புகளும் தரப்பட்டுள்ளன.*

மேற்குறிப்பிட்ட இலக்கணங்களில் லீலாதிலகம் மரபு வழி இலக்கணமாகும். தற்கால இலக்கணங்களாகிய கேரள கௌமுதி, கேரள பாஷா வியாகரணம், கேரள பாணினீயம், வியாகரணமித்ரம் ஆகியன வடமொழித்தழுவி எழுதப்பட்டனவாகும். வியாகரணமித்ரம் என்பது ஐரோப்பியக் கருத்துக்களையும், நடைமுறைகளையும் பின்பற்றிக் காணப்படுகின்றது. அருட்திரு மாத்தனின் மலயாழ்மயுடெ வியாகரணத்தின் அணுகுமுறை இயற்கையான ஒன்றாகும். அவருடைய கலைச் சொற்கள் வித்தியாசமானவைகளாக மேலைநாட்டு மரபை அடியொற்றி காணப்படுகின்றன.

ஒருநூலை எழுதும் போது அதற்குக் கொடுக்கப்படும் துணை ஆதாரங்களைக் கொண்டு அந்த நூல் ஒரு முழுமை பெற்ற நூலாகக் கருதப்படும். எனவே, லீலாதிலக இலக்கண ஆய்விலும் அதன் முதல் பகுதியாகிய மணிப்பிரவாளம் சுருக்கமாக இவ்வாய்வில் தரப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட இலக்கணங்களின் முழு ஆய்வும் ஆராயப்படும்போது நாம் அவற்றின் தன்மைகளையும் பயன்பாட்டையும் மலையாள இலக்கண உலகில் காண்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

# லீலாதிலகம்

சங்க காலந்தொட்டு கி.பி. 8 -ஆம் நூற்றாண்டுவரை கேரளத்தில் உலக வழக்கு மொழியும் செய்யுள் வழக்கு மொழியும் தமிழாகவே இருந்து வந்ததாகப் பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை ஸாகித்ய சரித்ர ஸங்க்ரஹம் என்ற நூலில் பக்கம் 9-இல் கூறியுள்ளார். பல்வேறு தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் இக்காலகட்டங்களில் இங்குத் தோன்றியுள்ளன. ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்கள் கேரளத்தில் தோன்றியுள்ள இலக்கியங்களாகும். தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகியன தமிழ் இலக்கணங்களாகும். இவ்வாறு பெருமளவில் வழங்கப்பட்டு வந்த தமிழ் வழக்கு மொழி வடமொழிக் கலப்பால் மெல்ல மெல்ல தனது செல்வாக்கை இழந்தது. இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை மேற்படி நூலில் பக்கம் 20-ல் மேலும் குறிப்பிடுகையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரும் பல்வேறு நாடோடிப் பாடல்களாகிய தீயாட்டுப் பாட்டுகள், சர்ப்பப் பாட்டுகள், சாற்றுப்பாட்டுகள் ஆகியன கேரளத்தில் பெருவழக்கில் இருந்து வந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

பெருமளவில் வடமொழிக் கலப்பால் கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மலையாள மொழிநடை முழுவதுமாக மாறி மணிப்பிரவாள நடைதோன்றிய வேளையிலும் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இராமச்சரித காப்பியத்திலும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கிருஷ்ணகாதை, பாரதமாலை, கண்ணச ராமாயணம் போன்ற காவியங்களிலும் தமிழ் மரபு கடைபிடிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இராமசரிதத்தில் இந்நூல் தமிழ் நூல் என்றே சுட்டப்பட்டிருப்பதைக் காணலாம். பண்டைய தமிழ் எழுத்துக்களாகிய வட்டெழுத்துக்கள் கி.பி.9-ஆம் நூற்றாண்டுவரை பழக்கத்தில் இருந்து வந்த நிலை மாறி வட்டெழுத்துக்களுக்குப் பதில் ஆரிய எழுத்துக்கள் பயன்பாட்டில் வரத் தொடங்கின. மணிப்பிரவாள இலக்கியங்கள்

கி.பி.12 -ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டன. உண்ணுநீலி சந்தேசம், உண்ணியச்சி சரிதம், வைசிக தந்திரம், உண்ணிச்சிரிதேவி சரிதம், அனந்தபுர வர்ண்ணம் ஆகிய இலக்கியங்கள் லீலா திலகத்திற்கு முன்னர் தோன்றிய மணிப்பிரவாள இலக்கியங்களாகும். மேற்கூறப்பட்ட இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே அவற்றிற்கு ஒரு இலக்கணம் எழுதப்பட வேண்டும் என்ற முயற்சியில் உருவானதே கி.பி.14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மலையான மொழியின் முதல் இலக்கணமாகிய லீலாதிலகம் என்பதாகும்.

மலையாள மொழிக்கு லீலாதிலக இலக்கண நூலுக்குப் பிறகு ஐரோப்பியர்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் எழுதியுள்ள இலக்கணங்களே கிடைக்கின்றன. அவற்றில் பெரும்பாலான இலக்கணங்களும் ஐரோப்பிய மொழியிலே ஐரோப்பியர்களுக்காக எழுதப்பட்டவையாகும். கி.பி. 19 -ஆம் நூற்றாண்டிலும் ஐரோப்பியர்கள் இலக்கணங்கள் எழுதியுள்ளனர் என எழுத்தச்சன் (1975:5) கூறுகிறார். மலையாள பாஷாவியாகரணம் என்ற நூலின் முதற்பகுதி 1851-இல் ஹெர்மன் குண்டர்ட் (1814 -1893) என்னும் அறிஞராலும் முழுப்பகுதியை 1865இல் இதே ஆசிரியராலும் வெளியிடப்பட்டது. இந்நூல் அறிவியல் பூர்வமாக அமைந்த ஓர் இலக்கண நூல் என்று எல்லோராலும் பாராட்டப்படுகிறது என எழுத்தச்சன் (1975 -43) கூறுகிறார். இந்நூலின் பெரும்பகுதி மலையாளத்திலும் ஆங்காங்கே சில இடங்களில் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. எனவே, எழுத்தச்சன் (1979:31) கூறும்போது இந்நூல் ஆங்கிலம் தெரிந்த மலையாள அறிஞர்களுக்கு மட்டுமே பயன்படக்கூடிய நூல் என்று கூறுகிறார்.

மலையாள மொழியிலேயே மலையாள அறிஞரால் எழுதப்பட்ட முதல இலக்கணநூல் என்ற பெருமையைப் பெறுவது ராஜராஜவர்மாவின் கேரள பாணினீயம் என்ற இலக்கணமே. இதன் முதல் பதிப்பு 1896லும் திருந்திய விரிவுப்படுத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1916லும் வெளிவந்தது. இதுவே, மலையாள மொழியின் சிறந்த இலக்கணமாக இன்றும் போற்றப்பட்டு எல்லோராலும் படிக்கப்பட்டு, கல்லூரிகளிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

லீலாதிலகம், மலையாள மொழியிலக்கணம் (மலையாள பாஷா வியாகரணம்), கேரள பாணினீயம் ஆகிய மூன்றும் மலையாள மொழி இலக்கணங்களில் தனிச் சிறப்புடையவையாக இன்றும் கருதப்படுகின்றன.

மலையாள மொழியின் முதல் இலக்கண நூலாகிய லீலாதிலகம் ஒரு முழுமை பெற்ற இலக்கண நூலாகாது என வாரியார் (1979 : 2) கூறுகிறார்.

## லீலாதிலகத்தின் காலம்

பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை குறிப்பிடும்போது இந்நூல் கி.பி.1385-க்கும் 1400-க்கும் இடைப்பட்ட காலமாகும் என (1962:15 -19) குறிப்பிடுகிறார். இந்நூல் 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட போதிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் கண்டுபிடிக்கப்பட்டு பதிக்கப்பட்டது.

மலையாள இலக்கணத்தின் தந்தை என்று போற்றப்படும் குண்டர்ட்டும், திராவிட மொழி ஒப்பிலக்கணத்தின் தந்தையாகிய கால்டுவெல்லும் இந்நூலைக் குறித்து அறிந்திருக்கவில்லை என்றுதான் தெரிகிறது. அறிந்திருந்தால் தங்களது நூலில் லீலாதிலகத்தை மேற்கோள் காட்டியிருப்பார்களே. எனவே, கேரள பாணினீயத்தை எழுதிய ராஜராஜவர்மா கூட 1916இல் இந்நூலைக் கையெழுத்துப் பிரதியிலேயே படித்ததாகக் குறிப்பிடுகிறார்.

> **"இந்த விலைமிகுந்த நூல் இதுவரை வெளியிடப்படாததில் அதிசயம் தோன்றுகிறது** (ப.61 )

என்ற அவரது கூற்றால் நாம் இந்த உண்மையை உணர்ந்துகொள்ள முடியும். எனவே, மறைந்து கிடந்த லீலாதிலகம் கடந்த ஒரு நூற்றாண்டுகளாகவே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு படிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டு வருகிறது எனலாம்.

1909 -10 இல் அப்பன் தம்பிரான் என்பவர் மங்களோதயம் என்னும் பத்திரிக்கையில் லீலா திலகத்தின் முதல் பகுதியை முதன்முதலில் வெளிப்படுத்தினார். 1917-இல் ஆத்தூர் பிஷராடி நூல் முழுமையும் மலையாளமொழி பெயர்ப்போடு வெளியிட்டார். இதன்பின் இந்நூலைப் பல அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். எல்லா வெளியீடுகளிலும் மிகவும் சிறந்தது எனக் கருதப்படுவது 1955-ஆம் ஆண்டில் பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை மலையாள மொழி பெயர்ப்பில் விரிவான ஆராய்ச்சிக் குறிப்புகளோடு வெளியிட்ட வெளியீடேயாகும். இதில் பலப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. இவரது மலையாள மொழி பெயர்ப்பைத் தழுவி இளையபெருமாள் 1971-இல் லீலாதிலகத்தைத் தமிழில் வெளியிட்டார். இந்நூல் விரிவான

முன்னுரையோடும் தமிழ் இலக்கண இலக்கிய ஒப்புமை பற்றிய அடிகுறிப்புகளோடும் அமைந்துள்ளன.

இந்நூல் கி.பி. 1350-க்குப் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகளை இந்நூலின் வாயிலாகவே கண்டுகொள்ள முடியும். கி.பி.1350 முதல் 1375 வரை ஆண்ட ஆதித்தவர்மனைக் குறிப்பிடும் உண்ணுநீலி சந்தேசப்பாடல், கி.பி. 1357-க்குப் பின் வேதாந்த தேசிகர் இயற்றிய வைராக்கிய பஞ்சகத்திலிருந்து அமைந்த மேற்கோள், கி.பி.1365-இல் விக்கிரம பாண்டியன் துருக்கியர்களை வென்ற செய்தி, சமுத்திர பந்தர் எழுதிய அலங்கார ஸர்வஸ்வ வியாக்யானம் (14ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) அனந்தபுர வர்ணணம் (14ஆம் நூற்றாண்டின் பிறபகுதி), செறியச்சீ சரிதம் (14ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி) முதலிய நூற்களிலிருந்து கருத்துக்களும், பாடல்களும் இந்நூலில் எடுத்தாளப்பட்டிருப்பதின் வாயிலாக லீலா திலகம் கி.பி. 1350-க்குப் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று உணர்ந்துகொள்ள முடிகிறது.

## லீலாதிலக ஆசிரியர்

லீலாதிலக இலக்கண நூலையும் அதன் மிகச் சிறந்த உரையையும் இயற்றிய ஆசிரியர் ஒருவரேயாவார். அவர் யார் என்பது குறித்தோ எந்த ஊரைச் சார்ந்தவர் என்பது குறித்தோ ஒன்றும் தெரியவில்லை. ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கும் பாடல்களில் திருவனந்தபுரம் முதல் பேராறு வரையுள்ள பல இடங்கள் குறிப்பிடப்படுகின்றன. அத்துடன் வேணாட்டு மார்த்தாண்ட வர்மா, திருப்பாப்பூர் இரவிவர்மா, விக்கிரம பாண்டியன் முதலிய அரசர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. எனவே, இம்மன்னர்களின் ஆதரவில் இந்நூலாசிரியர் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் திராவிட மொழிகளாகிய தமிழ், கன்னடம், ஆகியவற்றிலும் ஆரிய மொழிகளாகிய சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகியவற்றிலும் பெரும் புலமை பெற்றவராக விளங்கி இருக்கிறார என்பதனை அவர் தனது நூலில் மேற்கோள் காட்டியிருக்கும் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இவரது வடமொழி அணி இலக்கணப்புலமை பற்றிப் பாரதத்தின் தலை சிறந்த அணி இலக்கண ஆசிரியர்களிலொருவர் என்று இநநூலாசிரியரைப் பேராசிரியர் இளங்குளம் குஞ்ஞும் பிள்ளை பாராட்டுகின்றார்.

இந்நூலாசிரியர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் பெரும் புலமை பெற்றிருந்தார் என்பதற்கு இந்நூலில் பல சான்றுகள் காணப்படுகின்றன. தொல்காப்பிய இலக்கண நூற்பாவாகிய (தொல்,எழுத்து. 81)

"வகரக் கிளவி நான் மொழி ஈற்றது"

என்பதனை இந்நூலில் பக்கம் 81-லும், பக்கம் 95-இல் தொல்காப்பிய மற்றும் நன்னூல் விதிகளில் சுட்டப்பட்டுள்ளன. தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளைப் பக்கம் 21-இல் சுட்டுகிறார். நூலாசிரியருக்குத் தமிழறிவு இருந்தது போலக் கன்னடப் புலமையும் இருந்ததை நிருபதுங்கரின் கவிராஜ மார்க்கம் நாகவர்மரின் காவியாவலோகனம் முதலியவற்றைப் பின்பற்றி இலக்கணம் அமைப்பதிலிருந்து புலனாகிறது. இந்நூலாசிரியருக்கு மொழியியல் ஆய்வுத் திறனும் தருக்க நெறியும் வியக்கத்தக்க வகையில் காணப்படுகின்றன. இவர் ஒரு பன்மொழிப் புலவராக விளங்கினார். தனது நூலிலும் பன்மொழிகளைப் பற்றி கூறியுள்ளார். மேலும் அம்மொழிகளுக்கிடையேயுள்ள உறவுகளையும் புலப்படுத்தியுள்ளார். ஒப்பிலக்கணம் லீலாதிலக ஆசிரியர் காலத்திலேயே தோன்றிவிட்டது எனலாம். இவரது இலக்கணம் மீட்டுருவாக்கத்திற்கும் வழிவகை செய்துள்ளது.

## லீலாதிலகம் குறித்து அறிஞர்கள் கருத்து

மலையாள அறிஞர்கள் பலரும் லீலாதிலக ஆசிரியர் தமிழ்மொழி இலக்கணத் தாக்கத்தால் கட்டுண்டு அவ்வறிவையும் அவ்விலக்கணப் பண்பையும் மலையாளமொழிக்கு ஏற்றியுள்ளார் என்றும் குறை கூறுகின்றனர். இக்குறையை நன்கு ஆராய்ந்த சண்முகம் பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக் காட்டி அவை மலையாள மொழியிலேயே (ஒடு போன்ற வேற்றுமை உருபுகள்) உள்ளன என்பதைத் தெளிவுப்படுத்தி இருப்பது பாராட்டுணர்வோடு நிறையுணர்வையும் காட்டுவதாக உள்ளது.

இலக்கண நூல்களை எழுதுவோருக்கு மொழியின் அமைப்பை விளக்குவதே பொதுவான குறிக்கோளாக இருக்கும். ஆனால், லீலாதிலக ஆசிரியரின் முக்கிய குறிக்கோள் தமிழ்மொழி வேறு மலையாள மொழி வேறு என நிலைநாட்டுவதேயாகும். கி.பி. 14ஆம் நூற்றாண்டுப் பகுதியில் மலையாளமொழி தனி மொழிக்கானத் தனிப்

பண்புகளைப் பெற்று வருகிற நிலையில் அதனை நிறுவுவதே தனது குறிக்கோளாகக் கொண்டு லீலாதிலகத்தை ஆக்கியுள்ளார் எனவும் அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர்.

புதிய மொழிக்கூறுகள் உருவாகும்போது சில இடங்களில் சில வழக்குகளில் பழைய கூறுகளும் காணக்கிடக்கும். லீலாதிலகத்தின் நோக்கமெல்லாம் புதிய கூறுகளைத் தந்து மலையாளம் ஒரு புதிய மொழியாக உருவாகத் தொடங்கியுள்ளது என நிலைநாட்டுவதேயாகும். இதனால் தான் ஆசிரியர் இரண்டாம் வேற்றுமை உருபாக எகரத்தைக் குறிப்பிடுகின்றார். ஐகாரம் ஆங்காங்கே காணப்பட்டாலும் அதைக் குறிப்பது அவரது நோக்கமன்று. சில இடங்களில் இப்பண்பை அவர் முழுமையாகப் போற்றாவிடினும் அவருடைய நோக்கமெல்லாம் 'இதோ ஒரு புதுமொழி' இதன் பண்புகள் இன்னின்ன எனக் கூறுவதுதான் என நிச்சயமாகக் கருதலாம்.

கேரள பாணினீய ஆசிரியரான ராஜராஜவர்மா (1917:61) லீலாதிலகத்தைப் பாராட்டுணர்வோடு கூறியிருப்பதைக் காணலாம்.

> **"லீலாதிலகம் கிடைத்ததோடு சமீபகாலம் வரை மலையாளம் யாதொரு விதியும் இல்லாத இழிமொழியாய் இருந்தது என்றும் மலையாளத்திற்கு முதன் முதலில் இலக்கணம் இயற்றுதற்கு ஒரு ஐரோப்பிய புலவரே அமைந்தார் என்றும், ஏற்பட்டிருந்த இகழ்ச்சியும் மொழிப்பற்றின்மையும் நீங்கின அல்லவா என்று மகிழ்ச்சி கொள்ளலாம்."**

மலையாள மொழிக்கு எந்த இலக்கணவிதியும் இல்லாமல் இருந்ததை இழிமொழி என்று கூறுகிறார். மொழிப் பற்றின்மையும் மலையாள மொழியின் இழி நிலையும் லீலாதிலக இலக்கணம் வெளிவந்ததோடு மாறிவிட்டது எனப் பாராட்டுவதைக் காணமுடிகின்றது. ராஜராஜவர்மா (1917:55) லீலாதிலக ஆசிரியர் பற்றிக்கூறும்போது,

> **"லீலாதிலகம் எழுதியவர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஒத்த புலமை பெற்ற ஒரு அறிஞர் என்று ஐயத்திற்கு இடமின்றிக் கூறலாம்."**

எனக் கூறுகிறார். நூல் உருவான முறை பற்றிக் கூறும்போது

> **"காசிகா விருத்தி, காவியப்பிரகாசம் முதலிய சமஸ்கிருத நூல்களைப் பின்பற்றி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. காசிகா**

> விருத்தி முதலியவற்றிலுள்ளது போன்று லீலாதிலக ஆசிரியரும் சில நூற்பாக்களுக்கு
> உரை எழுதி எடுத்துக் காட்டுகள் காட்டுவதோடு
> அவற்றைத் தொடர்ந்து சில ஆய்வுகளைத் தானே
> செய்கிறார். நூற்பாக்கள் அவரது படைப்புகள்
> அல்ல. முன்னரே உள்ளவை என்று கூறவேண்டும்."

எனக் கூறுகிறார். மேலும் லீலாதிலகம் வடமொழியில் எழுதப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் ராஜராஜவர்மா (1917:61) கூறுவதைக் காணலாம்.

> "நூற்பாக்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டனவே என்று அதிசயப்படுவதற்கு இல்லை. தெலுங்கிலும் முதலில் எழுந்த இலக்கணமும் சமஸ்கிருத நூற்பா வடிவத்திலே அமைந்தது"

என உலகப் பொதுமையை ஏற்றுக் கொள்வதை இந்நூற்பா விளக்குகிறது. லீலாதிலகம் தமிழ் மற்றும் தெலுங்கு இலக்கணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது என்பதைக் குறித்து ராஜராஜவர்மா (1917:61) பின்வருமாறு கூறுகிறார்.

> தமிழிலே நன்னூலையும் தெலுங்கிலே ஆந்திர சப்த சிந்தா மணியையும் பார்த்து அவற்றின் முறையில் அன்று மணிப்பிரவாளம் என்று கூறப்பட்ட மலையாளத்திற்கு ஒரு இலக்கணமாக லீலாதிலகம் எழுதப்பட்டிருக்க வேண்டும்."

வேலாயுதன் பிள்ளை (1966:33) கூறும்போது லீலாதிலக ஆசிரியர் தன் செந்தமிழ் இலக்கண அறிவைக் கேரளபாஷா இலக்கணத்தின் மேல் ஏற்றித் திருப்தி அடைந்துவிட்டார் எனக் கூறுகிறார்.

லீலாதிலகம் பழைய வழக்குகளைத் தகு வழக்குகளாகத் தேர்ந்து எடுத்துவிட்டார் என்றும் தகுமொழி வழக்குத் தேர்வில் குற்றம் ஏற்பட்டுவிட்டது என்றும் கூறுவதே பொருத்தமாக இருக்குமே தவிரத் தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றிவிட்டார் என்பது பொருந்தாது எனச் சண்முகம் (1992,71) குறிப்பிடுகின்றார். மலையாள வழக்குகள் இருக்குமாயின் அது தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றியதல்ல.

*-ஒடு மூன்றாம் வேற்றுமை உருபாகக் கூறப்பட்டிருப்பது தொல்காப்பியச் செல்வாக்காகும் எனப் பிரபாகரவாரியார் (1978:145) கூறுகிறார். உண்ணுநீலி சந்தேசத்திலும் (சுகுமாரப்பிள்ளை 1985:76) கிருஷ்ண கதாவிலும் (பிரபோதசந்திரன் நாயர், 1977 தன்னொடு போன்ற எடுத்துக்காட்டுகள்) -ஒடு மூன்றாம் வேற்றுமை உருபாக வந்துள்ளதைச் சுட்டிக்காட்டி லீலாதிலகம் தமிழ் மொழியைப் பின்பற்றி இலக்கணம் இயற்றியுள்ளது எனக் கூறுகின்றனர். அதுபோன்றே று,டு என்பனவற்றின் உகரத்தின் மேல் உயிர்வரின் உகரம் கெடுவதோடு றகர, டகரங்கள் இரட்டிக்கும் என்ற நன்னூல் நூற்பா 42ஐ பின்பற்றியதாகும் என இளங்குளம் குஞ்ஞுன் பிள்ளை கூறுவதாக வாசுதேவ பட்டத்திரி (1978:108) கூறுகிறார்.*

*எ.கா.* **ஆறு - ஆற்று கிருஷ்ணகாதா**

**நூறு - நூற்று கிருஷ்ணகாதா**

*போன்றன பழைய மலையாள இலக்கியத்தில் வருகின்றன.*

*அதுபோன்றே லீலாதிலக நூற்பாக்கள் 50,51,52 ஆகிய மூன்றும் தொல்காப்பிய நூற்பாக்களின் மொழி பெயர்ப்பு என்றும் எடுத்துக்காட்டுகள் தொல்காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்றும் வாசுதேவ பட்டத்திரி (1978 : 182) யின் கருத்தாகும்.*

வெண் + நீறு > **வெண்ணீறு**

**பழைய உரைநடை நூல்கள்**

தண் + நீர் > **தண்ணீர்**

**(வேலாயுதன் பிள்ளை 1973:78)**

உள் + நாடி > **உண்ணாடி**

**கிருஷ்ணகாதா**

தண் + நீர் > **தண்ணீர்**

**(பிரபோதச் சந்திரன்நாயர் 1973:41)**

விண் + தலம் > **விண்டலம் (சுகுமாரப்பிள்ளை1985:69)**

*இவை பழைய மலையாளத்தில் வரும் சந்தி விதிகள்.*

இவை அருகிய வழக்காகித் தகுமொழி மலையாளத்தில் (Standard Malayalam) பயன்படுத்தப்படவில்லை என்பது வேறு விஷயம் என்றும் இலக்கண உருவாக்க நோக்கத்தில் அரிய வழக்குகளாய்ப் பிற்காலத்தில் தகுமொழி வழக்குகளாக ஏற்றுக் கொள்ளப்படாதவைகளைத் தேர்ந்து எடுத்து விட்டார் என்று தரவுத் தேர்வைக் (Selection of Data) குறை கூறுவதே பொருந்தும் எனச் சண்முகம் (1992:72) கூறுகிறார்.

வாசுதேவப் பட்டத்திரி (1978:17) கூறும்போது லீலாதிலகம் தொல்காப்பியத்தைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றியுள்ளது என்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் இராமஸ்வாமி அய்யர் (1994:74) தமிழ்ச் சந்திகளோடு ஒத்த மலையாளச் சந்தி விதிகள் குறித்த விளக்கமாக இருக்கலாம். பழைய மலையாள இலக்கிய வழக்குகளைக் கருத்தில் கொண்டே இலக்கணம் எழுதி இருக்கவேண்டும் என்பது சண்முகம்(1992:70) கருத்து.

ராமஸ்வாமி அய்யர் லீலாதிலகம் குறித்துக்கூறும்போது அதனைப் பாராட்டியே தனது லீலாதிலகத்தில் இலக்கணம் (1944) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

> **“லீலாதிலகம் மணிப்பிரவாள இலக்கியத்தின் இலக்கணத்தை விளக்குவதை முக்கியமாகக் கொண்டதால் மலையாள மொழி அமைப்பை விரிவாக விளக்குவதை எதிர்பார்க்கமுடியாது; பல முக்கிய கருத்துக்கள் விடப்பட்டுள்ளன; செம்மையாக விளக்கப்படவில்லை; இருந்தாலும் மலையாள மொழியியலுக்கு அந்த நூலின் முக்கியத்துவத்தைக் குறைக்க முடியாது.”**

எனக் கூறுகிறார். மேலும் அவர் தமது முன்னுரையில் குறிப்பிடும்போது

> **“உண்ணியாடி சரிதம் போன்ற மணிப்பிரவாள இலக்கியம், இராமசரிதம் போன்ற பாட்டு இலக்கியம், தூது வாக்கியம், பாஷா கவுடில்யம் போன்ற உரைநடை இலக்கியங்கள் ஆகியவைகளுக்கும் கிருஷ்ண காதாவுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த லீலாதிலகம் மொழி வரலாற்றை முன்னும் பின்னும் பார்ப்பதற்கு உறுதுணையாக இருக்கிறது”**

என்று கூறுகிறார். மேலும் அவர் கூறும்போது,

> **"மொழியியல் உண்மைகளை விரிவாகவும் சில விஷயங்களைப் போதுமானதாகவும் விளக்கா விட்டாலும் மலையாள மொழியின் பரிணாம வளர்ச்சி ஆராய்ச்சியில் ஒப்பற்ற முறையில் சான்றுகளைத் தந்து விளக்குகிறது. அந்த ஆராய்ச்சியில் ஈடுபடுகிறவர்களுக்குப் புதையல் போன்றது"**

*எனப் (1944: 1) பாராட்டுகிறார்.*

*ஜார்ஜ் (1954 :21) கூறும்போது, லீலாதிலகம் பழங்கால மலையாள மொழி வளர்ச்சியை ஆராய்வோருக்குப் புதையல் என்றும் லீலாதிலக ஆசிரியனின் மொழியியல் நுட்பம் பாராட்டத் தகுந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஜார்ஜ் (1968) மேலும் தமது கட்டுரையில் குறிப்பிடும்போது ஒப்பிலக்கண ஆராய்ச்சி தோன்றாத காலத்துக்கு முன்னரே தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவுடைய மொழிகள் என்று கூறியது ஒப்பிலக்கண ஆய்வை வெளிப்படுத்துவனவாக உள்ளன.*

*லீலாதிலகத்தின் சந்தி வருணனையைப் பாராட்டும்போது எழுத்தச்சன் (1957:101) அது நமக்கு மிகவும் பயன்படக்கூடிய ஒரு மதிப்பு மிகக பங்களிப்பாகும் எனக் கூறுகிறார்.*

*பல்வேறு பாராட்டுகளைப் பெற்ற லீலாதிலகம் விமர்சனத்துக்குள் ஆவதையும் காணலாம். லீலாதிலகக்காரருக்கு மலையாள மொழியறிவு கூடச் சரியாகத் தெரியாது எனவும் அவரது இலக்கணம் மேம்போக்கானது எனவும் அவருக்கு மொழியியல் அறிவு கிடையாது என்றெல்லாம் விமர்சிப்பதுண்டு. சண்முகம் (1992:14) கூறும்போது லீலாதிலகம் மலையாள மொழி அமைப்பைச் சரியாக வருணிக்கவில்லை என்ற உண்மை அப்பட்டமாக விளங்குகிறது எனக் கூறுகிறார்.*

*வேலாயுதன் பிள்ளை (1966:13) லீலாதிலகம் மலையாளமொழி அமைப்பை வருணித்தது பொருத்தம் இல்லை என்று பல சான்றுகளைக் காடடுகின்றார்.*

> **"மொழிபற்றிய விளக்கத்தை அடுத்து இலக்கணம் பற்றிப்பேசும்போது லீலாதிலக ஆசிரியரின் கை**

தளர்ச்சி அடைந்ததாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் அவருக்குக் கேரள பாஷையின் அமைப்புப் பற்றிய அறிவு இல்லை என்று யாராவது சொன்னால் அது தவறு இல்லை. ஒவ்வொரு ஒலியையும் தெரிந்துகொண்டு எழுத வேண்டுமானால் அம் மொழியில் தெளிவான அறிவும் இலக்கணப் படைப்பில் தெளிவான அறிவும் வேண்டும். இவை லீலாதிலக ஆசிரியருக்கு இருந்ததாகச் சொல்ல முடியுமா? இங்கே அவர் தன் செந்தமிழ் இலக்கண அறிவைக் கேரள பாஷா இலக்கணத்தின் மேல் வைத்துத் திருப்தி அடைந்துவிட்டார்."

*வேலாயுதன் பிள்ளை (1996 : 39) கூறிய குறையைப் பிரபாகர வாரியார் ஏற்றுக் கொண்டு பின்வருமாறு கூறுகிறார்.*

"லீலாதிலக இலக்கண ஆசிரியனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத பண்பான விமர்சன நோக்கோடு ஆராயும் திறமை, புரிநிலையில் இருந்து செய்திகளை விவரிக்கும் திறமை ஆகியவை கிடையாது. கேரள பாஷாவிலும் ஆழ்ந்த அறிவுடையவராகக் காணப்படவில்லை. வடமொழியும் தமிழும் அறிந்த ஒரு மரபிலக்கணவாதியாகத்தான் தென்படுகிறார். மலையாள இலக்கணத்தை மொழிதரவு அடிப்படையில் விளக்கவில்லை. அவருடைய இலக்கண விதிகளை மலையாள அறிஞர்கள் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. எனவே, பதினான்காம் நூற்றாண்டு மலையாளத்தை அறிந்து கொள்வதற்கு லீலாதிலகத்தை மட்டும் நம்புவது ஆபத்தானது."

*பிரபாகர வாரியாரின் முக்கியமான குற்றச்சாட்டுகள் என்னவென்றால் லீலா திலகத்துக்கு மலையாள மொழி பற்றிய சரியான அறிவு இல்லை என்பதும் மொழியியல் அறிவும் சரியானது இல்லை என்பதும் வடமொழி, தமிழ் இலக்கணங்களைப் பின்பற்றிவிட்டது என்பதும் ஆகும்.*

*இலக்கண விதிகளில் முரண்பாடுக் காணப்படுகிறது எனக் கோபால பிள்ளையும் (1972), லீலாதிலகத்தில் குழப்பமும் தவறும்*

உள்ளன: தமிழ் இலக்கணத்தைக் கண்ணை மூடிக் கொண்டுப் பின்பற்றியுள்ளது; லீலாதிலக ஆசிரியருக்கு இன்றைய கடனாட்சிக் கொள்கை பற்றியும் மொழிகளின் பொதுத் தோற்றத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாது என எழுத்தச்சனும் (1975: 100, 108, 68) கூறுகிறார்.

பிரபாகர வாரியார் (1979 : 51)

> **"லீலாதிலகம் முழுவதிலும் கருத்துக்களில் தொடர்ச்சியும் சுருக்கமும் காணப்படவில்லை. அவருடைய கூற்றுகளை அப்படியே ஏற்றுக் கொள்ளமுடியாது. அவருடைய கருத்துக்கள் எல்லாம் தருக்கரீதியாக இல்லாமல் ஊகங்களாக உள்ளன"**

எனக் கூறுகிறார்.

சண்முகம் (1992 : 17) கூறும்போது இலக்கணம் எழுதுவது சுலபமான வேலை அல்ல. லீலாதிலகத்தைக் குறை கூறியவர்கள் எடுத்துக் காட்டிய மொழி அமைப்பிலேகூடக் குறை இருக்கிறது. 20ஆம் நூற்றாண்டில் மொழியியல் தனித்துறையாக வளர்ந்த பிறகு மொழியியல் ஆராய்ச்சியில் முழுக் கவனம் செலுத்தும் நம்முடைய கருத்திலே குறை இருக்கிறது என்றால் 14ஆம் நூற்றாண்டில் மலையாள மொழியியல் வளராத காலத்தில் இலக்கியத்துக்கு இலக்கணம் எழுதும்போது அதன் உடலாகிய மொழி வரலாறும் வளர வேண்டுமானால் மொழிக்கூறுகளை எடுத்து அதன் மொழி அமைப்பைத் தற்கால மொழியியல் நோக்கில் ஆராய்ந்து இலக்கணம் விளக்கும் முறையிலுள்ள குறை நிறைகளை எடுத்துக்காட்டி அங்கு புதைந்த கொள்கை வேறுபாடுகளை எடுத்து விவாதிக்கவேண்டும் என்கிறார்.

பிரபாகரவாரியர் (1978 : 150) லீலாதிலகத்தைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் கூறியுள்ளார்.

> **"மலையாள மொழி வளர்ச்சியில் லீலாதிலகம் ஒரு முக்கியமான கால கட்டத்தைச் சேர்ந்தது; இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த இலக்கணம்; இக்கால கட்டத்தில்தான் தற்கால மொழிக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. லீலாதிலகத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து தற்கால மலையாள மொழி வளர்ச்சி நேராக நடைபெற்றது என்று கூறமுடியாது; பல்வேறு சமூகப் பண்பாட்டுக்**

> காரணிகளாலேயே தற்கால மலையாள மொழி உருப்பெற்றிருக்க வேண்டும்....... மலையாளமொழி வளர்ச்சியில் முக்கிய காலகட்டத்தில் லீலாதிலகம் எழுதப்பட்டதால் மொழி வரலாற்றின் மீட்டுருவாக்கத்தில் லீலாதிலகத்தின் பயனைக் குறைத்து மதிப்பிட முடியாது"

எனப் புகழ்ந்துள்ளார். மேலும்,

> "லீலாதிலகத்தை அதற்காக அதிகப்படியாக நம்புவது மொழி வரலாற்று ஆசிரியனின் பார்வையை மங்க வைத்துவிடும். தமிழிலிருந்து மலையாளத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட மோசமான தருக்கரீதியான வாதங்களைக் கையாண்டுள்ளார்........ மொழி இலக்கணம் பற்றிய கருத்துகளில் புதுமை இல்லை. முன்னோரைத் தழுவிச் செல்வது தெளிவாகவே தெரிகிறது"

என இகழ்ந்துள்ளார்.

சுகுமாரப்பிள்ளை (1985 : 59) கூறும்போது,

> "செந்தமிழ் இலக்கணத்தை ஓரளவு முழுமையாகப் பின்பற்றுவதால் அவருடைய இலக்கண ஊகங்கள் நம்பத் தகுந்ததல்ல; இருந்தாலும் பேச்சு மொழி பற்றிய அவருடைய கருத்துக்கள் தள்ள முடியாதவை"

என்று குறிப்பிட்டுள்ளார். இவர் மூன்று குறைகளைக் குறிப்பிடுகிறார்.

1. மலையாள மொழியின் தனித்துவத்தை நிலைநிறுத்த மோசமான வாதம்.
2. மொழி இலக்கணத்தில் புதுமை இல்லை.
3. தமிழ் இலக்கணத்தையும் வடமொழி இலக்கணத்தையும் பின்பற்றியுள்ளது.

இக்குறைகள் தமிழ்மொழி மேல் உள்ள எதிர்ப்பினால் வெளிப் படுத்தப்படுகின்றன. லீலாதிலக ஆசிரியர் லீலாதிலகத்தை வடமொழியில் எழுதியது ஒரு பெரிய குறையே ஆகும். அவர் வடமொழியில் எழுதியிருப்பதற்குக் காரணம் அக்கால கட்டத்தில் வடமொழி, அறிவு மொழியாகக் காணப்பட்டு எல்லோராலும் ஏற்றுக்

கொள்ளப்பட்டதாகும். மலையாள மொழியில் ஆசிரியர் நூலை இயற்றி இருப்பார் என்றால் மலையாள மொழி அறிஞருக்கும் மக்களுக்கும் பெரிதும் பயன்பட்டிருக்கும்.

லீலாதிலக ஆசிரியர் அவருக்குத் தவறு என்று படுவதை அப்படியே தைரியமாகக் கூறும் குணம் படைத்தவர். லீலாதிலகத்தில் சில இடங்களில் சில வழக்குகளைப் பொருந்துவது அன்று (நூற்பா 62), பிழை (நூற்பா 69), கிராமியம் (நூற்பா 72), சரியன்று (நூற்பா 67), தவறு (நூற்பா 43), எனத் தைரியமாகக் கூறியுள்ளார். எழுத்தச்சன் (1975:105) 'ரண்டு' என்ற வடிவம் தவறு என்று லீலாதிலகம் கூறியது பிற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இலக்கண ஆசிரியன் உதாசீனப்படுத்தப்பட்டான் என்று குறிப்பிட்டுள்ளார்.

சண்முகம் (1992) கூறும் உண்மை எல்லோராலும் ஏற்கக் கூடியதாக உள்ளது.

"லீலாதிலகம் மலையாள மொழியின் தனி மொழிப் பண்புகளைக் காட்டி அது ஒரு தனி மொழி எனக் காட்டிய முதல் நூலாகும். மலையாள மொழியின் முதல் இலக்கண நூல் லீலாதிலகம் எனக் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறும்போது லீலாதிலகத்தில் தரவுகளில் சில குறைகள் காணப்படுவதையும் பழமையைப் போற்றும் தன்மை லீலாதிலகத்தில் காணப்படுவதையும் ஒரே மாதிரியானப் போக்கை இந்நூல் கடைப்பிடிக்க வில்லை என்றும் பொதுவான கருத்தைக் கூறியுள்ளார். இக்குறைகள் காணப்பட்டாலும் தன்னுடைய நோக்கத்தில் லீலாதிலக ஆசிரியர் வெற்றி பெற்றுவிட்டார் என்றே கூறவேண்டும். மலையாள மொழியைத் தமிழிலிருந்து வேறுபடுத்தித் தனிமொழியாகவே ஏற்படுத்தி அதற்கு இலக்கணம் அமைத்த பெருமை லீலாதிலக ஆசிரியரையே சாரும்.

ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதுவது என்பது அரிய செயலாகும். அதிலும் மொழியியல் அறிவு வளர்ச்சி பெறாத நிலையில் பத்தாம் நூற்றாண்டில் தனிமொழியாக வளரத்தொடங்கிய மலையாள மொழிக்குப் பதினான்காம் நூற்றாண்டில் இலக்கணம் எழுதியிருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும். குறைகள் பல காணப்படினும் இன்று மலையாள மொழியைத் தனிமொழியாக மாற்றிய பெருமை லீலாதிலக ஆசிரியருக்கும் உண்டு. தமிழையும் வடமொழியையும் கொண்டு ஒரு புதிய மொழியாகிய மலையாளத்தைப் படைத்து மணிப்பிரவாள நடையில் எழுந்த இலக்கணமாக லீலாதிலகம் விளங்குகிறது.

## லீலாதிலகத்தின் நோக்கமும் பயனும்

லீலாதிலகத்தின் நேரடி நோக்கம் இலக்கியத்துக்கு இலக்கணம் எழுதுவதே. மலையாள இலக்கியத்தை மணிப்பிரவாளம், பாட்டு என்று இரண்டுவகையாகப் பிரித்ததே லீலாதிலகமாகும். இலக்கிய வகைகளைக் குறிப்பதற்குக் கையாண்ட சொற்களே லீலாதிலகத்தின் உள்நோக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. மலையாள மொழி அமைப்பு தமிழ் மொழி அமைப்பிலிருந்து மாறுபட்டது என்ற கருத்தைப் பல எடுத்துக்காட்டுகளால் விவரிக்கும்போது மலையாள இலக்கியத்தை 'மணிப்பிரவாள நூல்' என்றும் இலக்கிய வழக்குகளை 'மணிப்பிரவாளம்' என்றும் லீலாதிலகம் குறிப்பிடுகிறது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுப் பகுதியில் மலையாள மொழி தனி மொழிக்கானத் தனிப் பண்புகளைப் பெற்று வருகிற நிலையில் அதனை நிறுவுவதே தனது குறிக்கோளாகக் கொண்டு லீலாதிலகத்தை அதன் ஆசிரியர் ஆக்கியுள்ளார் எனலாம். லீலாதிலகத்தின் நோக்கமெல்லாம் புதிய கூறுகளைத் தந்து மலையாளம் ஒரு புதிய மொழியாக உருவாகத் தொடங்கியுள்ளது என நிலைநாட்டுவதேயாகும். இன்றைய வளர்ந்துவிட்ட விரிவான இலக்கணங்களின் முழுமையையும் பண்புகளையும் லீலாதிலகத்தில் காண முயல்வது அவர்மீது குற்றம் சுமத்துவதாகப் பொருளாகும்.

எனவே, மணிப்பிரவாளம் என்ற இலக்கியவகை மலையாள மொழியின் தனித்துவத்தைக் காட்டும் குறியீடாக லீலாதிலகம் அமைத்துக் கொண்டது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். மொழியின் தனிச்சிறப்பை விளக்க இலக்கியத்தைக் குறியீடாகக் கொண்டதற்குக் காரணம் மொழி, காவியம் (இலக்கியம்) நாடு ஆகிய மூன்றும் பின்னிப் பிணைந்தவை என்று லீலாதிலகம் கருதுவதுதான்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குப் பின் பெருமளவிலான சமஸ்கிருத மொழிக் கலப்பினால் கேரள இலக்கியத்தின் ஒரு பகுதி மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் மணிப்பிரவாள இலக்கியங்கள் பல தோன்றின. இவற்றை அடிப்படையாக வைத்து வடமொழியில் எழுதப்பட்டதே கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த லீலாதிலகம் என்ற மணிப்பிரவாள இலக்கணம். மணிப்பிரவாளத்தின் உடலினை மலைநாட்டுத் தமிழ், வடமொழி ஆகிய மொழிச் சொற்களென்றும், உயிரினை உவகை, நகை முதலிய மெய்ப்பாடு களென்றும் அணிகளை எதுகை, மோனை, உவமை முதலியனவென்றும்

குணத்தை இனிமையுடைமை செறிவு முதலியனவென்றும், குற்றத்தை வழூஉச் சொல், இன்னாச்சொல் முதலியனவென்றும் மணிப்பிரவாள இலக்கணம் கூறும் (ப.44). லீலாதிலகம் மணிப்பிரவாளத்தை ஒரு பெண்ணாக உருவகித்து இவற்றைக் கூறுவதால் இந்நூலினை லீலாதிலகம் என அழைத்தார். "வடமொழி உருபு சேர்ந்த சொற்கள் இடைகலந்து வந்தால்தான் அது மணிப்பிரவாளம் என அழைக்கப்படும்".

"மணிப்பிரவாளம் என்றால் மலைநாட்டுத் தமிழும், வடமொழியும் கலந்த நடையை மாத்திரம் குறிக்கும் இடுகுறிப்பெயர்" என ஆசிரியர் குறிப்பிடுகிறார். மணிப்பிரவாளம் என்ற சொல் எல்லாத் திராவிட மொழிகளிலும் வடமொழி நூல்களிலும் காணப்படுகிறது. இது பொதுவாக மணி என்ற தாய்மொழிச் சொல்லையும் பிரவாளம் என்ற வடமொழிச் சொல்லையும் கலந்து எழுதும் நடையைக் குறிக்கும். நவரத்னக் கற்களில் மணி என்பது மாணிக்கத்தையும் பிரவாளம் என்பது பவளத்தையும் குறிக்கும்.

ஆனால், லீலாதிலகம் 'பாஷா சமஸ்கிருத யோகோ மணிப்பிரவாளம்' என்ற முதல் நூற்பா அமைத்ததோடு பாஷா என்பது கேரள பாஷையை மட்டுமே குறிக்கும் என்றும் விளக்கம் கூறியுள்ளது. அதே சமயத்தில் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளும் சமஸ்கிருதம் கலந்து மணிப்பிரவாளம் தோன்றும் என்று மட்டுமல்லாமல் எல்லாத் தேசங்களிலும் மணிப்பிரவாள நடை உண்டு என்று உணர்ந்திருந்த காரணத்தினாலேயே கேரள பாஷா சமஸ்கிருதக் கலப்பிற்கு மாத்திரம் இடுகுறியாய் முடிந்த ஒன்று (நூற்பா 1) என்று கூறியதோடு மணிப்பிரவாளம் என்ற பெயரே இலக்கண, இடுகுறி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் அமைந்தது ஆகும் என்று இரு பண்பையும் சேர்த்து இன்னொரு தடவை வலியுறுத்திக் கூறுவதால், லீலாதிலகம் அதை ஒரு கலைச்சொல்லாய் சிறப்புப் பொருளில் கையாண்டுள்ளது எனச் சுகுமாரன் (1985) கூறுகிறார். மணிப்பிரவாளத்தின் உயிர்நிலை, சமஸ்கிருத வேற்றுமை உருபுகளை இறுதியில் கொண்ட சொற்களின் கலப்பு ஆகும் என லீலாதிலகம் பதிகம் 4-இல் கூறுகிறார். இதனால், சொற்களஞ்சியம், இலக்கணக் கூறு, எழுத்துநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் பிறமொழிக் கலப்பு மணிப்பிரவாளத்தின் தனிச்சிறப்பு என்பது புலப்படுகிறது.

மணிப்பிரவாள வகைகளின் இலக்கணம கூறும் பகுதியில் நாட்டுமொழிச் சொற்கள் மிகுந்தும், மெய்ப்பாடு முதன்மை பெற்றும்

வருவதை உத்தம மணிப்பிரவாளம் என லீலாதிலகம் குறிப்பிடுகிறது (பக்கம் 41) . அத்துடன் மணிப்பிரவாளத்தோடு சமகால நிலையிலுள்ள பாட்டின்இலக்கணத்தைப் பற்றிக் கூறும்போது (பக்கம் 41) திராவிட எழுத்துக்கள் மட்டும் கொண்டது: செய்யுள் நடை உறுப்புகளாகிய அடி, சீர், ஆகியன எதுகை, மோனை ஆகியவற்றுடன் கலந்து வரும். நீட்டல் முதலிய செய்யுள் விகாரங்கள்: இலக்கண முறையில் அமைந்த செய்யுள் வழக்குச் சொற்கள் மிகுந்து காணப்படுவது பாட்டு என்று கூறும். பாட்டும் மணிப்பிரவாளமும் மாறுபட்ட நிலையுடையது என்பது இதனால் விளங்கும்.

மணிப்பிரவாளம் குறித்து இளையபெருமாள் (1977 : 52) கூறும்போது "லீலாதிலகம் இயற்றப்பட்ட கால கட்டத்தில் விளையாட்டுக்காகப் பாடப்பட்ட தனிச் செய்யுட்களில் மட்டுமன்று திராவிடச் சொற் பகுதிகளிலும் சமஸ்கிருத வேற்றுமைகளும் லகாரங்களும் சேர்ந்துள்ள வழக்குகள் காணப்படுகின்றன. உண்ணுநீலி சந்தேசம் முதலிய முக்கியமான நூற்களில் குமரிப் பருவத்திற்கு ஏற்ப உரிமையை மீறல் காணப்படுவதைக் காணலாம். தனக்கிருந்த காப்பாளர் என்ற நிலையைத் தமிழ்தானே விட்டுவிடவில்லை. ஆனால், வடமொழி அக்காப்பாளர் நிலை தனக்குத்தானென்று பலாத்காரமாகப் பாராட்டத் தொடங்கியது. தமிழ்க் காப்பியங்களின் பிரச்சாரம் குறைந்து, நாட்டுமொழி வேறுபட்டு வரவரச் செந்தமிழின் பொருளை உணர்வது பொதுமக்களுக்கு முடியாமற் போகத் தொடங்கியது. சமஸ்கிருதத்தின் புதுமையும் பெருமையும் காவிய நயமுணர்வோரைக் கவர்ந்தன. தலைமையும் கல்வியுமுள்ள அரசர்களும் நம்பூதிரிகளும் வடமொழியை அல்லது நாட்டுமொழியை ஆதரிக்கவில்லை. ஆனால், நாட்டுமொழியோடு தொடர்பில்லாது சமஸ்கிருதத்திலேயே கவிதை இயற்றினால் கேட்டு இன்புற ஆட்கள் குறைவாகவே இருந்தனர். இந்நிலையில் இரண்டும் கலந்த கவிதைக்காக ஒரு மொழியைச் செயற்கையாக உண்டாக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அம்மொழியே மணிப்பிரவாளம் எனக் கூறுகிறார்.

ஆரம்பக் கட்டத்தில் மணிப்பிரவாள நூல்களை இயற்றுபவர்கள் நம்பூதிரிகளாகக் காணப்பட்டனர். அவர்கள் வடமொழியில் பயன்படுத்தும் யாப்பைப் போன்று தங்களது நாட்டு மொழியிலும் பயன்படுத்தினர். உண்ணுநீலி சந்தேசம், சந்திரோச்சவம், சம்புகன் ஆகியன எல்லாம் வடமொழி யாப்பில் அமைந்த செய்யுட்களால் இயற்றப்பட்டன. இவ்வகைக் கவிதைகளில் வடமொழி சுலோகங்கள்

முழுமையாக அமைவதும் சிறுபான்மை அன்று வடமொழியில் சுலோகத்தை அமைத்துவிட்டு அங்குமிங்குமாக ஒன்றிரண்டு நாட்டு மொழிச்சொற்களைப் பயன்படுத்தினால் சுலோகம் எல்லாமே மணிப்பிரவாளம் ஆகிவிடும். ஆனால், ஒரு சாஸ்திர நூல் இயற்ற துளி அளவு கூட நாட்டுமொழியாகிய மலையாளம் கலவாத தூய வடமொழியே வேண்டுமென்பதும் அவர்களது கருத்து. அதுதான் லீலாதிலகத்தை வடமொழியில் இயற்றிடக் காரணமாயிருக்க வேண்டுமென இளைய பெருமாள் (1977: 53) கூறுகிறார்.

தமிழில் மணிப்பிரவாள நடை ஜைன மற்றும் வைணவ எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்டது. 13,14-ஆம் நூற்றாண்டில் அவர்கள் உரைநடை விமர்சனம் செய்துள்ளனர். சிவஞான உத்தியார் உரை என்று கூறப்படுவது சைவ இலக்கியங்களில் ஒன்றாகும். இதனைச் சிவாக்கிர யோகி என்பவர் 16-ஆம் நூற்றாண்டில் இயற்றினார். மலையாள மணிப்பிரவாளமே தென்னிந்திய மரபுகளுக்கு முன்னோடி என இலக்கியங்களிடையே, ஒப்பீடு செய்யும்போது கண்டு கொள்ளலாம். உண்மையிலேயே மணிப்பிரவாளத்தின் தொடக்கம் வடமொழியைக் காட்டிலும் புத்தர் காலத்துக்கு முந்தியது எனலாம். லீலாதிலகம் போஜர் (கி.பி 11-ஆம் நூற்றாண்டு) எழுதிய "சரஸ்வதி கண்டாபரணம்" என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியை எடுத்துச் சுட்டிக்காட்டும்போது, கதை கூறுவதில் மணிப்பிரவாள நடை பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகிறது. தமிழிலும் கன்னடத்திலும் மணிப்பிரவாளம் என்பது படவிளக்கம் போன்று இருந்தன எனவும் விடுகதை கூறுவது போன்றும் காணப்பட்டது. மலையாள மொழியிலோ இது தரப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்துள்ளது. மலையாள மொழியில் மணிப்பிரவாள நடைக்கு முன்னர் எந்த இலக்கியங்களும் இல்லை எனலாம். ஆனால் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மணிப்பிரவாள நடைக்கு முன்னர் வளமான இலக்கிய மரபு இருந்து வந்தது என்பது உண்மை.

## லீலாதிலகத்தின் உட்பிரிவுகள்

இந்நூல் 8 சிற்பங்களில் (இயல்கள்) 151 நூற்பாக்களைக் கொண்டு காணப்படுகிறது. முதல் இயலில் 11 நூற்பாக்கள் கூறப்பட்டுள்ளன. அதில் மணிப்பிரவாளத்தின் இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது. முதல் நூற்பாவில் கூறும்போது கேரள பாஷா எனப்படுவது தற்காலத் தமிழில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத் தமிழை ஆசிரியர் பாண்டிய பாஷா என்றும் சோழ பாஷா

என்றும் கூறுகிறார். கேரள பாஷாவும் சமஸ்கிருதமும் ஒன்று சேர்ந்ததுதான் மணிப்பிரவாளம் எனக் கூறுகிறது. மணிப்பிரவாளத்தின் வகைகள் 2 முதல் 10 வரையுள்ள நூற்பாக்களில் விளக்கப்பட்டுள்ளன. மணிப்பிரவாளத்தோடு சமகால நிலையிலுள்ள பாட்டின் இலக்கணம் 11ஆம் நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இயலில் 26 நூற்பாக்கள் கூறப்பட்டுள்ளன. மணிப்பிரவாளத்தின் பொது இலக்கணமும் வகை வேறுபாடுகளும் முதல் இயலில் கூறப்பட்டன. மணிப்பிரவாளத்திற்கு உடல், குற்றங்கள், குணங்கள், அணிகள், உயிர்நிலை ஆகியவை உள்ளன. அவற்றுள் அதன் உடலான தேசபாஷா, சமஸ்கிருதம் ஆகியவைகளில் தேசபாஷாவாகிய மலையாளத்தின் வரலாற்றையும், எழுத்து, சொல், இலக்கணங்களையும் விவரித்துக் கூறுகின்றன. மணிப்பிரவாளத்தில் வழங்கும் சொற்கள் மூன்று வகைப்படும். அவை நாட்டுமொழிச் சொல், வடமொழித் தற்பவம், வடமொழி வடிவம் என்பன. நாட்டுமொழிச் சொற்கள் இடுகுறிச் சொற்களாகும். மணிப்பிரவாளத்தில் வழூஉமொழி முதலியன குற்றங்கள். இனிமையுடைமை முதலியன அதன் குணங்கள். எதுகை, மோனை, உவமை முதலியன அணிகள். உவகை முதலிய மெய்ப்பாடுகள் அதன் உயிர்நிலை. வடமொழியில் இல்லாத ன்ற், ற்ற, ற், ழ் ஆகிய 4 சிறப்பெழுத்துக்கள் நாட்டுமொழியில் உள்ளன எனக் கூறுகிறார். நூற்பா 20 முதல் 27 வரை வேற்றுமைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன. நாட்டு மொழியின் வேற்றுமை உருபுகள் ஆராயப்படுகின்றன. உருபுகளின் வகைகளாக 8 வேற்றுமைகளும் மூன்று பால்களும் இரண்டு எண்களும் கூறப்பட்டுள்ளன. தமிழைப் போன்றே எட்டு வேற்றுமைகள் கூறப்பட்டுள்ளன. நூற்பா 26 முதல் 31 வரை பால் விகுதிகள் குறித்து கூறுகின்றன. நூற்பா 32 முதல் 34 வரை எண் பற்றிய குறிப்பு கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் 30 நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவ்வியலில் சமஸ்கிருத சொற்புணர்ச்சி விதிகளைக் கூறாமல் நாட்டு மொழிப்புணர்ச்சி விதிகள் கூறப்பட்டுள்ளன. நாட்டு மொழியில் அதாவது தேசபாஷா கேரள பாஷாவில் 12 உயிர் எழுத்துக்கள் உள்ளன. அவற்றுள் ஔ எஞ்சிய மற்றவை மொழி முடிவில் வருமெனவும் ஐ,ஒ, ஔ ஆகியன நீங்கிய மற்ற உயிர் எழுத்துக்கள் மொழியிறுதியில் வரும். லீலாதிலகம் மூன்றாம் இயலில் மலையாள மொழியில் புணர்ச்சிகளை உயிரீறு, மெய்யீறு எனப் பகுத்துக்கொண்டு விளக்குகிறது. கேரளபாணினீயம் நான்கு வகையான புணர்ச்சிகளாகிய லோபம்,

ஆகமம், த்வித்வம், ஆதேஸம் ஆகியன குறித்து எடுத்துக் காட்டுகளுடன் விவரித்துக் கூறுகிறது. தமிழில் கூறப்பட்டுள்ள விதி முறைகளும் எடுத்தாளப்பட்டிருப்பதையும் கேரள பாஷா விதிகளோடு ஒப்பிடப்பட்டிருப்பதையும் காணலாம். 37 முதல் 65 வரையுள்ள நூற்பாக்களில் மொத்தம் 38 புணர்ச்சி விதிகள் எடுத்துக்காட்டுக்களோடு கூறப்பட்டுள்ளன.

நான்காம் சிற்பம் இருபத்தொன்பது நூற்பாக்களைக் கொண்டது. முதல் 22 நூற்பாக்கள், சொற்களில் தோன்றும் 20 பிழைகளை விளக்குகின்றன. இவை மொழி வழக்கில் தோன்றும் குற்றங்களாகும். 23ஆம் நூற்பாவில் குற்றங்கள் சில இடங்களில் குணமாகக் கருதப்படுவதும் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி ஆறு நூற்பாக்கள் மெய்ப்பாட்டுக் குற்றங்கள் (ரச தோஷம்) என்ற பொருளில் ஏற்படக்கூடிய குற்றங்களை விளக்குகின்றன. இவை இலக்கிய ரசனையை ஒட்டியன. அதாவது முதல் வகையைச் சொல் குற்றமாகவும் இரண்டாவது வகையைப் பொருள் குற்றமாகவும் கருதலாம்.

ஐந்தாம் சிற்பத்தில் செறிவு, இன்பம், தெளிவு, சமநிலை ஆகிய நான்குவகை குணங்கள் பற்றி 5 நூற்பாக்களில் விளக்கப்பட்டுள்ளன.

ஆறாம் சிற்பம் 10 நூற்பாக்களைக் கொண்டு சொல்லணிகளை விளக்குகிறது. ஏழாம் சிற்பம் உவமை, உருவகம், முதலிய பொருளணி குறித்து 30 நூற்பாக்களில் விளக்குகிறது. எட்டாம் சிற்பம் 15 நூற்பாக்களில் மெய்ப்பாடுகள் குறித்து விவரிக்கின்றது.

## லீலாதிலகத்தின் முக்கியக்கூறுகள்

1. கேரளீயர்கள் திராவிடர்கள் குறிப்பாகத் தமிழர்கள் ஆவர் என ஆசிரியர் வெளிப்படையாகவே குறிப்பிடுகின்றார். எனவே, அவர்களது மொழி 'தமிழ்' என்று அழைக்கப்படுகிறது.

2. கேரள பாஷா என்பது தற்காலத் தமிழிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்று என்றும் இதனை ஆசிரியர் பாண்டிய பாஷா என்றும் கேரள பாஷா என்றும் அழைப்பதாகவும் (நூற்பா 1 )கூறுகிறது.

3. கேரள பாஷா அல்லது தமிழ் என்பது வடமொழி வார்த்தைகளோடு கலப்புற்று காணப்படுகிறது என்றும் இதனை மணிப்பிரவாளம் என அழைக்கலாம் என்றும் கூறுகிறது. இரு மொழிச் சொற்களும் இயற்கையான முறையில் இணைந்து பார்வைக்கு வித்தியாசமே தெரியாத வண்ணம் காணப்படுகின்றன என்றும்

கூறப்பட்டுள்ளது. மணி என்னும் சொல் மாணிக்கத்தையும் பிரவாளம் என்னும் சொல் பவளத்தையும் குறிப்பதாகவும் இரண்டுமே ஒரே நிறத்தில் காணப்படுவதால் இரண்டையும் வேறு திரித்துக் கூறுவது இயலாததாகவும் காணப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மணி என்பது பாஷையையும் பிரவாளம் என்பது வடமொழியையும் குறிப்பிடுகின்றன. மணிப்பிரவாளம் என்பது கேரளபாஷையும் வடமொழியும் கலந்த ஒரு இலக்கிய நடையாகுமெனவும் மற்ற எந்த மொழிகளும் இந்நடையைத் தங்களது எனச் சொந்தம் கொண்டாட முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

4. அரிய சந்தர்ப்பங்களில் கேரள பாஷாச் சொற்கள் வடமொழிச் சொற்களுக்கு இணையாகக் கருதப்படும் என்றும் வடமொழி வேற்றுமையும் வினை விகுதிகளும் கேரள பாஷையில் சேர்க்கப்படும் என்றும் கூறுகிறது.

5. வடமொழிக்கடன் சொற்களை வெறுமனே கேரள பாஷையோடு சேர்ப்பதால் மணிப்பிரவாளம் தோன்றிவிடாது எனவும் அச்சொற்கள் வடமொழிச் சொற்களிலுள்ள ஒட்டுக்களைப் பெற்றிருந்தால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். நம்பியார் நாடக அரங்குகளில் கதை சொல்லுதல் நீண்ட வடமொழித் தொடர்களில் அமைந்து காணப்படும். ஆனால் பாஷா பிரபந்தங்கள் எனப்படுவன மணிப்பிரவாளம் என அழைக்கப்படமாட்டா. காரணம் வடமொழி ஒட்டுக்கள் இவற்றில் காணப்படவில்லை.

6. மணிப்பிரவாளம் என்பது ஒரு இலக்கிய வகையாகும். இது பாட்டு என்னும் இலக்கியவகைக்கு எதிரானது. பாட்டில் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வடமொழிச் சொற்கள் அடிக்கடி தமிழ் வடிவத்தில் மாற்றப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துக்களே அவற்றை வெளிப்படுத்த போதுமானதாகும். எந்த மாற்றங்களும் தேவையில்லை. பாட்டில் தமிழ் யாப்பும் எதுகையும் மோனையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், மணிப்பிரவாளத்தில் வடமொழி யாப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

7. மணிப்பிரவாளம் சுத்தமான பாஷா சொற்களில் எழுதப்பட்டிருக்கும். ஆனால், இவைகள் அந்தச் சொற்களின் பொருளின் விரிவாக்கத்திற்கே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

8. பாஷாமிஸ்ரம என்பது மணிப்பிரவாளம் என்பதன் பொருளாகப் பயன்படுத்தபபடுகிறது.

9. சோழர்களும், சேரர்களும், பாண்டியர்களும், திராவிடர்கள் என்பதில் ஐயம் இல்லை. கன்னடர்களும், தெலுங்கர்களும், திராவிடர்கள் என்பதில் சிலருக்கு ஐயமேற்படுகிறது என்பது லீலாதிலக ஆசிரியர் கூறுவதாகும். அதற்கு இரு காரணங்கள் காணப்படுகின்றன.

அ. அவர்களுடைய மொழிகள் புகழ் பெற்ற நம்மாழ்வார் எழுதிய திராவிட வேதமாகிய 'திருவாய்மொழி'க்கு மாறுபட்டு காணப்படுவதாகும்.

ஆ. அவர்களுடைய எழுத்துக்களும் வேறுபட்டவைகளாகக் காணப்படுகின்றன. உண்மையான திராவிட எழுத்துக்களாகிய (சேரர்கள் பயன்படுத்தும்) அதிகரணம் (Aspirated Surd), மிருது (Soft), கோஷா(Aspirated Sonant) ஊஷ்ம (Sibilant) ற,ழ, ஆகிய விசர்க்கவும், எ, ஓ ஆகிய குறில் எழுத்துக்களும் காணப்படவில்லை. அத்துடன் கேரள பாஷாவில் நான்கு கூடுதல் ஒலிகள் காணப்படுகின்றன. அவையாவன: ழ், ள், ற், ன் இவ்வெழுத்துக்கள் வடமொழியில் இல்லை. மொத்தத்தில் 18 மெய்யெழுத்துக்களும் 12 உயிர் எழுத்துக்களும் உள்ளன.

10. மணிப்பிரவாளத்தில் சில சொற்கள் சோழ பாஷா, கன்னடா, தெலுங்கு ஆகியவற்றை ஒத்து காணப்படுகின்றன. ஆனால், அவை ஒத்த சொற்களாக ஏற்றுக் கொள்ளவேண்டுமேயன்றி வேற்றுச் சொற்களாக எடுத்துக் கொண்டால் குழப்பம் ஏற்பட்டு ஒவ்வொரு மொழியும் வேறுவேறு மொழியாகத் தோன்றி கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையாது.

11.ஒருமொழியில் இலக்கிய நடையிலோ, அகராதியிலோ வழங்கப்படும் சொற்கள் அம்மொழிச் சொற்களாகவே ஏற்றுக் கொள்ளப் படும்.

12. கேரள பாஷா சொற்பட்டியல் (பெயர் மற்றும் வினைச் சொற்கள்) ஒன்று தயாரிப்பது.

பல்வேறு நிறை குறைகள் லீலாதிலகத்தில் காணப்பட்டாலும் கி.பி 14-ஆம் நூற்றாண்டில் மலையாள மொழியைத் தனி மொழியாக உருவாக்க மணிப்பிரவாள இலக்கணம் இயற்றி இருப்பது ஆசிரியர் மலையாள மொழிக்கு அளித்திருக்கும் கொடை எனக் கருதலாம்.

# ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம்

மலையாள மொழியின் முக்கியமான இலக்கண நூற்களுள் முதன் முதல் மலையாள மொழிக்கு இலக்கணம் கூறுவதாக அமைந்தது ஹெர்மண்ட் குண்டர்ட் எழுதிய மலையாள மொழியிலக்கணம் எனும் நூலாகும். இந்நூலை டாக்டர் ஹெர்மன் குண்டர்ட் மலையாள மொழியில், "மலையாள பாஷா வியாகரணம்" என்ற பெயரில் முதற் பதிப்பை 1851–லும் திருத்திய பதிப்பை 1868–இலும் வெளியிட்டார். மலையாள மொழியில் வெளியிடப்பட்ட இந்நூல் இளையபெருமாளின் மொழி பெயர்ப்பின் முதல் தொகுதி 1979–இல் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடாக வெளிவந்தது. அதில் எழுத்துக் காண்டமும், சொற்காண்டமும் அமைந்துள்ளன. இரண்டாம் தொகுதி 1983–இல் வெளியிடப்பட்டது. முதன் முதலாக மலையாள மொழிக்கு மலையாள மொழியிலேயே இலக்கணம் கூறுவதாக அமைவது ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழியிலக்கணம்

1895–இல் ராஜராஜவர்மா எழுதிய கேரளபாணினீயம் என்னும் இலக்கண நூலுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இந்நூல் கருத்து மற்றும் நூற்பாக்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதைக் காணலாம். கேரள பாணினீயத்தை எழுதிய ராஜராஜவர்மா தனது நூலில் குண்டர்டின் கருத்துக்களையே பெரிதும் பயன்படுத்தியிருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

குண்டர்ட் தம் நூலில் பெரும்பான்மை மலையாய்மை மொழிக்கும் சிறுபான்மை அதில் காணப்படும் வடமொழிப் பகுதிகளுக்கும் இலக்கணம் கூறுகிறார். வடமொழி இடைச் செருகலாகப் புகுந்தமொழி என்னும் அடிப்படையிலே குண்டர்ட்டின் இலக்கணம் அமைந்துள்ளது. வாய்மொழிச் சான்றுகள் கொடுத்துச் சாதாரண ஏழை எளிய மக்களுக்கும் பயன்படக் கூடிய அளவிலேயே இந்நூலைப் படைத்துள்ளார்.

ஜெர்மனியிலுள்ள ஸ்டுர்கார்ட் என்னுமிடத்தில் 1814–ஆம் ஆண்டு பிறந்த ஹெர்மன் குண்டர்ட் ஜெர்மனியிலுள்ள ட்யூபிங்ஙன் பல்கலைக் கழகத்தில் 1831–இல் பல்கலைக் கழகப் படிப்பை முடித்து 1835–இல் இங்கிலாந்து சென்றார். பின் 1837–இல் சென்னை வந்து 1839–இல் கேரளத்திலுள்ள தலச்சேரியில் வந்து முதற்பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவினார். 1872–இல் மலையாளம் ஆங்கிலப் பேரகராதியை வெளியிட்டார். இந்நூல் இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது.

குண்டர்டின் மலையாள மொழி இலக்கணம் அறிவியல் பூர்வமான ஒரு இலக்கண நூலாகும். கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட லீலா திலகம் என்னும் இலக்கணத்துக்குப் பின் ஒரு பெரிய கால இடைவெளிக்குப் பின் மலையாள இலக்கண உலகில் தோன்றியது இந்நூல். மலையாள மொழி அறிஞர் எவரும் அம்மொழிக்கு இலக்கணம் எழுத முன் வரவில்லை என நூற்பா 556–இல் குறிப்பிடுகின்றார். குண்டர்டின் துணைநூல் பட்டியலில் ‘வியாகரண பிரவேசம்’ என்னும் நூல குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூல் வடமொழி அறிந்து கொள்பவர்களுக்கு ஒரு அறிமுக இலக்கணமாக அமைந்துள்ளதேயன்றி மலையாள இலக்கணத்தைக் கற்பிக்கும் நூலாக இல்லை.

அண்மைக்காலம் வரை மாணவர்களின் பாடநூல்களில் வடமொழி மற்றும் மலையாளச் செய்யுட்களே இடம்பெற்றிருப்பதைக் காணலாம். குண்டர்டின் மலையாள இலக்கணம் நவீனகால மலையாள இலக்கண வரிசையில் ஒரு முக்கியமான நூலாக இடம் பெற்றுள்ளது. குண்டர்ட் தம் மலையாள இலக்கண நூலில் மலையாள இலக்கியங்களை நன்கு ஆய்ந்து மொழியியல் சிந்தனையோடு தந்திருப்பது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

1851–ஆம் ஆண்டில் முதன்முதலில் வெளிவந்த குண்டர்டின் மலையாள மொழி இலக்கணம் 552 விதிகளோடு மேலும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 17 விதிகளின் சேர்க்கையோடு வெளிவந்துள்ளது. இந்நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதி அக்ஷர காண்டம் (எழுத்துக் காண்டம்) என்றும் இரண்டாம் பகுதி பதகாண்டம் (சொற்காண்டம்) என்றும் மூன்றாம் பகுதி வாசககாண்டம் (சொற்றொடர் காண்டம்) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒலியியல் குறித்த செய்திகள் அதாவது எழுத்துக்கள், உயிரொலித் தன்மைகள், மெய்யொலிகளின் தன்மைகள், பத அங்கங்கள், புணர்ச்சி விதிகள் ஆகியவை குறித்த விவரங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. குண்டர்டின் கருத்து என்னவென்றால் தூய மலையாள மொழிக்குத் தமிழ்

மொழியைப் போன்று 12 உயிரெழுத்துக்களும், 18 மெய்யெழுத்துக்களும் உள்ளன என்பதாகும். தமிழ்க் கலைச் சொற்களாகிய வல்லினம் (கரம்), மெல்லினம் (அனுநாஸிக), இடையினம் ஆகியவற்றைக் குண்டர்ட் தம் இலக்கண நூலில் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். வடமொழியில் இல்லாத எழுத்துக்களாகிய ற, ன, ழ ஆகியன மலையாள மொழிக்கே உரியது என உறுதியாகக் கூறுகிறார். 'க்ஷ' என்ற எழுத்தையும் சேர்த்து மொத்தம் 20 வடமொழி எழுத்துக்கள் மற்றும் திராவிடமொழி எழுத்துக்களை இவர் தம் இலக்கணத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட குறில் மற்றும் நெடில் ஆகியவற்றையும் குண்டர்ட் தனது இலக்கணத்தில் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். மலையாள மொழியில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரம், ம்ருது, கோஷம், ஊஷ்மம் ஆகியன வடமொழியிலிருந்து எடுத்தாளப்பட்ட எழுத்துக்களாகும்.

'அ' என்னும் உயிரெழுத்து 'எ' என மாறியிருப்பதையும் குண்டர்ட் சுட்டிக் காட்டுகிறார்.

எ.கா. தய > தெய = 'தயை'

மேலும் அவர் 'அ' என்னும் உயிரெழுத்து இரு வடிவங்களைக் கொண்டிருப்பதையும் குறிப்பிடுகின்றார். ஒன்று சுத்த (Pure) 'அ' என்றும், மற்றொன்று தாலவ்ய (Palatal) 'அ' என்றும் காணப்படுகின்றன.

எ.கா. பல 'many' (Pure)

தல 'head' (Palatal)

தல என்னும் சொல்லுடன் நான்காம் வேற்றுமை உருபாகிய க்கு இணையும்போது

தல + க்கு > தலெக்கு

என்றாகிறது. அதுபோன்றே -ஐ யில் முடியும் எல்லா சொற்களும் தாலவ்ய 'அ' ஆக வரும் என்றும் குறிப்பிடுகின்றார். முதன் முதலாக மலையாள மொழிக்கு மெய்யெழுத்துக்களின் ஒழுங்குமுறை மாற்றத்தை வரையறுத்துக் கூறியவர் குண்டர்ட் அவர்களே. புணர்ச்சி விதிகளையும் மிகத் தெளிவாகவே விளக்கி செல்கின்றார். அக்ஷரகாண்டம் மொத்தம் 89 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகிறது.

இரண்டாம் பகுதியாகிய பதகாண்டத்தில் பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல் வடிவங்கள் தரப்பட்டுள்ளன. நூற்பா 90 முதல் பதகாண்டம் தொடங்குகிறது. எழுத்துக்களின் சேர்க்கையே பதம் எனப்படும் என்றும் அதற்கு இரு தன்மைகள் உண்டு என்றும் குறிப்பிடுகின்றார். ஒன்று வடிவம் மற்றொன்று பயன்பாடு (அனுபவம்). பயன்பாடு என்பது தொடரியலில் சுட்டப்படுகிறது. நாமம் (பெயர்) கிரியா (வினை) ஆகியவற்றைப் பதகாண்டத்தில் குறிப்பிடும் குண்டர்ட் தமிழ் மொழிக் கலைச் சொற்களாகிய பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றையே பயன்படுத்தியுள்ளார். பதகாண்டத்திலுள்ள சிறிய பகுதியாகிய பெயர்ச் சொற்பகுதியில் பெயர், பதிற்பெயர்கள், எண்ணிக்கைப் பதிற்பெயர்கள், எண்ணுப் பெயர்கள், பெயர்த்தொகை வடிவங்கள், பெயர் விசேடண அடிச்சொற்கள், தத்திதப் பெயர்கள் ஆகியன பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. வினைச்சொல் பகுதி வினைவேர்ச் சொற்கள், முக்காலங்கள், வினையெச்சங்கள், பெயரெச்சங்கள், ஏவல் நடு வினையெச்சம், வியங்கோள், கட்டளை வினையெச்சம், தொழிற்பெயர்கள், மறைவினை, வினைத்தோற்றம், ஊன வினைகள் ஆகியன குறித்து குறிப்பிடுகின்றது. இடைச்சொற்கள் பற்றிய சிறிய பகுதியில் வினையிலிருந்து தோன்றிய இடைச்சொற்கள், அனுகரண ஒலிகள் ஆகிய செய்திகள் தரப்பட்டுள்ளன.

மலையாளத்தில் ஏழு விபக்திகள் அல்லது வேற்றுமைகளைக் குண்டர்ட் குறிப்பிடுகின்றார். விளி என்பதை எழுவாயில் அடக்குகிறார். எழுவாய் நேர் விபக்தி (Straight case) எனவும் விளி என்பதை வளவிபக்தி (Oblique case) எனவும் குறிப்பிடுகின்றார்.

நான்காம் வேற்றுமை உருபு குறித்துக்கூறும்போது –க்கு மற்றும் –னு ஆகிய உருபுகளைச் சுட்டுகிறார்.

எ.கா. **அவள்க்கு** 'to her'

**அவனு** 'to him'

குண்டர்ட் கொடை வேற்றுமை(Dative case)-யின் மாற்றுருபுகள் குறித்துக் கூறும்போது –க்கு(-kku) மற்றும் –னு(-nu) ஆகிய உருபுகள் உருபன் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் என்றும் கிழமை வேற்றுமை (Genitive Case) யின் மாற்றுருபுகளாகிய –உடெ(-uTe) மற்றும் –ன்றெ(-nte) ஆகியனவும் உருபன் அடிப்படையில் வகைப் படுத்தப்படும் என்றும் கூறுகிறார். ஆனால், கேரளபாணினீ ஆசிரியர்

கூறும்போது இவ்வகைப்பாடு ஏற்றதல்ல என்றும் அவை ஒலியன் அடிப்படையிலே வருகின்றன என்கிறார். கொடை வேற்றுமை உருபாகிய –னு(nu)வும், கிழமை வேற்றுமை உருபாகிய –ன்றெ (-nte)யும் 'ன' கரத்தில் முடியும் பெயர்களோடு வரும் என்கிறார்.

குண்டர்ட் தனது இலக்கண நூலில் வினையை இருவகையாக வகைப்படுத்துகிறார்.

அ. பலகிரியா (Strong verb)

ஆ. அபலகிரியா (Weak verb)

அதேவேளையில் தமிழ் மொழியில் காணப்படும் தன்வினை (Intransitive verb), பிறவினை (Transitive Verb) ஆகியவற்றையும் அகற்மக என்றும் சகற்மக என்றும் முறையே கூறுகின்றார்.

குண்டர்ட் குறிப்பிடும்போது மலையாள மொழிக்கு வினையில் பால் விகுதிகள் காணப்பட்டன என்றும் பின்னர் படிப்படியாக அவை மறைந்து விட்டன என்றும் கூறுகிறார். 'பாட்டு' என்னும் இலக்கிய வகையில் அவை காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

குண்டர்டின் இலக்கணம் பல குறைபாடுகளைக் கொண்டு விளங்குகிறது என எழுத்தச்சன் (1975:50) குறிப்பிடுகிறார். இருந்தாலும் மற்ற இலக்கண நூல்களுக்கு மேலாகக் குண்டர்டின் மலையாள இலக்கண நூல் வைத்துப் போற்றப்படுகிறது. அதற்குக் காரணம் இன்றுவரை வேறு எந்த இலக்கண நூல்களும் மொழியின் யதார்த்த அமைப்பை விளக்கவில்லை எனலாம். குண்டர்ட் இவ்வகையில் கேரள பாணினீயை விட மிக உயர்ந்து நிற்கிறார். ஐரோப்பிய அறிஞர்களுக்குக் குண்டர்டின் வழிகாட்டுதல் ஓர் சிறந்த பயனுள்ள ஒன்றாகக் காணப்பட்டதெனலாம்.

எஞ்சியுள்ள மூலநூலின் பகுதிகளில் நூல் முழுமைக்குமுள்ள சொற்பொருளகராதி, கலைச் சொல்லகராதி (மலையாளம்–தமிழ்) முதலியனவும் இடம் பெற்றுள்ளன.

## குண்டர்ட் இலக்கணம் குறித்து இராமசுவாமி ஐயர்

எல்.வி. இராமசுவாமி ஐயர் (1946–47:32–35) தனது 'Linguistics About a Century Age' என்னும் கட்டுரையில் குண்டர்டின்

இலக்கணத்தை விமர்சித்துள்ளார். இவர் குண்டர்ட்டின் பல்வேறு குறைகளையும் தவறுகளையும் தமது கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார்.

'மார்' என்னும் உருபு 'அவர்' என்னும் பதத்திலிருந்து தோன்றியதாகுமெனக் குண்டர்ட் கூறுகிறார். பன்மை உருபாகிய -கள் என்னும் உருபின் தோற்றமும் வளர்ச்சியும் தவறுதலாகக் குண்டர்ட்டால் புரிந்துகொள்ளப்பட்டு உயர்திணைப் பன்மை விகுதியிலிருந்து தோன்றியது எனக் கூறுகிறார். உடைமைப் பொருள் வேற்றுமையின் உருபாகிய '-ன்றெ' என்னும் உருபின் தோற்றமும் அடைதல் வேற்றுமையின் உருபாகிய '-னு' என்னும் உருபின் தோற்றமும் தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன. 'அத்ற', 'இத்ற' போன்ற சொற்களிலுள்ள 'த்ற' என்பது சுட்டெழுத்தாகிய 'அ', 'இ' ஆகியவற்றுடன் இணைந்துள்ளது எனக் கூறுவது குற்றமாகும். பழைய வடிவங்கள் 'அத்தன', 'இத்தன' என்பனவாகும். 'பறஞ்ஞேனே' போனற வடிவங்களின் தோற்றம் முன்னிலை பெயருக்குப் பொதுமைப்படுத்துவது தவறான புரிந்து கொள்ளுதலாகும் எனவும் கூறுகிறார். 'உள்', 'இல்' மற்றும் 'அல்' ஆகியன உண்மையிலே குறிப்பு வினை வடிவங்களாகும். அவை தவறுதலாகக் குறை வினைகளில் குண்டர்ட்டால் குறிப்பிடப்படுகின்றன. 'அன்றி' 'இன்றி' ஆகிய சுத்த திராவிட வடிவங்கள் சமஸ்கிருதத்தோடு எந்த ஒட்டும் உறவுமின்றிக் காணப்படுவதாகக் குண்டர்ட் கருதுகிறார். மேலும் அவர் கூறும்போது குண்டாடடுக்குத் தமிழ் மொழியறிவு, பிற தென்னிந்திய மொழிகளின் அறிவை விடக் கூடுதலாக இருந்தது என்றும், பிற தென்னிந்திய மொழியறிவு குண்டர்ட்டுக்குக் குறைவாகவே இருந்தது என்றும் இராமசுவாமி ஐயர் கூறுகிறார். பழைய சங்க இலக்கியங்கள் அக்கால கட்டத்தில வெளி உலகுக்குத் தெரியாமல் இருந்தது. பல பழைய மலையாள நூல்கள் அன்று வெளியிடப்படாததோடு கல்வெட்டுகளும் கண்டெடுக்கப்படாத நிலையிலே இருந்தது.

கேரள பாணினீய இலக்கணம் வெளிவந்ததோடு குண்டர்டின் இலக்கணம பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால், அவரது அகராதி மட்டும் மிகுந்த செலவாக்குடன் திகழ்கிறது. அதற்குக் காரணம் அதனை மிஞ்சும் வகையில் இன்றுவரை அகராதிகள் வெளிவராததேயாகும். வரலாற்று நோக்கில் குண்டர்ட் தனது இலககணததைப் படைத்திருக்கிறார் என இராமசுவாமி ஐயர் (1946-47:32) கூறுகிறார்.

## குண்டர்டின் பிற இலக்கண நூல்கள்

*குண்டர்ட் தனது முதல் இலக்கண நூலை 1851-இல் வெளியிட்டார். 1860-இல் "வியாகரண சோத்தியோத்தரம்" என்னும் இலக்கண நூலை வெளியிட்டார். இந்நூல் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டுக்காக மலையாள மொழியிலேயே எழுதப்பட்ட ஒரு இலக்கண நூலாகும். அதன் பின்னர் இந்நூல், கார்த்வெயிட் என்னும் அறிஞரால் குண்டர்டின் உதவியுடன் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு விரிவாக விளக்கங்களுடன் அமைப்பு முறைகள் மாற்றியமைக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. 1870-இல் குண்டர்டின் அனுமதி கார்த்வெயிட் அவர்களுக்குக் கிடைத்தது. இந்நூல் 311 பகுதிகளைக் கொண்டு மிகவும் பயன் நிறைந்த ஒன்றாகப் பல்வேறு இலக்கணக் கூறுகளைக் கொண்டு தெளிவாகவும் குறிப்பாகவும் விளக்கும் ஒரு நூலாகக் காணப்படுகிறது.*

# கேரள பாஷா வியாகரணம்

வைக்கத்து பாச்சு மூத்தாத்து (1814 - 1883) என்பவர் ஒரு புகழ்பெற்ற வடமொழி இலக்கண ஆசிரியராவார். ஆயுர்வேத மருத்துவத்திலும் சிறந்து விளங்கினார். 13 புத்தகங்கள் வடமொழிக்கும், மலையாள மொழிக்கும் சமமாகப் பயன்படும் விதத்தில் இயற்றியுள்ளார். தற்கால உரைநடைகள் எழுதுவதற்கு முன்னோடியாவார். இவர் ஒரு புலவராகவும், உரையாசிரியராகவும் ஒருங்கே நிரம்பப் பெற்ற அறிஞராகத் திகழ்ந்தார். 1867-இல் வடமொழி மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பாலபூஷணம் என்னும் நூலைப் படைத்தார். இவரது 1868-இல் எழுதப்பட்ட "திருவிதாங்கூர் வரலாறு" **(History of Travancore)** என்னும் நூல் மலையாள மொழியில் வரலாற்றுத் துறைக்கு முன்னோடி நூலாகும். கேரளபாஷா வியாகரணம் என்னும் இவரது நூல் 1876-இல் திருவனந்தபுரத்தில் வெளியிடப்பட்டது. கோவுண்ணி நெடுங்காடியின் கேரள கௌமுதி என்னும் நூல் 1875-இல் முழுமை பெற்றது. ஆனால், அந்நூல் வெளியிடப்பட்டது 1878-ஆம் ஆண்டாகும். ஆசிரியர் 1878-இல் கேரள விசேஷநியம விவரம் என்னும் சட்டப் புத்தகத்தையும் ஹருதயப்ரியா என்னும் புகழ் பெற்ற மருத்துவ நூலை 1865-இலும் எழுதியுள்ளார் . ஆசிரியர் வானியல் மற்றும் சோதிடத்திலும் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கினார். இவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆண்டு வந்த ஆயிலியம் திருநாள் என்னும் இளவரசனால் **Patronage** என்னும் பெருமையைப் பெற்றார்.

பாச்சு மூத்தத்துவின் கேரள பாஷா வியாகரணம் என்னும் நூல் 190 பக்கங்களைக் கொண்டு வடமொழி மரபைத் தழுவி இயற்றப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் இவருக்குப் புலமை குறைவாகக் காணப்பட்டதால் மேலை நாட்டறிஞர்களின் படைப்புகளை இவரால்

மேற்கோள் காட்ட முடியவில்லை. தமிழ்ப்புலமையும் இவருக்குத் தேவைப்பட்டது. மேறகூறப்பட்ட குறைகள் இவருக்கு இருந்தாலும் இவரது நூல் நல்ல மொழியியல் அறிவும இலக்கணப் புலமையும் பெற்றுத் திகழ்ந்தது. இவரது நூல்,

1. பூர்வபாகம்

2. உத்தரபாகம்

ஆகிய இரு பாகங்களாகப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகமும நானகு இயல்களாக வகுக்கப்பட்டன.

பூர்வபாகம்,

1. அக்ஷர (எழுத்து)

2. சந்தி (புணர்ச்சி)

3. பதம் (சொல்)

4. சமாஸம் (compounds) ஆகிய இயல்களைக் குறித்தும, உத்ரபாகம்,

1. தாது (Root)

2. க்ரியா (Verb)

3. ப்ரயோகம் (Usage)

4. அலஙகாரம் (Figures) ஆகியவற்றைக குறித்தும கூறுகினறன.

முநதைய ஆசிரியர்கள் கூறிச் செனறது போனறே இந்நூலும் புலவர் பெருமக்களுக்கும், எழுத்தாளர்களுககும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. இந்நூலின் இறுதி இயலான அலஙகாரம எனனும் இயலில் ஆசிரியர் வடமொழி மற்றும் திராவிட மொழிகளில் கூறப்பட்டுள்ள அணிகளையும யாபபையும பற்றிக் குறிப்பிட்டுளளாா.

இந்நூலின முனனுரையில் ஆசிரியர் குறிப்பிடும போது கேரள நாட்டு மககள் மலையாள மொழியில் சரியாகப் பேசினாலும அவாகளுக்கு இலக்கண அறிவு தேவையாகக காணபபட்டது. இது எதைப் போன்றதென்றால் காட்டைச் சுத்தம செய்து ஒரு சாலையை அமைக்க மைல் கல நிறுவுவது போன்றதாகும. வயதானவாகள் கூட

மிகவும் மோசமான தவறுகளை மொழிநடையில் பின்பற்றுவது அவர்களுக்கு சரியான விதிமுறைகள் தெரியவில்லை என்பதைக் காட்டுகிறது. விதிகள் சரியாகக் கொடுக்கப்பட்டிருந்தால் குறைந்த கால கட்டத்தில்கூட வெளிநாட்டவராலும் இம்மொழியின் பயன்பாட்டைக் கற்று அறிந்து கொள்ள முடியும். ஆசிரியர் கூறுவதாவது, வடமொழியும் தமிழும் இலக்கணத்தில் வளர்ச்சியுற்ற மொழிகளாகும். ஆனால், மலையாளம் ஒரு சிறிய மொழி. இதன் சொற்கள் தமிழ் மற்றும் வடமொழிக் கூறுகளால் ஆனது மட்டுமன்று. கன்னடம் மற்றும் துளு போன்ற மொழிகளின் தத்பவம் மற்றும் தத்சமம் ஆகியனவும் ஆகும். சில விதிகளும் சொற்களின் இலக்கணப் பகுப்பும் தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றினாலும் மலையாள மொழி வடமொழி மாதிரியையே பின்பற்றிக் கூறுவதால் வடமொழி இலக்கணத்தாக்கம் பெருமளவில் பாதித்துள்ளது. ஆசிரியர் மலையாளத்தில் காணப்படும் தமிழ், கன்னடம், மற்றும் துளு சொற்களை ஒரு பட்டியலில் கொடுத்துள்ளார்.

எ.கா. **தமிழ் : தலை, கண்ணு**

**துளு : இல்லம், இலை**

**மனை**

புராதனச் சொற்களையும் கொடுத்துள்ளார்.

எ.கா. **தாக்கோல் (சாவி)**

# கேரள கௌமுதி

எ.ஆர். இராஜராஜ வர்மாவின் கேரளபாணினீயம் வெளி வருவதற்கு முன்பு வரை புகழ் பெற்ற இல்லகணமாகக் கேரள கௌமுதி விளங்கியது. இது மரபுவழி இலககணத்தைப் பின்பற்றியது. டி.எம். கோவுண்ணி நெடுங்காடி (1831 - 1889) இதன் ஆசிரியா ஆவார். இவர் வடமொழியிலும் மலையாளத்திலும சிறந்த புலமை பெறறு விளங்கியவர். எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒரு இலக்கண ஆசிரியராகத் திகழந்தார். இவா சென்னையிலுள்ள பிரசிடெனசி கல்லூரியிலும, திருவனந்த புரத்திலுள்ள மகாராஜா கல்லூரியிலும் பணியாற்றியுள்ளாா (1872 - 1875) இறுதியாக இவர் அரசு வழக்குரைஞராகப பணி புரிநது 1879-இல் பணி ஓய்வுப் பெற்றார். இவர் மிகச் சிறந்த கவிஞராவார். இவரது புகழ் கேரள கௌமுதி என்னும் இலககண நூலின வாயிலாக வெளிப்பட்டது. மேற்கூறப்பட்ட இரு கலலூரிகளில் பணியாற்றியபோது மலையாள மொழிக்கு ஒரு இலக்கணம் எழுதுவது மிகவும் அவசியமான ஒனறு எனனும் எண்ணம் இவர் மனதில உருவெடுத்தது. இவருக்கு மேலைநாட்டு அறிஞர்களான டாக்டர் குணடர்ட மற்றும காாத்வெயிட ஆகியோா மீது மிகுந்த மரியாதை காணபபடடது என்பதை இவர் தமது இலக்கண நூலில் கோடிட்டுக் காடடியிருப்பதின் வாயிலாக அறிநது கொள்ள முடிகின்றது. இவருககு மேற்குறிப்பிட்ட இருவரது இலக்கணங்களிலும் திருப்தி ஏற்படாததால் மலையாள மொழிககு ஒரு நல்ல இலக்கணத்தை மரபு வழியாக எழுத வேண்டும என்ற எணணம ஏற்பட்டது.

இவர் சென்னையில் தமிழ்ப் பயின்றாா. இவா தம நூலில நன்னூலைப் பல இடங்களில் மேற்கோள காட்டியிருப்பதைக காணலாம். தம் செய்யுளியல் பகுதியில் தமிழ் இலககண விதிகளையும எடுதது்க் காட்டுகளையும் கூறியுள்ளார். மலையாள மொழியில நன்கு புலமை பெற வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளின் அறிவு மிகவும தேவை என்பதை உணாந்தார். 1875-ஆம ஆண்டில் இவரது கேரள கௌமுதி

*முழுமை பெற்ற இலக்கணமாக வெளி வந்தது. 1878-இல் இந்நூல் முதன் முதலாக வெளியிடப்பட்டது. இறுதிப் பதிப்பு பல ஆண்டுகளுக்குப் பின்னர் 1930இல் வெளிவந்தது.*

## நூலின் அமைப்பு

*கோவுண்ணி நெடுங்காடியின் நூல் 16 இயல்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. 385 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இறுதி இரு பகுதிகளில் ஆசிரியரின் துணை நூற்பட்டியலின் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சில இயல்களில் வடமொழி, தமிழ், மலையாள இலக்கண விதிகள் கூறப்பட்டுள்ளன. வடமொழிச் சந்திகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. கேரள கௌமுதி என்பது கேரளத்தில் நிலவொளி அல்லது கேரள பாஷா என அழைக்கப்பட்டதற்கான குறிப்புகள் இந்நூலில் காணக் கிடக்கின்றன. (ஆலோகா என்பதற்கு ஒளி என்பது பொருள்)*

1. **அக்ஷராலோகம்** **[எழுத்துக்கள்]**
2. **சம்ஜ்ஞாலோகம்** **[கலைச் சொற்கள்]**
3. **பரிபாஷாலோகம்** **[விளக்க கொள்கைகள்]**
4. **சந்தியாலோகம்** **[புணர்ச்சி]**
5. **ஸப்தாலோகம்** **[ஒலி]**
6. **பதாலோகம்** **[சொற்கள்]**
7. **நாமாலோகம்** **[பெயர்ச் சொற்கள்]**
8. **க்ரியாலோகம்** **[வினைச் சொற்கள்]**
9. **அவ்யயாலோகம்** **[உருமாற்றம் பெறாத சொற்கள்]**
10. **விஸேஷணாலோகம்** **[பெயரடைகள், வினையடைகள்]**
11. **வாசகாலோகம்** **[தொடர்கள்]**
12. **சமாசாலோகம்** **[கூட்டுச் சொற்கள்]**

13. வ்ருத்தாலோகம் [அணிஇலக்கணம்]

14. அலங்காரலோகம் [யாப்பிலக்கணம்]

15. தாத்வாலோகம் [பகுதி]

16. அப்யாசாலோகம் [பயிற்சி]

இவ்வாறு 16 இயல்களாக வகுத்துக் கொடுத்திருப்பதின் வாயிலாக ஆசிரியர் ஒரு நல்ல முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்பதையும் அதில் ஓரளவு வெற்றியடைந்துள்ளார் என்பதையும் கண்டு கொள்ள முடிகிறது. நூற்பாக்களிலே பல எடுத்துக்காட்டுகள் மரபு முறைப்படி கூறப்பட்டுள்ளன (மூன்றாவது மற்றும் நான்காவது வரிகளில்). அணி இலக்கணத்தைக் கூறும்போது குறிப்பிட்ட சில அணிகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. கேரள பாணினீயத்தின் அழகு மற்றும் நடை ஆகியன இந்நூலில் குறைபாடுடையதாகவே உள்ளன.

## அறிமுகவுரை

கோவுண்ணி நெடுங்காடி தமது நூலின் தொடக்கத்தில் சில முக்கியமான குறிப்புகளைக் கூறியுள்ளார். மலையாள காண்டம் அதாவது கேரளம் என்பது பரசுராம க்ஷேத்திர கர்மபூமியாகுமென ஆசிரியர் கூறுகிறார்.

'மலை' + 'ஆழம்' > மலையாளம்

என்றாயிற்று என்கிறார். இவர் மேலும் கூறுகையில் கேரள நம்பூதிரிகள் வட இந்திய ஆரியவர்த்த ஆரியப் பிராமணர்களேயாவர் என்றும் சூத்திரர்கள் கேரளத்தின் அருகாமையிலுள்ள தமிழர்களேயாவர் எனவும் குறிப்பிடுகின்றார். பிராமணர்களின் மூலமொழி வடமொழியாகும் எனவும் ஆரிய எழுத்து அவர்களது எழுத்து முறையாகும் எனவும் கூறுகிறார். தமிழ் மக்களால் பயன்படுத்தப்படும் வட்டெழுத்து மற்றும் பிறஎழுத்துக்கள் ஒரு சில அரிய ஏடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்கிறார். ஆசிரியர் மணிப்பிரவாளம் குறித்துக் கூறும்போது தற்போது பயன்படுத்தப்படும் மலையாள மொழி தமிழ் மற்றும் வடமொழியின் கலப்பேயாகுமென்கிறார். ஆரியர்கள் வடமொழியைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கில் முழுமூச்சாக ஈடுபட்டு வந்தனர். ஆகையால் கலப்பு மொழியாகிய மணிப்பிரவாளம் கேரளத்தில் அதிலும் குறிப்பாகக் கேரளத்தின் தெற்குப் பகுதியில் வேரூன்றவில்லை. மத்திய கேரளம் இதற்கு விதிவிலக்காகும்.

மணிப்பிரவாளம் மத்திய கேரளத்தில் வளர்ச்சியுற்றுக் காணப்பட்டது என ஆசிரியர் கூறுகிறார். எழுத்தச்சன் காலமாகிய கி.பி.15–ஆம் நூற்றாண்டிற்குப் பின் மலையாள மொழி ஒரு வளர்ச்சி பெற்ற மொழியாக உருவானது எனவும் அவருக்குப் பின் உண்ணாயி வாரியார், குஞ்சன் நம்பியார் போன்றோரின் காலத்தில் வளமை பெற்ற மொழியாக மாறியது எனவும் நெடுங்காடி கூறுகிறார். படிப்படியாக மணிப்பிரவாளம் தனது செல்வாக்கை இழந்து காணப்பட்டது. ஒரு சில மலையாளிகள் மட்டுமே மலையாள மொழியின் நடையும் சொற்களும் தமிழ்மொழியிலிருந்து தோன்றியது என்ற கருத்தைக் கூறுகின்றனர்.

மேலே குறிப்பிட்டுள்ள புலவர்களின் கருத்துக்களைப் பலர் விளங்காதவர்களாகவும் மொழி நடையில் பல தவறுகள் செய்தவர் களாகவும் காணப்பட்டதால் தான் இந்நூலை உருவாக்க காரணமாயிற்று என்கிறார் ஆசிரியர். இந்நூலின் குறிக்கோள் என்னவென்றால் சரியான மொழி நடையைப் பயன்படுத்தக் கற்பிப்பதே என்கிறார். மேலும் இந்நூலாசிரியர் குறிப்பிடும்போது இவ்விலக்கணம் வடமொழி மற்றும் தமிழ் மொழியின் நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது எனவும், மாணவர்களின் பயன்பாட்டிற்கேற்ப நூற்பாக்கள் விருத்தி உரையுடன் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறகிறார்.

அண்மைக் காலத்தில் மேலைநாட்டறிஞர்களாகிய டாக்டர் குண்டர்ட், ஜார்ஜ் மாத்தன், கார்த்வெயிட் போன்றோர் மலையாள மொழிக்கு இலக்கணங்கள் எழுதியுள்ளனர். அவை பல வழிகளில் சிறப்புற்று விளங்கினாலும் அவற்றிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும், உண்மையிலேயே நான் அவர்களுக்கு நன்றிக்கடப்பாடுடையேன் ஆவேன் என்றும், அவர்களுடைய இலக்கணங்கள் தான் தன்னைக் கேரளகௌமுதி என்னும் இவ்விலக்கணத்தை எழுதத் தூண்டியது என்றும் கூறுகிறார். எவ்வாறாயினும் குண்டர்டின் இலக்கணம் தனக்குப் பெரிதும் உதவியாகக் காணப்பட்டது என்றும் அதைப் பின்பற்றியே தன்னால் இந்த இலக்கணத்தை இயற்ற முடிந்தது என்றும் கூறுகிறார். இவர் முடிவாகக் கூறும்போது அறிஞர்கள் பாணினி மற்றும் நன்னூல் இலக்கணங்களிலுள்ள நூற்பாக்களைக் கற்றும் பல்வேறு வகையான மலையாள நூல்களை ஆழமாகக் கற்றும், அவற்றின் பயன்பாட்டையும் விளக்கங்களையும் இந்நூலின் வாயிலாக உணர்ந்து தங்களது அறியாமையைப் போக்கிக் கொள்ள முடியும் என்கிறார்.

மேலே குறிப்பிட்டுள்ள பத்தியிலிருந்து இந்நூலைக் கற்றுக் கொள்ளும் ஒருவர் வரலாற்று நோக்கில் இந்நூலாசிரியரின் குறிக்கோள் மற்றும் நெறிமுறைகளையும் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்நூலின் முதல் இயல் கேரளத்திலுள்ள அறிஞர்களிடையே பல்வேறு முரண்பாடுகளை ஏற்படுத்தி உள்ளது. "கேரள மொழியெனும் காரிகை வடமொழியெனும் இமயத்திலிருந்து தோன்றி, திராவிட மொழி (தமிழ்) எனும் காளிந்தி (யமுனா) யுடன் கலந்து, என் இதயக்கடலில் விளையாட வேண்டுகிறேன்" என்கிறார்.

**சம்ஸ்க்ர்த ஹிமகிரி கலிகா**

**த்ராவிட வாணிகளிந்தஜா மிளிதா**

**கேரளபாஷா கங்கா**

**விஹரது மே ஹ்ர்த்சரஸ்வத் ஆசங்கா**

(கேரள கௌமுதி 1 : 1)

மேலே கூறப்பட்டுள்ள ஒப்பீட்டிலிருந்து, வடமொழியிலிருந்துதான் மலையாளம் தோன்றியது என்ற தவறான, அறிவியலுக்கு அப்பாற்பட்ட கருத்து விவாதத்திற்கு இடமளிப்பதாக உள்ளது. உண்மையிலேயே, ஆசிரியர் மிகத் தெளிவான கருத்தில் உள்ளார் என்பதை அவரது நூலின் மூன்றாவது நூற்பாவில் கண்டுகொள்ள முடிகின்றது. அதில் அவர் கூறியிருப்பதாவது:

"வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் மகளாகிய கேரளபாஷாவுக்குப் புதிய கணவனாக இந்நூல் உருபெற்று குழந்தைகளாகிய அறிஞர் பெருமக்கள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை." இங்கே ஆசிரியர் வடமொழியையும் தமிழையும், தந்தையும் தாயுமாக ஏற்றுக் கொண்டு இரு மொழிகளுக்குமே சம அந்தஸ்தையும் மதிப்பையும் குறிப்பிட்டு கூறுகிறதாவது: "தமிழ்மொழி அந்நாட்டு மக்களின் மொழியாகக் காணப்பட்டுப் பிராமணர்களின் வருகையால் வடமொழியோடு கலந்து விளங்குகிறது" . எவ்வாறாயினும் ஆசிரியர் கங்கையும் இமயமும் என ஒப்பிட்டுக் கூறியிருப்பதின் வாயிலாகத் தோன்றியிருக்கும் முரண்பாடுகளைக் களைந்தெறிய உவமையாகக் கூறியிருப்பதைத் தவிர்த்திருக்கலாம்.

கோவுண்ணி நெடுங்காடி அவரது நூலில் தொடக்கமாக அக்ஷரா லோகம் என்ற இயலில் எழுத்துக்களைப் பற்றிக் கூறுகிறார்.

எழுத்துக்களின் தோற்றம் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றி உள்ளது என்கிறார். மணிப்பிரவாளம் என்ற சொல் லீலாதிலகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று அல்லாமல் தற்கால மலையாளக் கருத்துக்கேற்ப அதாவது வடமொழி தமிழ் ஆகிய மூலக்கூறுகளின் கலப்பு என்ற அடிப்படையில் ஆசிரியர் கையாண்டுள்ளார். எப்படி இருப்பினும் ஆசிரியர் வடமொழி, தமிழ் இலக்கணங்களைத் தனது ஒலியியல் விளக்கம் உருபனியல் போன்றவற்றில் கையாண்டுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தோன்றுகிறது. ஆசிரியர் மலையாள மொழியே மணிப்பிரவாளமாகும் என்கிறார். அதாவது, மலையாள மொழி, வடமொழியும் தமிழ் மொழியும் கலந்த ஒரு கலப்பு மொழியாகும் எனக் கூறுகிறார். எனவேதான் தன்னுடைய இலக்கணத்தைக் கலப்பு மொழியிலே எழுதியுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். முதலாவது வடமொழி இலக்கணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அடுத்துத் தமிழ்மொழி விதிகளை நன்னூல் அடிப்படையில் தந்து விளக்குகிறார்.

## எழுத்துக்கள்

வடமொழியைப் பின்பற்றி மலையாளத்துக்கு 51 எழுத்துக்கள் காணப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார் (கேரள கௌமுதி 1:6). இவ்வெழுத்துக்களோடு தமிழிலுள்ள எழுத்துகளாகிய எ, ஒ, ற, ழ ஆகிய 4 எழுத்துக்களும் வட்டெழுத்துக்களில் கற்பிக்கப்படுகின்றன. ஆனால், ஆசிரியர் இந்நான்கு எழுத்துக்களும் ஏ, ஓ, ர, ள ஆகியவற்றின் மாற்று வடிவங்களேயாகுமென்கிறார். னகரம் மற்றும் ற்ற ஆகியன முறையே நகரத்தின் பாதியாகவும் நகரத்தின் இரட்டிப்பாகவும் காணப்படுவதால் இவை தனியாகக் கொடுக்கப்படவில்லை என்கிறார்.

ஆசிரியர் மேலும் குறிப்பிடும்போது r, r, l̠, l, am,ah

மற்றும் K, g, gh Ch, j. jh, ḍ, ḍh, th

d, dh, ph, b, bh, Ś, Ṣ, S, h, KṢ

ஆகிய 26 எழுத்துக்கள் மட்டும் தற்போது வடமொழி எழுத்துக்களாகும் என்கிறார். அவர் மேலும் கூறுகையில் 'ற' கரம் என்னும் எழுத்து வடமொழியில் அருகியே வந்துள்ளது எனவும் 'ழ' கரம் வழககிலே இல்லை எனவும் கூறுகிறார்.

மலையாளத்தில் ந, ன ஆகிய இரு எழுத்துக்களுக்கும ஒரே ஒரு எழுத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கலைச் சொற்கள் இரண்டாவது இயலாகிய சம்ஜ்ஞாலோகத்தில் கூறப்பட்டுள்ளன. இக்கலைச் சொற்கள் பாணினியின் நூலிலும் நன்னூலிலும் காணப்படும் கலைச் சொற்களேயாகும்.

குண்டர்ட் இயற்றிய கலைச் சொற்களில் சிலவற்றை இவர் குறிப்பிட்டுள்ளார். வடமொழி இலக்கணங்கள் பெயரிடப்பட்டுள்ளன போல உயிர் எழுத்துக்களுக்கு 'அச்' என்ற சொல்லும் மெய் யெழுத்துக்களுக்கு 'ஹல்' என்ற சொல்லும் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதுபோன்று தமிழ் அறிஞாகள் பயன்படுத்தி யிருக்கும் உயிர், மெய் ஆகிய சொற்களையும் ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார். சுட்டெழுத்துக்களாகிய அ, இ, உ ஆகிய எழுத்துக்களும் வினா எழுத்துக்களாக 'ஓ' என்ற எழுத்தும், திட்டெழுத்தான (Emphatic) 'எ' என்ற எழுத்தும் இந்நூலின் ஆசிரியரால் கையாளப்பட்டுள்ளன. வர்க்க எழுத்துக்கள் வடமொழியைப் பின்பற்றிப் பெயரிடப்பட்டுள்ளன. தமிழில் காணப்பெறும் வல்லினம் (க், ச், ட், த், ப், ற்), மெல்லினம் (ங், ஞ், ண், ற், ம், ன்), இடையினம் (ய், ர், ல், வ், ள், ழ்) ஆகியனவும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது இயலாகிய பரிபாஷாலோகம் சொற்கள் அதாவது பதம் குறித்துக் கூறுகின்றது. 'தாது' என்ற சொல் 'வேர்' என்ற ழைக்கப்படுகிறது. ஆசிரியர் இதனை "முரடு" என்னும் பதத்தால் குறிப்பிடுவதையும் காணலாம். சாரியை என்பது சாரிகா என அழைக்கப்படுகிறது. லோபம் (Elision), ஆகமம் (Appearance of a new letter), ஆதேஷம் (Substitution), த்வித்வம் (Doubling) ஆகிய புணர்ச்சி விதிகள் இங்குச் சுட்டப்பட்டுள்ளன. தத்சமம், தத்பவம் ஆகிய மரபு வழிச் சொற்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. பெயர் என்பது சுபந்தம் (சமஸ்கிருதம்) என அழைக்கப்படுகிறது.

திஙந்த, வினை, கிரியா ஆகியன வினையின் ஒரு பொருள் பல சொற்களும் விபக்தி மற்றும் காரகங்களில் (வேற்றுமைகள்) ஆகியன உடைமையைத் தவிர்த்து வடமொழி இலக்கண ஆசிரியர்களைப் பின்பற்றி இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. வினையெச்சம் மற்றும பெயரெச்சங்களும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

நான்காவது இயலாகிய சந்தியாலோகத்தில் முதல் 12 நூற்பாக்கள் வடமொழிச் சந்தியைக குறித்துக கூறுகின்றன. நூற்பா 14-இல் திராவிடச் சந்தி விளக்கப்பட்டுள்ளது.

*ஐந்தாவது இயலாகிய ஸப்தலோகம், சாதி, சம்ஞ, குண, கிரிய அடிப்படையில் பதங்கள் 4 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பதங்கள் 1. தத்சமம் 2. தத்பவம் 3. தேசியம் ஆகியவைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| *எ.கா* | **மங்கலம்** | **(தத்சமம்)** | Mangalam |
| | **மங்க்லம்** | **(தத்பவம்)** | Mankala |
| | **மங்ஙலம்** | **(தேசியப் பதம்)** | Mannalam |

*ஆறாவது இயலாகிய பதலோகம், பெயர் வினை, இடை ஆகிய வடமொழி இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சொற்கள் பல்வேறு வகைகளாக நன்னூலைப் பின்பற்றி,*

| | | | |
|---|---|---|---|
| 1. **பெயர்** | (Nouns) | 2. **வடசொல்** | (Sanakrit) |
| 3. **திசைச்சொல்** | (Local words) | 4. **வினைச்சொல்** | (Verb) |
| 5. **இடைச்சொல்** | (Link words) | 6. **உரிச்சொல்** | (Adjective) |

*பிரிந்திருப்பதைக் காணலாம். முதல் மூன்று பிரிவுகளையும் பெயர் சொல்லில் அடக்குகிறார். நான்காவது பிரிவை வினைச் சொல்லிலும் மற்ற இரு பிரிவுகளையும் சொல்லுருபுகளிலும் அடக்குகிறார்.*

*ஏழாவது இயலாகிய நாமலோகத்தில் ஆசிரியர் 8 வகைப் பெயர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.*

1. **ப்றதிசம்ஜ்ஞ** (Personal Pronoun)
2. **க்ருதந்தம்** (Verbal Derivative)
3. **தத்திதம்** (Derivatives from nouns and adjectives)
4. **சமாஸம்** (Compound)
5. **பாவநாமம்** (Abstract Noun)
6. **க்ரியா நாமம்** (Verbal Noun)
   **தொழில் பெயர்**
7. **சங்காநாமம்** (Numerals)

எண் பெயர்

8. சர்வநாமம் (Pronoun)

பெயர்களின் எண்ணிக்கை கூடியிருபபது தெளிவின பொருடடேயாகுமென ஆசிரியர் குறிபபிடுகின்றார். வடமொழி மற்றும் மலையாள மொழிகளின் உருபுகளும் எடுத்துக்காடடுகளும் ஒவ்வொருவகைப் பெயர்களுக்கும கொடுக்கபபடடுளளன. ஆசிரியர் கூட்டுச் சொற்கள் (Compound nouns) பறறி வெளிநாட்டறிஞாகள கூறிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பதையும காணலாம. மேலும் அவா குறிப்பிடுகையில் மலையாளத்தில பால் என்பது பொருளையும் வடமொழியில் அது இலககணத்தையும் வெளிப்படுத்துகிறது. வேற்றுமையைக் குறித்துக் கூறும்போது மரபுவழிப் பெயாகளாகிய பிரதம, த்விதீயா, போன்றவற்றைக் கூறியக் காரகம் போனற கர்ததா, காமா போனறவற்றையும் விளககிக கூறுகிறாா. மூனறாம் வேற்றுமைக்கு ஆசிரியர் காரணம் (கருவி) மறறும் சாகித்யா (உடனிகழ்ச்சி) போனற வேறறுமைகளைக் குறிபபிடுகிறாா.

வடமொழி ஒட்டுக்கள் பெருமளவில் விளக்கபபட்டுளளன. இவை தமிழ் மொழியின் வேற்றுமை அமைப்பைப் பின்பற்றி விளக்கமாகக கூறப்பட்டுளளன.

எட்டாவது இயலாகிய க்ரியாலோகம் எனபது வினை பறறிக கூறும இயலாகும். 18 நூற்பாக்களில வடமொழி வினைகள் எடுத்துக் காட்டுகளுடன கூறப்படடுளளன. இறந்த கால உருபுகள தமிழிலுளள நன்னூல் இலககண முறையில் கூறப்பட்டுளளதாகவும 'இ', 'உ' ஆகியன இறந்தகால உருபுகளாகவும இந்நூலில் கூறப்படடுள்ளன. -க்கு என்னும் உருபு பிறவினையடிகளில (Intransitive roots) சோக்கப்பட்டு அவை தன வினையாககப் படுவதாகவும (Transitive) ஆசிரியர் குறிப்பிடுகிறாா.

எதிர்மறை உருபுகளாக 'ஆ', 'அலல', 'இலல' ஆகியன வினைகளோடு சேர்க்கபபடுகினறன.

ஒன்பதாம இயலாகிய அவயயாலோகம இடைச சொறகள குறித்துக கூறுகிறது. இஙகே வடமொழிப பகுதிகள முதலில வருகின்றன. இடம், காலம், திசை, தன்மை, அளவை போனறன மலையாளத்தில அவ்யயாககள என அழைக்கப்படுகினறன.

| | | |
|---|---|---|
| எ.கா. | அவிடெ | அங்கே |
| | அப்போழ் | அப்பொழுது |
| | அங்ஙு | அங்கே |
| | அங்ஙனே | அவ்வாறு |
| | அத்ர | அத்தனை |

40 சொற்களுக்கு மேல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவை குண்டர்ட் மற்றும் கார்த்வெயிட் ஆகியோரின் வாதத்திற்குப் பல்வேறு வழிகளில் இடம் அளிப்பனவாகக் காணப்பட்டன.

இயல் 10 (விசேஷணாலோகம்) பெயரடையைக் குறித்துக் கூறுகிறது. வடமொழி 'உபசர்காஸ்' அல்லது முன்னொட்டுகள் திராவிடச் சொற்களாக வரிசைப்படுத்தப்பட்டு அவை சொற்களின் தன்மையை எடுத்துரைப்பனவாக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | கறு | (கறுப்பு) | |
| | நல் | (நல்ல) | |
| | பெரு | (பெரிய) | |
| | வெண் | (வெண்மை) | போன்றன. |

ஆசிரியர் மலையாளப் பெயரடைகளை 3 நூற்பாக்களில் கொடுத்துள்ளார்.

பதினொன்றாவது இயலாகிய வாசகாலோகம் தொடரியல் குறித்துக் கூறுகிறது. இவ்வியல் பெயரெச்சம், வினையெசசம் போன்றவற்றின் துணையால் தொடாகள் நீண்டு கொண்டு போவது குறிப்பிடப்பட்டுள்ளது.

பால, எண், வேற்றுமை ஆகியவற்றின் தொடரியையும் (Concordance) செயப்பாட்டு வாக்கியங்களும் (Passive sentences) விளக்கபபட்டுள்ளன.

பனிரெண்டாம் இயலில ஆசிரியா கூட்டுச் சொற்கள் (Compounds) பற்றிக் கூறுகிறாா. முதலில வடமொழிக் கூட்டுச் சொற்களைக் கூற அதன எடுததுக் காட்டுகளையுமு விளக்குகிறார்.

13-ஆம் இயலில் வடமொழி மற்றும் மலையாள மொழிகளில் சாதாரண முறையில் அணிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிடுகிறார். 5 நூற்பாக்கள் தமிழுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தமிழ் அணிகள் (Metres) குறித்துக் கூறும்போது 4 வகைகளைக் குறிப்பிடுகின்றார். வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வெண்பா ஆகியன அவை. அவர் தமிழ்ச் சொற்களாகிய எழுத்து, அசை, சீர், அடி, தொடை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அசை, நேரசை, நிரையாசை எனப் பிரிக்கப் பட்டுள்ளது. அடி 5 வகைப்படும்.

**1. குறளடி 2. சிந்தடி 3. அளவடி**

**4. நெடிலடி 5. கழிநெடிலடி**

ஆசிரியர் மலையாளம் மற்றும் தமிழுக்குரிய அணிகளைக் குறித்தும் குறிப்பிடுகின்றார். துஞ்சத்து எழுத்தச்சன் கிளிப்பாட்டில் காணப்படும் எல்லா அணிகளுமே வெண்பா மற்றும் ஆசிரியப்பா அடிகளால் ஆனவையாகும். இவ்வொற்றுமையால பழைய மலையாள எழுத்தாளர்கள் தமிழ் அணியைத் தங்களது மனத்தில் நிறுத்தியே மலையாளக் கவிதைகளைப் புனைந்துள்ளனர் என்பது புலனாகிறது.

ஆசிரியர் கூற்றின்படி துஞ்சத்து எழுத்தச்சன் இயற்றிய கிளிப்பாட்டில் கூறப்பட்டிருக்கும் தாயுமானவர் இயற்றிய பைங்கிளிக்கண்ணி மற்றும் பராபரக்கண்ணி ஆகியவற்றை அடியொற்றி இயற்றப்பட்டதாகக் கூறுகிறார். ஆசிரியர் 16 நூற்பாக்களில் மலையாள அணியைப் பற்றிக் கூறுகிறார். திராவிட அணி இலக்கண விதிகளில் ஒன்றுகூட மாறாமல் ஏ.ஆர். ராஜராஜ வர்மாவின் விருத்தி மஞ்சரியில் அமைந்துள்ளதைக் காணலாம்.

14-ஆம் இயலாகிய அலங்காரலோகம் 31 நூற்பாக்களில் யாப்பிலக்கணம் குறித்து வடமொழியைத் தழுவியே கூறப்பட்டுள்ளது. 28 நூற்பாக்களில் மலையாள வினையடிகள் (Roots) சுமார் 400, 15-ஆம் இயலில் கூறப்பட்டுள்ளன. 16-ஆம் இயலில் வாககியத்தைக் கூறுகளாகப் பாகுபடுத்தி அவற்றிற்கு விளக்கம் கூறப்பட்டுளளது.

இதனால் கோவுண்ணி நெடுங்காடி தன் மனதில் கொண்டிருந்த மிக நீண்ட தெளிவான குறிக்கோளாகிய இலக்கணம், உரைநடை மற்றும் செய்யுளியல் குறித்த பயன்பாட்டை மாணவர்களிடையே ஏற்படுத்துவதிலும் இலக்கிய ஆர்வத்தை வெளிக் கொணர்வதிலும வெற்றியும் பெற்றுள்ளார் என்பது மேலே கண்டவற்றின மூலம

புலப்படுகிறது. அவரது நூலில் வடமொழி, தமிழ் மற்றும் மலையாளம் ஆகியன சம அந்தஸ்தில் கூறப்பட்டிருப்பது தெளிவாகிறது.

அவரது ஒப்பீட்டாய்வு பல ஒற்றுமைகளையும் பல வேற்றுமைகளையும் மொழியியல் மற்றும் இலக்கண நோக்கில் ஆரியர்கள் மற்றும் திராவிடர்களிடையே வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். மலையாள அணிகள் குறித்த ஆய்வு தனித்தன்மை வாய்ந்ததாகவும் வினையடிகள் அவரது ஆய்வின் முயற்சியையும் வெளிக்காட்டுகின்றன. வடமொழிப் புலமை பெற்றவரான இவர் இயற்கையாகவே அந்த மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காண முடிகின்றது. காரணம் அவர் வாழ்ந்த காலத்தில் வடமொழிக்கு உள்நாட்டுப் புலவர்களாலும் அறிஞர் பெருமக்களாலும் முதன்மை இடம் அளிக்கப்பட்டதேயாகும். இவரது ஒலியனியல் மற்றும் உருபனியல் குறையுடையதாகவே உள்ளன. இவர் தமிழ் விதிகளைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றியுள்ளார். எடுத்துககாட்டாக, மலையாளத்தில் கூறப்பட்டிருக்கும் இறந்த கால உருபுகள் 'இ' மற்றும் 'து' ஆகியனவாகும்.

**நோற்று = நோல் + து**

**கேட்டு = கேள் + து**

**வந்து = வர் + து** வந் + tu

# வியாகரண மித்ரம்

மலையாள இலக்கண உலகில் எம். சேஷகிரி பிரபுவின் வியாகரணமித்ரம் மிகச் சிறந்த இடத்தை வகித்துள்ளது. ஆசிரியரின் காலம் கி.பி. 1855 முதல் கி.பி. 1924 வரையுள்ள கால கட்டமாகும். ஆங்கிலக் கல்வியில் கற்று வந்த ஆசிரியர் வடமொழி இலக்கண இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். சாஸ்திர அறிவு குறிப்பாக இலக்கணம் மற்றும் தத்துவத்தில் நிரம்பப் பெற்று காணப்பட்டார். இவர் இராஜ முந்திரியிலுள்ள அரசு பயிற்சிப் பள்ளியின் முதல்வராக இருந்தார். இவரது காலத்தில் பலாராலும் நன்கு அறியப் பட்ட ஒரு அறிஞராக விளங்கினார். கொச்சியை ஆண்ட இளவரசர் இவருக்கு, "சாகித்ய குசலன்" என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளார். ஆசிரியர் "பாலவியாகரணம்" என்னும் வேறொரு இலக்கணத்தைச் சிறிய வகுப்பு மாணவர்களுக்காக எழுதியுள்ளார். "வியாகரண மித்ரம்" என்னும் இந்நூல் மேனிலைப்பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன் பெறுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் பல முக்கியமான கருத்துக்கள் அறிஞர் பலருக்கும் பயன்படுமாறு காணப்படுகிறது.

பிற்காலத்தில் மிகவும் புகழ் பெற்ற கவிஞராகிய உள்ளூர் பரமேஸ்வர ஐயர் முன்னுரையில் குறிப்பிடும்போது, "மலையாள ஆண்டாகிய 1078–ஆம் ஆண்டிற்கு (கி.பி. 1903) முந்தைய காலத்தில் பிரபு அவர்கள் தலைச்சேரி என்னும் இடத்தில் நடைபெற்ற பாஷா போஷினி சபா என்னும் கூட்டத்தில் கலந்து கொண்டு விவாதத்தில் பங்கேற்றது அவரது பெயர் அமைப்புக் குழுவில் இலக்கணம் மற்றும் மொழி குறித்து எழுத தேர்ந்தெடுக்கப்பட்டார். 1917–ஆம் ஆண்டில் கேரள பாணினீயம் வெளியிடப்பட்ட பின்னர், பதிப்பாசிரியர் கே.ஐ. வர்க்கீஸ் மாப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டு வந்த பாஷா போஷினி என்னும் இதழ் மாத இதழாக உருவெடுத்தது. அவ்விதழின் வரிசையாகத் திறனாய்வுக் கட்டுரைகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சேஷகிரி பிரபு அவர்களால் வெளியிடப்பட்டு வந்தன. இக்கட்டுரைகள்

கேரளத்தில் உள்ள அறிஞர் பெருமக்களிடையே நன்மதிப்பை ஆசிரியருக்குப் பெற்றுத் தந்தன. இலக்கிய உலகில் ஆசிரியரின் நிலை ஸ்திரதன்மை வாய்ந்து காணப்பட்டது. அவர் ஒப்பிலக்கணம் (Comparative Grammar), மொழியியல் (Linguistics) மற்றும் மனிதயியல் (Ethnology) போன்ற துறைகளில் பல்வேறு கட்டுரைகளைத் தொடர்ந்து வழங்கி வருவது அவருக்கு மென்மேலும் மதிப்பு வளரத் தொடங்கியது. அவர் எவ்வாறு அறிவை விருத்தி செய்தாரோ அதுபோன்றே அவரது நாட்டு மக்களும் பல செய்திகளை அறிந்து கொண்டனர். வடமொழி அறிஞர்களில் அக்காலத்தில் சிறந்த அறிஞராக இந்நூலாசிரியர் விளங்கினார். இவரது மனது களஞ்சியத் தொகுப்பாக, பல்வேறு தலைப்புகளைக் கொண்டு நிறைந்து காணப்பட்டது. இவர் எந்தத் தலைப்பை எடுத்து கையாண்டாலோ அல்லது பேசினாலோ இவரை விஞ்சக்கூடிய அறிஞர் பெருமக்கள் இவ்வுலகில் இல்லை என்றே கூறவேண்டும். இவை எல்லாவற்றையும் விட இலக்கணம், வரலாறு, ஒப்பியல் ஆகியன இவருக்கு மிகவும் பிடித்தமான ஆய்வாகக் காணப்பட்டன. இத்துறைகளில் நிரம்ப அறிவு பெற்றும் காணப்பட்டார். இவரது காலத்தில் மேற்கூறப்பட்ட துறைகளில் இவரைவிட மேலான அறிஞர் பெருமக்கள் இல்லை என்றே கூறலாம். உண்மையிலேயே சேஷகிரி பிரபு கேரளநாட்டுக்கு ஒரு அணியாகத் திகழ்கிறார் என்றே கூறவேண்டும். நாட்டு மக்களின் மரியாதைக்கும் மதிப்புக்கும் உரியவராகத் திகழ்கிறார் என இந்நூலின் மூன்றாவது வெளியீட்டு (1919) முன்னுரையில் (பக்கம் 3 – 4) கூறப்பட்டுள்ளது.”

## இந்நூல் பற்றிய பொதுப்பார்வை

வியாகரண மித்ரம் என்னும் இலக்கணம் வடமொழி மரபில் ஒலியனியல உருபனியல் குறித்து எடுத்துக் கூறுகின்றது. தொடரியலைப் பொறுத்தமட்டில் ஆசிரியர் ஆங்கில முறையைப் பின்பற்றியுள்ளார். இவர் விரிவான விளக்கங்களைக் கொள்கை ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் கொடுத்து செல்வதைக் காணலாம். ஆசிரியர் அவருக்கு முன்னால் உள்ள இலக்கண ஆசிரியர்கள் கூறிச் சென்றவற்றைத் தன்னுடைய நூலில் எடுத்தாண்டுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இவர் புதிய பல கருத்துக்களையும் எளிய நடையில் விளக்கி செல்வது மிகவும் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

கேரள கௌமுதி போன்ற முந்தைய இலக்கண நூல்கள் வெறுமையாகக் காணப்பட்ட போதிலும் ஆசிரியர் வடமொழி இலக்கணத்துக்கு இடமளித்துள்ளார்.

வடமொழி வேற்றுமைப் பாகுபாடு (Declensions) மற்றும் வினைத்திரிபு (Conjugations) பற்றி ஆசிரியர் இந்நூலில் கூறுவதால் இந்நூலைக் கற்கும் ஒருவர் வடமொழி அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ராஜராஜவர்மா என்பவர் 'மணிதீபிகா' எனனும் ஒரு தனிநூலை வடமொழி அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் படைத்துள்ளார். இதுபோன்றே இந்நூலின் ஆசிரியர் இலக்கணத்தை மட்டும் கூறாமல் உரைநடை எழுதுவதற்குரிய கோட்பாடுகளையும், கொள்கைகளையும் எடுத்துக் கூறுகிறார். இதற்கு ராஜராஜ வர்மா என்பவர் "சாகித்ய சாஹ்யாம்" என்ற நூலை இயற்றினார். அவரது நூலில் ஒவ்வொரு இயலிலும் எடுத்துக் காட்டுகளால் செய்திகளைக் கூறிச் செல்கிறார். இவை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவனவாக காணப்படுகின்றன.

இந்நூலில் குறைகளும் காணப்படுகின்றன. சில கருத்துகள் ஒழுங்கான முறையில் அமைக்கப்படவில்லை. சில இடங்களில் தொகுப்பு முறையில் கருத்துக்கள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். சில கொள்கைகள் ஏற்றுக் கொள்ளகூடியனவாக இல்லை. ஆனால் ஒட்டு மொத்தமாக இந்நூலைப் பார்க்கும்போது இது மலையாள இலக்கண இலக்கியத்திற்கு மிகவும் ஒரு முக்கியமான நூலாகக் காணப்படுகிறது. இந்நூல் எவராலும் ஒதுக்கப்பட முடியாத ஒரு நூலாகும்.

கீழே வரும் பத்திகளில் இந்நூலில் கூறப்பட்டிருக்கும் முக்கியமான கருத்துகளும் அமைப்பு முறைகளும் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

சேஷகிரி பிரபுவின் வியாகரண மித்ரம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. **சிக்ஷ காண்டம் (ஒலியனியல்)**
2. **பரிநிஷ்டா காண்டம் (உருபனியல்)**
3. **வாக்ய காண்டம் (தொடரியல்)**

மூன்று பாகங்களும் 336 பகுதிகளைக் கொண்டது. தொடக்கத்தில் உள்ள சிலபகுதிகள் சில பொதுத் தலைப்புகளாகிய இலக்கண விளக்கம், தொகுப்பாய்வு முறை (Inductive) மற்றும் விதி தருமுறை (Deductive) போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இலக்கணத்தின் அறிவியல் 6 வகைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## 1. நிர்தேசக வியாகரணம் (விளக்கமுறை இலக்கணம்) (DESCRIPTIVE GRAMMAR)

இது ஒரு பொருளைப் பெயர், வினை போன்ற பகுதிகளாகப் பிரித்து, அவற்றின் விளக்கம் மற்றும் பயன்பாட்டைக் கூறுகிறது. இது கொள்கைகள் குறித்தோ அடிப்படைக் கருத்துகள் குறித்தோ ஒன்றும் கூறுவதில்லை. ஆனால், பயன்பாட்டுத் தேவைகளைக் கருத்தில் கொள்ளும்.

## 2. உபபாதக வியாகரணம் (பொருளிலக்கணம்) (INTERPRETATIVE GRAMMAR)

விளக்கமுறை இலக்கணத்தில் கூறப்பட்டிருக்கும் பகுதிகள் பரிசோதிக்கப்பட்டுத் தத்துவ அடிப்படையிலான பொருட்கள் கொடுக்கப்படும். இந்த முயற்சிக்கு மொழியியல், தத்துவம், இலக்கிய அறிவியல் போன்றவற்றின் உதவிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

## 3. காலிக வியாகரணம் (வரலாற்று இலக்கணம்) (HISTORICAL GRAMMAR)

இவ்விலக்கணம் பழைய வடிவங்கள் மற்றும் அவற்றின் பயன் பாடுகளில் அதிக கவனம் செலுத்துகிறது. எவ்வாறு காலச்சூழலில் மாற்றங்கள் ஏற்படுகின்றது என்பதைக் குறித்து பழைய இலக்கிய நூல்களின் உதவியோடு விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, 'வீணார்' (அவர்கள் விழுந்தார்கள்).

இராமசரிதத்தில் 'வீழ்ந்தார்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இதிலிருந்து 'வீழ்ந்தார்' என்ற சொல் பழைய வடிவமாக இருக்கலாம் என நாம் கருத முடிகிறது. ஆனால், நமக்குப் பொருளிலக்கண உதவி 'வீழ்ந்தார்' என்ற சொல் எவ்வாறு 'வீணார்' என மாறியது என அறிய தேவைப்படுகிறது.

## 4. ஆனுஷங்கிக வியாகரணம் (ஒப்பீட்டு இலக்கணம்) (COMPARATIVE GRAMMAR)

இவ்விலக்கணம் வரலாற்று இலக்கணத்தில் கூறப்பட்டிருக்கும் வடிவத்தை எடுத்துக் கொண்டு தொடர்புடைய மொழிகளிலுள்ள வடிவங்களோடு ஒப்பிட்டு நோக்குகிறது. எடுத்துக்காட்டாக, 'வீழ்ந்தார்' என்ற இராமசரிதத்தின் வடிவம்,

| | |
|---|---|
| தமிழில் | வீழ்ந்தார் |
| கன்னடத்தில் | பித்தரு |
| துளுவில் | பூர்தர் |
| தெலுங்கில் | பாட்யாரு |

ஆகியவற்றோடு ஒப்பிட்டு நோக்கப்படுகிறது. இவை ஒன்றோடொன்று தொடர்புடைய மொழிகளாகும்.

–ஆர், –அரு, –அர், –ஆரு ஆகிய மேலே கூறப்பட்ட சொற்களின் உருபுகள் விவாதத்துக்கு ஏற்றுக் கொள்ள கூடியனவாகும்.

இவை ஒவ்வொன்றும் தொடர்புடையன. மேற்குறிப்பிட்ட சொற்களில் மூல திராவிடச் சொல்லில் படிப்படியாக வ(v), ப(b), ப(p) (vi<u>l</u>u, bi<u>l</u>u, bū<u>r</u>u, pā<u>d</u>u) என மாறி இருக்க வேண்டும். கடைசியாக உள்ள எழுத்துக்களாகிய <u>l</u>, ḷ, <u>r</u>, ḍ ஆகியன ஒன்றுக்கு ஒன்று தொடர் புடையனவாகும்.

## 5. தார்சனிக வியாகரணம் (தத்துவ இலக்கணம்) (PHILOSOPHICAL GRAMMAR)

இது எல்லா மொழிகளிலுமுள்ள பொதுவான இலக்கணக் கூறுகளைக் கருத்தில் கொண்டு அவற்றின் முக்கியமான கொள்கைகளை விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, எல்லா மொழிகளிலும் ஒரு தொடர், எழுவாய் (Subject), பயனிலை (Predicate) ஆகிய கூறுகளால் ஆனது என்ற பொதுவான கருத்தைக் கூறுவது.

வியாகரணமித்ரம் என்னும் இலக்கண நூல் ஒலியனியல் (Phonology), உருபனியல் (Morphology), தொடரனியல் (Syntax) ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒலியனியல் | 1 | முதல் | 81 | விதிகளாலும்; |
| உருபனியல் | 82 | முதல் | 247 | விதிகளாலும்; |
| தொடரனியல் | 248 | முதல் | 256 | விதிகளாலும் ஆனது. |

வேற்றுமை உருபுகள் மற்றும் வேற்றுமை வகைகள் 257 முதல் 273 வரையுள்ள விதிகளில் கூறப்பட்டுள்ளன. வேற்றுமை உருபுகளை

'விபக்தி' என்றும் பொருள் அடிப்படையிலான வேற்றுமைகளைக் 'காரகம்' என்றும் பெயர் கொடுத்து வடமொழி வேற்றுமைகளைப் பின்பற்றி இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

விதி 274 முதல் 281 வரை வினைகளின் பொருண்மை விளக்கப் பட்டுள்ளது. விதி 282 முதல் 284 வரை முற்றுப்பெறாத வினைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. விதி 285 – 288 வரை இயைபு (Concordance) குறித்துக் கூறப்பட்டுள்ளன. இணைப்பு (Conjunction) குறித்து விதிகள் 290 – 294 கூறுகின்றன. ஆங்கில மொழியின் சொல்லிலக்கண கூறுகளையும் பகுப்பு முறையையும் குறித்தும் ஆசிரியர் கூறுகிறார். ஒரு சிறிய பகுதியில் செய்யுளுக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகள் விளக்கப் பட்டுள்ளன. 312 முதல் 317 வரையுள்ள விதிகளில் நிறுத்தக் குறியீடுகள் விளக்கப்பட்டுள்ளன. இது ஐரோப்பிய முறையைப் பின்பற்றி காணப்படுகிறது. விதிகள் 318 – 323–இல் இலக்கியம் எழுதுவது பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. விதிகள் 324 – 336–இல் அடிச்சொல் வரலாறு (etomology) குறித்து கூறப்பட்டுள்ளன. இதில் அரபி மொழி மற்றும் பிற மேலை நாட்டு மொழிகளிலுள்ள சொற்கள் மலையாள மொழியில் பயன்படுத்துவது குறித்துக் கூறப்பட்டுள்ளன. தத்பவம் சொற்கள் ஆக்கப்படும்போது பயன்படுத்தப்படும் விதிகள் 332 மற்றும் 333 விதிகளில் கூறப்பட்டுள்ளன. இதில் ஆசிரியர் கூறும்போது தத்பவம் பழைய இலக்கியங்களாகிய இராமசரிதத்தில் காணப்படுவதாகவும் அவற்றில் எழுத்துக்கள் தமிழ் மொழியைப் பின்பற்றி எழுதப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார். வட்டெழுத்து மற்றும் கோலெழுத்துக்களால் தொடக்கத்தில் இம்மொழியில் எழுதப்பட்டு வந்தது. அவை பின்னர், தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் ஆரிய எழுத்து முறையைப் பின்பற்றி எழுதப்பட்டு வந்துள்ளது. மூக்கொலிகளைத் தவிர (Nasals) மற்ற வர்க்க எழுத்துக்களில் நடுஎழுத்துக்கள் எடுத்துக்காட்டாக, க (K) என்னும் எழுத்து,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | = | $க_1$ | $க_2$ | $க_3$ | $க_4$ |
| K | = | K | Kh | g | gh |

என நான்கு ஒலிகளைக் கொண்டிருந்தாலும் எழுதும் போது க(K) என்ற ஒரே எழுத்தில் எழுதப்படுகின்றது. இருந்தாலும், சொற்களின் நடு எழுத்துகள் மீண்டும் ஒலி எழுத்துகளாகவே (Voiced) காணப்படுவதைக் கூட்டெழுத்துகளில் வரும் சொற்களில் காணலாம்.

அங்கம் (சண்டை)

அம்பு (அம்பு)

போன்ற சொற்கள் ஒலிப்பு முறையில

அங்க$_3$ம்

அம்பு$_3$

என்றே உச்சரிக்கப்படுகின்றன. இவை வடமொழியிலுள்ள

அங்க$_3$ம் (உடல் உறுப்பு)

அம்பு$_3$ (நீர்)

போன்ற சொற்களின் ஒலியைப் போன்று காணப்படுகின்றன. இநதக குழப்பத்திலிருந்து விடுபடவே மலையாளத்தில்,

ங்க$_3$ (ṅg) என்பது ங்ங (ṅṅ) எனவும்,

ம்ப$_3$ (mb) என்பது ம்ம (mm) எனவும்,

மாறியது என ஆசிரியா கூறுகிறார். எழுததச்சன் (1975:242) ஆசிரியரின கூற்றை மறுத்துள்ளார். இக்கொள்கை தவறானதாகும் எனவும் ஆசிரியர் குறிப்பிட்டிருககும் இராம சரிதத்திலுள்ள தத்பவத்தின தோற்றம தவறானதாகுமென்றும கூறுகிறார். ஆனால, எழுத்தின் பற்றாக்குறையே தமிழ் மொழித தத்பவத்தின தோற்றததில ஒரு பெரிய நிகழ்ச்சியை ஏற்படுத்தி இருககிறது எனவும் மலையாள மொழியில அது சரியாக அமைந்துள்ளது எனவும குறிப்பிடுகிறாா.

தத்பவத்தின் தோற்றத்தில் சில விதிமுறைகளைச் சுட்டிக் காட்டுகிறார் இந்நூலின ஆசிரியர். மேலும் மொழியின தோற்றம குறிதது அவரது நூலின் கடைசியில ஒரு சிறிய குறிப்பு கொடுக்கப்படடுளளது. இதுவரை பாாத்த விளககங்களிலிருந்து சேஷகிரி பிரவு ஒரு நலல பணியைச செய்திருக்கிறார் என அறிந்துகொளள முடிகிறது. இலக்கணம் குறித்த அறிவு நிரமபவே அவரிடம இருந்தது தெரிய வருகிறது. இவரது பிறமொழிககடன சொற்களின் (Foreign Loan Words) தொகுப்பு, இலக்கண உலகில முதல முயற்சியாகும. இது அவரது அயராத உழைப்பை வெளிபபடுத்துகிறது. இவரது இலககணததில ஒருசில குறைகள் அஙகும இஙகும காணப்பட்டாலும மொததததில

வியாகரணமித்ரம் என்னும் இலக்கண நூல் ஓர் உயர்ந்த முக்கியமான விளக்கமுறை இலக்கணமாகும் (Descriptive Grammar). இந்நூலின் இறுதியில் கலைச்சொற்களின் பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது.

## சேஷகிரி பிரபுவின் பிற நூல்கள்

சேஷகிரி பிரபு பத்து நூற்களை வெவ்வேறு தலைப்புகளில் எழுதியுள்ளார். ஆனால், அவர் ஒரு வடமொழி அறிஞர் எனவும் இலக்கண ஆசிரியர் எனவும் எல்லோராலும் அறியப்படுகிறார்.

1. இவரது '**வியாகரணாதர்சம்**' (the "Mirror of Malayalam Grammar" pp. 125) என்னும் நூல் கோட்டயத்திலிருந்து 1903-இல் வெளி வந்த "மனோரமா பாடமஞ்சரித் தொடரில்" (Manōrama Pāṭhamanjari Series) வெளி வந்துள்ளது. இந்நூல் நடுநிலைப் பள்ளிக்குப் பாடநூலாக வைக்கப் பட்டுள்ளது. இந்நூல் 1904-இல் வெளிவந்த "வியாகரணமித்ரம்" என்னும் நூலைப் பின்பற்றியும் எ.ஆர். ராஜராஜவர்மாவின் புதிய வேற்றுமை கொள்கையை ஏற்றுக் கொண்டும் வெளி வந்துள்ளது. இந்நூல் நாமாதிகாரம் (nāmādhikhāra), தாத்வதிகாரம் (dhātvadhikara), நிபாதாவியயாதிகாரம் (nipātāvyayādhikāra), வாக்யாதிகாரம் (Vākyādhikāra) போன்ற இயல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. புணர்ச்சியில் லோபம் (lopa), ஆகமம் (agama) போன்ற கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலுக்குப் பெருமை சேர்ப்பது இந்நூலின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கும் "மலையாளம் - ஆங்கிலக் கலைச் சொற்களின் பட்டியல்" ஆகும். எழுத்தச்சன் (1975 : 253) கூறும்போது இக்கலைச் சொற்களின் பட்டியல் கேரள பாணினீயின் இலக்கண நூலின் நூற்பாக்களிலிருந்து தொகுக்கப்பட்டதாகும் எனக் கூறப்படுவதாகக் கூறுகிறார். 1896-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கேரள பாணினீயம் என்ற நூலுக்குப் பின்னர் சேஷகிரி பிரபு பல விமர்சனக் கட்டுரைகளைப் "பாஷாபோஷினி' என்னும் இதழில் 1898 முதல் 1900 வரை எழுதினார். சேஷகிரி பிரபுவின் விமர்சனத்துக்கு எ.ஆர். ராஜராஜ வர்மா பதில் அளித்திருந்தார். ஆனாலும் எதிரியின் புலமையை ஏற்றுக் கொண்டார். பின்னாட்களில் பிரபு எ.ஆர். ராஜராஜவர்மாவோடு கனிவுடன் நடந்து கொண்டதாகவும் கேரள பாணினீய மாதிரியில் வியாகரணாதர்சம் என்னும் நூலைப் படைத்ததாகவும் கூறப்படுகிறது.

2. **பாலவியாகரணம்** (Balavyakaranam, 1898) சேஷகிரி பிரபு கிருஷ்ணன் என்பவரின் துணையோடு இந்நூலை இயற்றியுள்ளார்.

வியாகரணமித்ரம் என்னும் நூல் பாலவியாகரண நூலின் இரண்டாம் பகுதியாகக் கருதப்படுகிறது.

3. **சிசுமோதகம்** (Śisumōdakam 1923) என்னும் நூல் வாக்பூஷணம் (Vāgbhuṣaṇa) என்னும் தொடரின் முதல் வெளியீடாகும்.

4. **பாலாமிருதம்** (Bālāmṛtam) என்னும் நூல் சிசுமோதகத்தின் தொடர்ச்சியாகும்.

5. **வியாகணாமிருதம்** (Vyākaraṇāmṛtam, Calicut, 1919) என்னும் நூல் மேனிலைப் பள்ளிகளுக்குப் பாட நூலாக வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல நூலாகும். (பக்கங்கள் 328).

இலக்கண ஆசிரியர் என்ற முறையில், பிரபுவின் புகழ் வியாகரணமித்ரம் என்ற நூலின் மூலம் வெளிப்படுகிறது. வியாகரணாதர்சம் மற்றும் வியாகரணாமிருதம் ஆகிய நூல்கள் உண்மையிலே அறிஞர்கள் மத்தியில் அறியப்படாதவைகளாகக் காணப்படுகின்றன.

**வாகர்த ரத்னம்** (Vāgartha ratnam) மற்றும் வாக்யோல்லாசம் (Vākyōllāsam) ஆகிய நூல்களும் ஆசிரியரால் எழுதப் பட்டவைகளாகும். ஆனால், அவை அச்சில் வெளிவரவில்லை. ஆசிரியர் கொங்கணி மொழியிலும் ஒரு இலக்கணம் எழுதியதாகவும் அதுவும் அச்சில் வெளிவரவில்லையென்றும் கூறப்படுகிறது.

# கேரள பாணினியம்

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட லீலாதிலகம், கி.பி. 1851இல் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம், கி.பி. 1859இல் எ.ஆர். ராஜராஜவர்மாவால் எழுதப்பட்ட கேரள பாணினீயம் ஆகிய மலையாள மொழியின் முக்கியமான மூன்று பேரிலக்கண நூற்களில் இன்று கேரளத்தில் பள்ளிப் படிப்பு முதல் பட்டப் படிப்புவரை மிகுந்த செல்வாக்கோடு விளங்குவது கேரள பாணினீயமே. கேரள பாணினீயம் அதன் முதல் வெளியீட்டிலேயே வரலாற்றை அடிப்படையாக்கி இயற்றப்பட்ட ஒரு மலையாள இலக்கணமாயிருந்தது. இருந்தாலும் ஊகதமுறையின் தாக்கமும் அதில் காணப்படுவதைக் காணலாம். வடமொழி இலக்கணத்தை எழுதிய பாணினி முனிவரைப் பின்பற்றி மலையாளத்துக்கு இலக்கணம் எழுதியதாகக் கேரளபாணினீய ஆசிரியரே கூறிச் செல்வதால் வடமொழி இலக்கணத்தில் காணப்பட்ட சில குறைகளும் கேரண பாணினீயத்திலும் காணப்படுவதைக் காணலாம்.

## நூலின் பதிப்புகள்

இதன் மூல நூலின் முதற்பதிப்பு 1895இல் வெளிவந்தது. அதன் பின்னர் திரு. கே.ஆர்.வீ. மேனோன் அவர்கள் நான்கு பதிப்புகளை 1950, 1956, 1964, 1966 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார். 1969ஆம் ஆண்டில் கமலாயப் புத்தக டிப்போவின் ஆதரவில் ஒரு பதிப்பு வெளிவந்தது. சாஹித்திய ப்ரவர்த்தக ஸககரண சங்கம் 1968ஆம் ஆண்டு முதற்பதிப்பை வெளியிட்டது. தொடர்ச்சியாக வெளிவந்த பிற பதிப்புகளில் டாக்டர் கே. இராகவன் பிள்ளை, திரு. கே.எம். டானியல் ஆகியோரின் முகவுரையும், குறிப்புரையும் கூடிய பதிப்பு 1970லும் 1974லிலும் வெளிவந்துள்ளன. 1971 ஜூன் 3,4 ஆகிய நாட்களில் நடைபெற்ற அகில இந்திய திராவிட மொழியியல் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோது கேரள பாணினீயத்தைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற எண்ணம் தன் மனதில் தோன்றியதாக இளையபெருமாள் (1977 : XXVII) கூறுகிறார். மூலநூலில் இல்லாத

சிறப்புப் பெயரகராதியும் எடுத்துக்காட்டகராதியும் இம்மொழிபெயர்ப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கண வேறுபாட்டுக் குறிப்புகள் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன. இளைய பெருமாள் அவர்கள் மொழி பெயர்த்த கேரளபாணினீயம் என்னும் நூல் 1977-ஆம் ஆண்டில் பல்கலைக் கழக வெளியீடாக வெளிவந்தது.

## கேரளபாணினீயம்

ராஜராஜவர்மா என்பவர் ஒரு பேரறிஞர் ஆவார். இவரது காலம் கி.பி 1863 முதல் 1918 வரையாகும். இவர் புகழ்பெற்ற அறிஞராகிய கேரள வர்மாவின் சீடராவார். திருவனந்தபுரத்திலுள்ள மஹாராஜா கல்லூரியின் சமஸ்கிருதம் மற்றும் திராவிட மொழிகளின் பேராசிரியராக ஆனார். உரைநடைக்குக் கையேடாக ஆசிரியர் ஸாஹித்ய ஸாஹியம் என்ற நூலைப் படைத்தார். இவர் எழுதிய அனைத்து நூல்களுமே பல்வேறு மறுபதிப்புகளைக் கொண்டு விளங்குவதோடு தரத்திலும் மற்ற நூல்களைவிட முதல் தரத்தில் காணப்படுகின்றன. மலையாள மாணவர்களின் பயன்பாட்டிற்காக இவர் மணிதீபிக என்னும் சமஸ்கிருத இலக்கணக் கையேட்டையும் எழுதினார். ஆசிரியர் 22 சமஸ்கிருத நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்று லகுபாணினீயம் என்பதாகும். இது இரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ளது. இவர் எழுதிய 21 மலையாள நூல்களில் கேரள பாணினீயம் முதல் இடத்தைப் பெறுகிறது. ஆசிரியர் முக்கியமான நூல்களுக்கு உரையும் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்ப்பும் பல்வேறு தனிப்பட்ட கட்டுரைகளும் எழுதியுள்ளார். கேரள பாணினீயத்தை ஆசிரியர் 1891 –1895 ஆகிய கால கட்டங்களில் எழுதி 1896–இல் கேரளவர்மாவின் ஆங்கில முன்னுரையுடன் வெளியிட்டார். இந்நூல் 370 பக்கங்களைக் கொண்டது. 357 நூற்பாக்களால் ஆனது. நூற்பாக்கள் உரைநடையினால் எழுதப்பட்டவைகளாகும். அடுத்த பதிப்பு 1917–இல் வெளிவந்தது. 21 ஆண்டுகளுக்குப் பின் வெளிவரும் பதிப்பு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு திகழ்கிறது.

முதல் பதிப்பில் முன்னுரை கிடையாது. 1917–இல் வெளிவந்த பதிப்பில் முன்னுரை முக்கிய இடத்தைப் பெறுகிறது.

ஆசிரியர் மொழியைப் பற்றிக் கூறும்போது திராவிடர்கள்தான் தென்னிந்தியாவில் பாரம்பரியமிக்கவர்கள் என்றும் ஆரியர்களின் படையெடுப்புக்கு முன்னர் அவர்கள் இந்தியாவில் எல்லா இடங்களிலும் பரவியிருந்தனர் என்றும் குறிப்பிடுகிறார். ஆரியர்களின்

படையெடுப்புக்குப் பின்னர் திராவிட மொழிகள் பெருமளவில் சமஸ்கிருத மொழியிலிருந்து கடன்பெற்று ஒரு கலப்பு நடையாகிய மணிப்பிரவாள நடை தோன்றியது.

கேரள பாணினீயத்தின் ஆசிரியர் வடமொழி இலக்கண அறிவு நிரம்பப் பெற்றவர் என்பதனை, 'இப்பேரிலக்கணம் பாணினி முனிவர் படைத்த பழைய கருவிலிட்டு வார்த்தெடுக்கப்பட்டது' என ஆசிரியரே கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது. அத்துடன் தமிழ் இலக்கணப் புதுமையும் இவரிடம் நன்கு விளங்குகிறது என்பதனை நன்னூலிலிருந்து பல மேற்கோள்கள் இவரது இலக்கணத்தில் இடம் பெற்றுள்ளமை வெளிப்படுத்துகின்றன. தென் திராவிட மொழிகளாகிய கன்னடம் மற்றும் தெலுங்கு ஆகியவற்றின் கருத்துக்களும் இந்நூலில் பரவலாக எடுத்தாளப்பட்டுள்ளன. மலையாள மொழி இலக்கணங்களாகிய லீலாதிலகம் மற்றும் குண்டர்டின் மலையாள வியாகரணம் ஆகியவற்றிலுள்ள கருத்துக்களையும் பெருமளவில் இந்நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

ஆரியர்கள் தென்னிந்தியாவில் வந்தபின் மிதமிஞ்சிய வடமொழிக் கலப்பால் மணிப்பிரவாள இலக்கியம் தோன்றிய வரலாற்றைக் கூறுகின்றார். வீடுகளில் அன்றாடம் வழங்கும் சொற்களில் வடமொழிக்கும் மலையாளத்திற்கும் பெரிதும் தொடர்பில்லை என்பது கேரளபாணினீய ஆசிரியரின் கருத்து.

திராவிட மொழி இலக்கணங்களை ஆராய்ந்த மேலை நாட்டறிஞர்களான ஆர்டன், எல்லிஸ், கால்டுவெல், கிரால், கிற்றல், குண்டர்ட், பர்னல், பெயிலி, ஸ்டீவன்ஸன் ஆகியோர் கருத்துக்களும் இந்நூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. மேலை நாட்டறிஞர்களின் நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அவர்களது முயற்சிகளைப் பாராட்டுவதோடு தம் நூலில் அவற்றைப் பயன்படுத்தியும் உள்ளார். பிறர் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல தனது சொந்தக் கருத்துக்களாகப் பலவற்றைக் குறிப்பிட்டும் உள்ளார். குறிப்பாக இலக்கணக் கூறுகளின் வரலாற்றைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக அணம் என்பது வேண்டும் என்பதிலிருந்து தோன்றியது என்கிறார் (ப.236) கேரள பாணினி சில கருத்துக்களைத் துணிவோடு தயக்கமின்றிக் கூறிவிடுவது, பாராட்டுக்குரியது. எடுத்துக்காட்டாக, மலையாளம் தோன்றியது தமிழின் துணை மொழியாகவே என்ற காரியத்தில் இனி எந்த விவாதத்திற்கும் இடமிலலை (ப.61) எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

இலக்கணப் பயிற்சியைப் போன்றே இந்நூலின் ஆசிரியர் இலக்கியப் பயிற்சியும் நிரம்பப் பெற்றவராக விளங்குகிறார். இந்நூலில் வடமொழி இலக்கியங்களாகிய இருக்குவேதம், குமாரசம்பவம், சாணக்கிய சூத்திரம், பஞ்சதந்திரம், பாரதம், ரகுவம்சம், சாகுந்தலம் ஆகியனவும் மலையாளமொழி இலக்கியங்களாகிய இராமசரிதம், உண்ணிநீலி சந்தேசம், கிருஷ்ண காதை, குஞ்சன் நம்பியார் பாடல்கள், சந்திரோத்சவம், சம்பு நூற்கள், சிவபுராணம், தச்சொள்ளிப் பாட்டு, நளசரிதம், நிரணம் கவிஞர்களின் பாடல்கள் ஆகியனவும் தமிழ் இலக்கியங்களாகிய கபிலர் பாடல், கம்பராமாயணம், குலசேகர ஆழ்வார் பாடல்கள் ஆகியனவும் சான்றுகளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலில் வட்டார வழக்குகளும் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன. உவமை, உருவகம் முதலியனவும் இந்நூலில் சிற்சில இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, இலக்கணத்தின் பெருமையை விளக்க ஓர் உவமை கூறப்பட்டுள்ளது. அதாவது இலக்கணம் இல்லாத மொழி அரசன் இல்லாத நாட்டுக்குச் சமம் என ஒப்பிடுகிறார்.

உவமை, உருவகம் போன்ற ஆற்றலுள்ள பல மரபுச் சொற்றடர்களையும் இந்நூலாசிரியர் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் நகைச்சுவையும் இடையிடையே காணப்படுகிறது.

## நூலின் அமைப்பு

194 நூற்பாக்களைக் கொண்ட இந்நூலுக்கு ஆசிரியரே உரையும் எழுதியுள்ளார். இந்நூல் ஒரு நீண்ட முகவுரையுடன் புணர்ச்சியதிகாரம், வினையடிச் சொல்லதிகாரம், பேதகச் சொல்லதிகாரம், இடைச் சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம், சொற்களின் தோற்றம் ஆகிய ஏழு இயல்களைக் கொண்டுள்ளது.

மலையாள நாட்டின் வரலாற்றுடன் ஆசிரியர் இந்நூலை இயற்றுகிறார். பின்னர் மலையாள மொழியின் தோற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். மலைநாட்டில் குடியிருந்தவர்கள் தமிழர்களே என்றும் அந்தத் தமிழே மலையாளமாக உருமாறிப் போயிருப்பதாகவும் கூறுகிறார். மலைகளின் இயற்கை அமைப்பு, மலையாளம் தனியொரு மொழியாக மாறுவதற்கு முக்கிய காரணமாக விளங்கியது எனவும் குறிப்பிடுகின்றார். அதன்

பின்னர் மலையாள மொழியின் சிறப்பியல்புகள் விளக்கப்படுகின்றன. அதாவது,

| | |
|---|---|
| அ. மெல்லினமாக்கல் | எ.கா. மாங்காய் மாங்ங |
| ஆ. உயிர்ஒலி மாற்றங்கள் | எ.கா. படுதல் பெடுதல் |
| இ. அண்ணஒலித்திரிபு | எ.கா. பிடித்து பிடிச்சு |
| ஈ. பால் வேறுபாட்டொழிப்பு | எ.கா. அவன் குடிச்சு<br>அவர் குடிச்சு<br>அவள் குடிச்சு |
| உ. உயிர் குறுக்கம் | எ.கா. மழை மழ<br>சீதை சீத<br>மாலா மால |

போன்ற தமிழ் – மலையாள மொழிகளின் வேறுபாடுகள் விளக்கப் படுகின்றன. மலையாள மொழியில் பயன்படுத்தப்படும் 'ற' என்னும் ஒலி ஆங்கில மொழியின் எழுத்தாகிய 'T' –க்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததைப் பல சான்றுகள் மூலம் விளக்குகிறார். மலையாள மொழியின் வளர்ச்சி நிலையில் காணப்பட்ட மூன்று கால கட்டங்களைக் குறித்தும் குறிப்பிடுகின்றார். முதலாவது கால கட்டமாக முற்கால நிலை என்றும், அதன் காலம் கி.பி. 825 முதல் 1325 வரையுள்ள கால கட்டமென்றும், இரண்டாவது காலகட்டத்தை இடைக்கால நிலை என்றும், அதன் காலம் கி.பி. 1325 முதல் 1625 வரை என்றும் மூன்றாவது கால கட்டத்தைத் தற்கால நிலை என்றும், அதன் காலம் கி.பி. 1625க்குப் பின்னர் என்றும் குறிப்பிடுகின்றார். நிரணம் என்றழைக்கப்படும் கவிஞர்கள் மணிப்பிரவாள நடை செயற்கையான ஒன்று என்று கண்டு வடமொழி வேற்றுமை உருபுகளைக் குறைத்துத் தங்களது இலக்கியத்தைப் படைத்தனர். அதன் பிறகு எழுத்தச்சனின் காலத்தில் மலையாளம் புதிய பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. அதனை ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார். எழுத்தச்சன் ஆரிய எழுத்தை ஏற்றுக் கொண்டு வடமொழி யாப்பு விதிகளைத் தமிழ் விருத்தங்களில் கலந்து இயற்றப்பட்ட இலக்கியங்களைப் படைத்த ஆசிரியர் சான்றுகள் தந்து விளக்குகிறார்.

கேரள பாணினீயத்தின் முகவுரையிலேயே எழுத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. உயிர் எழுத்துச்கள் 16-ம் மெய்யெழுத்துக்கள் 37-ம் ஆக 53 எண்ணிக்கையுள்ள ஒலிகளுக்கு வர்ணம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. எழுத்தச்சனது காலம் வரை மலையாளிகள் வட்டெழுத்தைப் பயன்படுத்தி வந்தனர். சமீப காலம் வரை இந்த எழுத்து மலையாள நாட்டில் வழக்கில் இருந்து வந்துள்ளது. வட்டெழுத்துத் தமிழர்களின் எழுத்து வரிசையாக இருந்ததால் அதில் தமிழ் எழுத்துக்கள் மட்டுமே காணப்பட்டன. வடமொழி ஒலிகளுக்கு எழுத்துக்கள் அதில் இல்லை. இக்குறையைப் போக்க எழுத்தச்சன் கிரந்த எழுத்துக்களின் தலையும் வாலும் முறித்து மேனியாக்கி மலையாளத்தில் தற்போது வழங்கப்படும் எழுத்து வரிசையை அமைத்தார். எழுத்து வரிசையைப் பொறுத்த அளவில் மலையாளத்தில் தமிழிலும் வடமொழியிலும் உள்ள எல்லா எழுத்துக்களும் தேவைப்படுகின்றன. வடமொழிச் சொற்களைச் சரியாக எழுதுவதற்காக வடமொழி எழுத்துக்களை ஏற்றுக்கொண்டு அதோடு தமிழில் உள்ள சிறப்பெழுத்துக்களாகிய ற, ழ, ள, ன ஆகியவற்றைச் சேர்த்து மலையாள எழுத்து வரிசை இயற்றப்பட்டது. குற்றியலுகரத்தில் மலையாளத்திற்கும் தமிழிற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. மலையாளத்தில் சொல்லிணக்கத்தை வரையறைப்படுத்துவது குற்றியலுகரமாகும். கேரள பாணினீயம் நூற்பா 89-இல் "செய்து" என்பதிலுள்ள குற்றியலுகரம் வினையெச்சமாகவும் (செய்து) முற்றியலுகரம் வினைமுற்றாகவும் (செய்து) அமைகின்றன எனக் கூறுகிறார். பல மெய்யிறுதிச் சொற்களில் தாங்கொலியாகக் குற்றியலுகரம் அமைகின்றது.

எ.கா. **வாக்கு, நாடு, காடு**

**மனஸ், மனஸ்ஸ**

எனவே, குற்றியலுகரம் வல்லெழுத்தோடே வரவேண்டும் என்ற விதி பின்பற்றப்படவில்லை.

அடுத்து எழுத்து விகாரங்கள் விளக்கப்பட்டுள்ளன. எழுத்துக்களுக்குப் பல காரணங்களால் விகாரம் ஏற்படுவது கேரள பாணினீயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

1. **அறியாதார் அறிவின்மையால் எழுத்துக்களை சிதைக்கின்றனர்.**

2. **எல்லா மொழிகளுக்கும் பொதுவான எழுத்து விகாரங்கள்**

**3. வம்ச பாரம்பரிய முறையில் எய்தும் சில எழுத்து விகாரங்கள்.**

அகர எகரப் போலி என்பதை மலையாள மொழியில் காணலாம். எவ்வாறெனின்,

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | தய | தெய | லஜ்ஜ | லெஜ்ஜ |
| | ஜனம் | ஜெனம் | ரவி | ரெவி |
| | கண்டம் | கெண்டம் | பந்து | பெந்து |

அதுபோன்றே இகர எகரப் போலி

| | | |
|---|---|---|
| எ.கா. | இட | எட |
| | விறகு | வெறகு |
| | நிலம் | நெலம் |

உகர ஒகரப் போலி

| | | |
|---|---|---|
| எ.கா. | புக | பொக |
| | குட | கொட |

அவ் ஔகாரப் போலி

எ.கா. அவ்வண்ணம் ஔவண்ணம்

ககர வகரப் போலி

எ.கா. தடகுன்னு தடவுன்னு

ஞகர நகரப் போலி

எ.கா. ஞண்டு நண்டு

டகர ளகர ழகரப் போலி

| | | |
|---|---|---|
| எ.கா. | நாடிக | நாழிக |
| | சம்ராட் | சம்ராள் |

ணகர ளகரப் போலி

எ.கா. துணியுன்னு துளியுன்னு

னகர லகரப் போலி

எ.கா. பொன்குடம் பொல்குடம்

தகர லகரப் போலி

எ.கா. உத்சவம் உல்சவம்

ககர பகர விகற்பம்

எ.கா. கேள்க்கான் கேள்ப்பான்

மகர வகரப் போலி

எ.கா. வண்ணான் மண்ணான்

யகர நகரப் போலி

எ.கா. யான் நான்

சகர தகரப் போலி

எ.கா. வாசல் வாதல்

ரகர றகரப் போலி

எ.கா. சிரிக்குக சிறிக்குக

ழகர ளகரப் போலி

எ.கா. அப்போழ் அப்போள்

ஆகியன கேரளப் பாணினீயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## புணர்ச்சி

முகவுரைக்கு அடுத்த இயலாகப் புணர்ச்சியதிகாரம் அமைந்துள்ளது. புணர்ச்சி அதிகாரத்தில் சந்தி விதிகள் தரப்பட்டுள்ளன. ஒன்றோடொன்று சேரும் எழுத்துப் புணர்ச்சியின் இடவேறுபாடு பற்றிப்

பாணினி முதலிய வடமொழி இலக்கண ஆசிரியர்கள் பகுத்தது போன்று மலையாளத்திலும் பொதுப்புணர்ச்சியை,

1. பத இடைப்புணர்ச்சி

எ.கா. **மரம் + இல் > மரத்தில்**

2. மொழி இறுதிப் புணர்ச்சி

எ.கா. **பொன் + பூ > பொல்ப்பூ**

3. இருநிலைப் புணர்ச்சி

எ.கா. **மணி + அற + இல் > மணியறயில்**

என மூன்று வகைகளாக ஆசிரியர் வகைப்படுத்துகிறார். அடுத்து, புணர்ச்சியில் சேரும் எழுத்துக்களின் உயிர் மெய் வேறுபாடுகளின் அடிப்படையில் உயிரொடு உயிர் சேரும் போது அமைவது உயிர்ப்புணர்ச்சி.

எ.கா. **மழ + அல்ல > மழயல்ல**

எனவும்,

உயிர் மெய்யோடு புணரும்போது அமைவது உயிர்மெய்ப் புணர்ச்சி

எ.கா. **தாமர + குளம் > தாமரக்குளம்**

எனவும், மெய் உயிரோடு புணரும்போது அமைவது மெய் உயிர்ப்புணர்ச்சி

எ.கா. **கண் + இல்ல > கண்ணில்ல**

எனவும், மெய் மெய்யோடு புணரும்போது அமைவது மெய்ப்புணர்ச்சி.

எ.கா. **நெல் + மணி > நென்மணி**

எனவும், பொதுப்புணர்ச்சியை நான்கு வகைப்படுத்துகிறார்.

புணர்ச்சியில், எழுத்துக்களின் விகாரங்களின் அடிப்படையில், புணர்ச்சியைக் கெடுதல், தோன்றுதல், இரட்டுதல், திரிதல் என நான்காக வகைப்படுத்துகிறார்.

புணரும் எழுத்துக்களில் ஒன்று மறைந்தால் அது கெடுதற் புணர்ச்சி எனப்படும்.

எ.கா. அது + அல்ல > அதல்ல

புணரும்போது வேறொரு எழுத்து வந்து சேர்வது தோன்றற் புணர்ச்சி எனப்படும்.

எ.கா. மழு + இல்ல > மழுவில்ல

புணரும்போது ஏதாவது ஒன்று இரட்டித்து வருமானால் அது இரட்டற் புணர்ச்சி எனப்படும்.

எ.கா. அவிடெ + போயி > அவிடெப்போயி

புணரும்போது ஒரு எழுத்து மற்றொரு எழுத்தாக மாறுவது திரிதற் புணர்ச்சியாகும்.

எ.கா. எண் + நூறு > எண்ணூறு

எந்தெந்த வேளைகளில் கெடுதல், தோன்றல், இரட்டல், திரிதல் போன்ற புணர்ச்சிகள் தோன்றுகின்றன என்பதற்கான விதிமுறைகளை ஆசிரியர் விரிவாகக் கொடுத்துள்ளார். தமிழ் இலக்கணங்களிலும் இப்புணர்ச்சி முறைகளே கூறப்பட்டுள்ளன.

## பதவியல்

புணர்ச்சியதிகாரத்திலே இரண்டாவது இயலாகப் பதவியல் அமைகிறது. கேரள பாணினி ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒலிகளைச் சேர்த்துக் கூறும் எழுத்துக்களின் கூட்டத்திற்குச் சொல் (கரிம்பு) என்றும்; உருபு முதலியவை சேர்ந்தோ சேராமலோ வழங்கப்பட்டு வரும். சொல்லைப் 'பதம்' (கிழவன்) என்றும் கூறுகிறது. அடுத்து எல்லாச் சொற்களையும் வாசகம் (குடம்), தியோதகம் (இடைச்சொல்) என இரண்டு வகைகளில் அடக்கிவிடுகிறது. வாசகம் என்பது வெளிப்படையாக ஒரு பொருளையோ வினையையோ /குணத்தையோ சுட்டிக் காட்டுவதாகும்.

வெளிப்படையாக ஒரு பொருளைச் சுட்டாது, இரண்டு வெளிப்படைப் பொருளின் தொடர்பைக் காட்டுவது தியோதகம் எனப்படும்.

குடம், விளக்கு, செறிய, வலிய போன்ற சொற்களைக் கேட்கும் போது அதற்குரிய பொருள் வெளிப்படையாகத் தோன்றுகின்றன. எனவே, இச்சொற்கள் வாசகங்கள் என அழைக்கப்படுகின்றன. கொண்டு, உம், எங்கில், ஓ ஆகிய சொற்கள் எந்தவொரு பொருளையும் சுட்டாமல் காணப்படுகிறது. ஆனால், இச்சொற்கள் வேறொரு பதத்தோடு சேரும்போது மாத்திரமே அதன் பொருள் வெளிப்படுவதைக் காணலாம். இச்சொற்கள் தான் தியோதங்கள் எனப்படுகின்றன.

வாசகம் என்பதைப் பொருளின் அடிப்படையில் பெயர் (மரம்), வினை (வரும்), பேதகம் (கறுத்த) என மூன்றாக வகைப்படுத்துகின்றார். தியோகத்தை நிபாதம் (உம்) எனவும், அவ்வியம் (என்ன, என்ற) எனவும் இரண்டாகப் பிரிக்கின்றனர். மீண்டும் வழக்கு அடிப்படையில் அவை கதி (கொண்டு ஆல்), கடகம் (உம்), வியாட்சேபகம் (அய்யோ) வினா விடைச் சொல் (ஓ), தோற்றம் (தன்னெ) எனப் பிரிக்கப்படுகின்றன. வாசகத்தில் கூறப்பட்டிருக்கும் பெயர், வினை, பேதகம் ஆகிய சொற்களுக்கும் தியோகத்தில் கூறப்பட்டிருக்கும் நிபாதகம் என்ற சொல்லும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

பெயர்கள், பொருட்பெயர் (ராமன்), குணப்பெயர் (அழகு), வினைப்பெயர் (படிப்பு) எனவும்; வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினை (உறங்குதல்), செயப்படுபொருள் குன்றா வினை (உண்ணுதல்) எனப்பொருள் அடிப்படையிலும், பகுதிகளின் அடிப்படையில் தன்வினை (ஓடுதல்), பிறவினை (ஓட்டுதல்) எனவும்; பொருள் வேறுபாடில்லாமல் கால உருபாகிய 'க்கு' என்பதைச் சேர்க்க வேண்டிய தன்வினையாக வரும் வினைகளைக் காரிதம் (கேள்க்குன்னு) எனவும் 'க்கு' சேர்க்காமல் வரும் தன்வினைகள் அகாரிதம் (பிரியுன்னு) எனவும் பிறவினையாகிய 'க்க்' எடுத்து வந்தாலும் அது பிற தூண்டுதலால் செய்தது என்ற சிறப்புப் பொருளில் வருவதும் ஆக காரிதம், அகாரிதம், பிறவினை என்ற பிரிவும் சிறப்பினடிப்படையில் முற்றுவினை (செய்யுங்ங) பற்றுவினை (செய்யுன்ன) எனவும்; மேலே கூறப்பட்டவற்றிற்குச் சில உட்பிரிவுகளும் காணப்படுகின்றன.

பேதங்கள் (உரிச்சொற்கள்) ஏழு வகைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. பெயர் விசேடணம் பெயரெச்சத்தில் தோன்றிய உரிச்சொல் | (கறுத்த நூல்) |
| 2. வினை விசேடணம் வினையெச்சத்தில் தோன்றிய உரிச்சொல் | (கூடெப் போகுந்து) |
| 3. தூயன | (நல் நன்முத்து<br>திரு திருமுகம்) |
| 4. பொதுப்பெயர் | (எந்து எந்துகார்யம்) |
| 5. எண் | (ஒரு ஒரு பசு<br>இரு இருபது<br>ஏர் ஏரேழு) |
| 6. விபாவகம் | (மிடுக்கு மிடுக்கனாய புருஷன்) |
| 7. அளவை | (நாழியரி, ஒருபிடி எள்ளு) |

*இப்பகுதியை முடிப்பதற்கு முன்னர்த் தமிழில் சொற்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன என்பதைக் குறித்து நன்னூலார் கூறியதை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். நன்னூலார் சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என்று கூறுகிறார் எனவும், பகுபதங்களைக் குறைந்தது இரண்டு பாகங்களாகவும் மிகுந்தது 6 பாகங்களாகவும் பகுக்கலாம் எனவும், பகாபதங்கள் பெயர், வினை, இடை, உரி என 4 வகையாக உள்ளன எனவும் கூறிய கூற்றைக் கேரளப் பாணினீய ஆசிரியர் சுட்டிக்காட்டி நன்னூலார் கூறிய 6 பாகங்களாகிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றில் பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய மூன்றே மலையாளத்தைப் பொறுத்த அளவில் போதும் எனக் கருதுகிறார்.*

## பகுதி விகுதிகள்

*புணர்ச்சியதிகாரத்தில் மூன்றாவது பகுதியாகிய பகுதிவிகுதிகள்*

கூறப்பட்டுள்ளன. நன்னூலார் கூறிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவை இந்நூலில் விளக்கப்படுகின்றன. ஆனால், மலையாளத்தைப் பொறுத்த அளவில் பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய மூன்றே போதுமென்பது கேரள பாணினீய ஆசிரியரின் கருத்தாகும்.

சொல்லின் உருவம் இப்பகுதியில் பேசப்படுகிறது. பகுதி, விகுதிகள், ஆகியன இணைந்து ஒலி உருவமாகிய சொல்லைத் தருகின்றன. பகுதி, விகுதிகள் சேரும்பொழுது சில சொற்களின் பொருத்த அழகிற்காக இடையில் சில எழுத்து சேர்க்க வேண்டியது வரும். அந்த எழுத்துக்களுக்கு இடைநிலை எனப்பெயர். பகுதியும் இடைநிலையும் சேர்ந்த பகுதிக்கு அங்கம் என்று பெயர் கொடுக்கப்படுகிறது.

எ.கா. மரத்தின்றெ என்ற சொல்லில் 'மரம்' என்பது பகுதி. 'இன்' என்பது இடைநிலை. 'டெ' என்பது வேற்றுமை உருபு. மரம் என்னும் பகுதியும் இன் என்னும் இடைநிலையும் சேர்ந்து மரத்தின் என்ற பாகம் தோன்றுகிறது. மரத்தின் என்ற பாகமே அங்கம் எனப்படும்.

கேரள பாணினீய ஆசிரியர் பகுதி, அங்கம் விகுதிகள் ஆகியவற்றிற்குக் கையாண்டிருக்கும் உவமை போற்றுதலுக்குரியதாகும். சொல்லை ஒரு மரத்திற்குக் கற்பனை செய்கிறார். ஒரு சொல்லில் காணப்படும் பகுதி அம்மரத்தின் ஆணி வேருக்கும், அங்கம் அம்மரத்தின் அடிமரத்திற்கும் விகுதிகள். அம்மரத்தின் மேல் ஒன்றாகச் சேர்ந்து நிற்கும் கிளைகளுக்கும் ஒப்புமைப்படுத்திக் கூறி இருப்பது போற்றுதற்குரியது.

பெயர்ச்சொற்களில் காணப்படும் உருபுகள் பால் உருபு, எண் உருபு, வேற்றுமை உருபு என மூன்று வகைகள் உள்ளன. இவ்வாறு உருபுகள் சேர்ந்த பெயர்களுக்கு மரம், மரங்ஙள், மரங்ஙளெ ஆகிய உருவ வேறுபாடுகள் உண்டாகின்றன. அதுபோன்றே வினைகளில் காலம் முதலிய உருபுகள் சேர்ந்து வீணு, வீழ்ந்து, வீழும் போன்ற உருவ வேறுபாடுகள் உண்டாகின்றன என்றும் பேதங்களுக்கு இம்மாதிரியான உருபுகள் சேர்ந்த வடிவ வேறுபாடுகள் இல்லை என்றும் ஆசிரியர் 40வது நூற்பாவில் கூறுகிறார்.

கேரள பாணினீய ஆசிரியர் வேற்றுமைகளுக்கு வடமொழியினின்று வேறுபட்டவகையில் தனிப்பிரிவுகள் அமைக்கின்றார். தமிழைப் போன்று எட்டு வேற்றுமைகள்

கூறப்படுகின்றன. வேற்றுமைகளை விபக்தி மற்றும் காரகங்கள் எனக் குறிப்பிடுகிறார். விபக்தி என்பதனை வேற்றுமைப்போலி எனப் பெயரிட்டழைப்பதைக் காணலாம்.

வேற்றுமைகளைத் தொடர்ந்து கால இடைநிலைகள் விளக்கப்பட்டுள்ளன. இறந்த காலத்தைக் குறிக்கும் 6 உருபுகளும் அவை வரும் வினையடிகளும் குறிப்பிடப்படுகின்றன. கால இடைநிலைகளைத் தொடர்ந்து வினைப்பாகுபாடுகள் குறிப்பிடப்படுகின்றன. வினைச் சொல் முற்றுவினை மற்றும் பற்றுவினை என இருவகைப்படும் எனக் கூறுகிறது.

முகவுரை, புணர்ச்சியதிகாரம் ஆகிய இயல்களுக்கு அடுத்தபடியாகப் பெயரதிகாரம் என்ற இயல் அமைகிறது. பெயரதிகாரத்தில் முதல் பகுதியாகப் பாலியலும் (நூற்பா 41–48), இரண்டாம் பகுதியாக எண்ணியலும் (நூற்பா 49–54) மூன்றாம் பகுதியாக வேற்றுமையியலும் (நூற்பா 55–64), நான்காம் பகுதியாக வேற்றுமைப் போலியியலும் (நூற்பா 65 –74), ஐந்தாம் பகுதியாகக் காரகவியலும் (நூற்பா 75–90), ஆறாம் பகுதியாகத் தத்திதவியலும் (நூற்பா 91–95) விளக்கப்பட்டுள்ளன.

## ராஜராஜ வர்மாவின் பிற இலக்கண நூல்கள்

கேரளபாணினீயத்தை அடிப்படையாகக் கொண்டு ராஜராஜவர்மா மாணவர்களின் பயன் கருதி மூன்று இலக்கணங்களை எழுதியுள்ளார். அவையாவன:

1. **சப்தஸோதினி (மூன்றாவது வெளியீடு, திருவனந்தபுரம் 1908, புதிய பதிப்பு 1971)**
2. **ப்ரதமவியாகரணம் (முதல் வெளியீடு, திருவனந்தபுரம் 1905, மறுபதிப்பு, 1968)**
3. **மத்யமவியாகரணம் (முதல் வெளியீடு, திருவனந்தபுரம் 1907, புதிய பதிப்பு, 1970)**

இவை முறையே மேனிலை, தொடக்க மற்றும் நடுத்தர பள்ளிகளுக்கானவைகளாகும். இவை பெரும்பாலும் கேரள பாணினீயத்திலுள்ள விதிகளைக் கொண்டு காணப்பட்டாலும் ஆசிரியர் வேண்டாத விதிகளை விலக்கிப் பொருள் நிலையில் பல்வேறு

விளக்கங்களைத் தெளிவாகக் கொடுத்துள்ளார்.

சப்தஸோதினி என்னும் இலக்கணம் 175 பகுதிகளைக் கொண்டு எழுத்தியல் (Phonology); உருபனியல் (Morphology); தொடரியல் (Syntax); விளக்கவியல் (Etymology) என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கேரள பாணினீயத்தை முழுவதுமாகப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளது இந்நூல்,

ப்ரதமவியாகரணம் என்னும் நூல் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்காக இயற்றப்பட்டதால் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கபபடவில்லை.

நடுத்தரப் பள்ளி மாணவர்களுக்கான (Middle School Students) இலக்கணமாகிய மத்யம வியாகரணம் (1907) டாக்டர் குண்டர்ட்டின் இலக்கணத்தைப் பெருமையாகக் கூறுவதோடு அதில் காணப்படும் குறைபாடுகளையும் வெளிப்படுத்தக் காணலாம். குறைபாடுகளாக ஆசிரியர் கூறுவன:

1. **கலைச் சொற்கள் மற்றும் தொடர்கள் இந்நூலில் சரியாகக் குறிப்பிடப்படவில்லை.**

2. **குழப்பமும், மீண்டும் கூறலும், பொருள் நிரல் சரியான முறையில் அமைக்கப்படாமையும் காணப்படுகிறது.**

ஆசிரியர் மேலும் குறிப்பிடுகையில் அவரது கேரளபாணினீயம் பாணினீய முறையைப் பின்பற்றி அமைந்துள்ளதாகவும் அது திறனாய்வு முறையில் அமைந்துள்ளதால் ஆசிரியர் ஆங்கில முறையைத் தனது சப்தஸோதினி போன்ற இலக்கணங்களுக்கு மாற்றிக் கொண்டதாகவும் கூறுகிறார். கலைச் சொற்களைப் பொறுத்தமட்டில் டாக்டர் குண்டர்ட் அவரது மொழி அர்ப்பணத்துக்கு ஆற்றியுள்ள சேவை மக்களால் பெருவாரியாகப் போற்றப்பட்டாலும் பல இலக்கணச் சொற்கள் கேரள மக்களின் ரசனைக்குப் பொருந்தாத நிலையில் காணப்படுவதாகவும் குறிப்பிடுகிறார்.

பழைய இலக்கண அமைப்புகளின் கண்டுபிடிப்பு முயற்சிகளில் ராஜராஜ வர்மா இரு முக்கியமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார்.

1. **வேற்றுமைகளின் பெயர் மாற்றம் பெற்றிருப்பது.**

2. **ப்ரகாரம் அல்லது MOOD என்பதை ஒரு தனி கூறாக**

ஏற்றுக்கொள்வது.

*செய்யணம், செய்யாம் போன்ற வடிவங்கள் தனிக் கூறாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. -அணம் (வேணம்) -ஆம் (ஆகாம்) என்னும் உருபும் அவற்றின் மூல வடிவங்களை இழந்து வெறும் உருபுகளாகக் காட்சி அளிக்கின்றன. குண்டர்ட் கூறியிருப்பது போன்று செய்யட்டே, செய்வின் ஆகியன அனுபிரயோகத்தில் அதாவது துணைவினைகளில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.*

*ராஜராஜ வர்மா தனது இலக்கணத்தில் புதிய கலைச்சொற்களை ஆக்கியிருப்பது குறித்துக் கூறும்போது வடமொழிச் சொற்களையே முடிந்த அளவு பயன்படுத்தி இருப்பதாகக் கூறுகிறார். இந்நூலின் ஆசிரியர் சில தலைப்புகளைத் தெளிவாக விளக்குவதற்கு அதிக முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.*

*கேரளம் பல சாதிகளையும் சமூகங்களையும் கொண்டு விளங்குவதால் மறுபெயர்கள் (Pronouns) குறித்துப் பார்க்கும்பொழுது பல்வேறு சொற்களைக் கூறுகிறார்.*

## படர்க்கை

*அவன், இவன் ஆகியன பொதுவான வடிவங்களாகும். மதிப்புயர் வடிவங்களாக (Honorific forms)*

**1. அயாள் (அந்த மனிதன்) இயாள் (இந்த மனிதன்)**

**2. அத்தேகம் (இலக்கியத்தில் 'அந்த உடல்')**

**இத்தேகம் (இலக்கியத்தில் 'இந்த உடல்')**

**3. அங்ஙுன்னு (அங்ஙு நின்னு, இலக்கியத்தில் 'அங்கே இருந்து')**

**இங்ஙுன்னு ( இங்ஙு நின்னு, இலக்கியத்தில் 'இங்கே இருந்து')**

**4. அவிடன்னு (அம்விடெ நின்னு, இலக்கியத்தில் 'அங்கே இருந்து')**

**இவிடன்னு (இவிடெ நின்னு, இலக்கியத்தில் 'இங்கே இருந்து')**

## முன்னிலை

*'நீ' என்பது பொதுவான சொல். 'தான்' என்பதும் பயன்பாட்டில் உள்ளது. (சொல்லப்படுகிறவன், சொல்லுகிறவனுக்கு இணையாக காணப்பட்டால்). மற்ற மதிப்புயர் வடிவங்களாவன :* (Honorific forms):

1. அங்ங் (இலக்கியத்தில் அங்கே), இங்ங் (இலக்கியத்தில் இங்கே)
2. அங்ஙுன்னு (இலக்கியத்தில் அங்கே இருந்து)

   இங்ஙுன்னு (இலக்கியத்தில் இங்கே இருந்து)
3. அவிடுன்னு (இலக்கியத்தில் அங்கே இருந்து)

   இவிடுன்னு (இலக்கியத்தில் இங்கே இருந்து)
4. திருமேனி (இலக்கியத்தில் வணங்கப்படத்தக்க உடல்)
5. *கல்பிச்சு (இலக்கியத்தில் ஆணையிடப்பட்டது).*
6. திருமணஸ்சு கொண்டு (இலக்கியத்தில் வணங்கப்படத்தக்க மனதால்)
7. ஸமக்ஷம் (இலக்கியத்தில் தங்களுடைய மதிப்பிற்குரிய கண்ணணின் முன்னால்)
8. சந்நிதாநம் (இலக்கியத்தில் தங்களுடைய பெரிய தரிசனத்தின் முன்னால்).

## தன்மை

'ஞான்' என்பது முறையான வடிவம். தாழ்ந்தவர்கள் கூறும்போது

*ஒருமை: அடியன் (தங்கள் வேலைக்காரன்)*

*பன்மை: அடியங்ங (தங்கள் தாழ்மையுள்ள வேலைக்காரர்கள்)*

# ஐரோப்பியர்களின் மலையாள இலக்கணங்கள்

மலையாள மொழிக்கு மலையாள அறிஞர்கள் இலக்கணம் எழுதியிருப்பதைவிட ஐரோப்பியர்களின் பங்கு அதிகமாக உள்ளது எனலாம். காரணம் கேரளாவில் 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் வருகை பெருமளவில் இருந்தது. ஐரோப்பியர்கள் வணிகத்தின் பொருட்டும், கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கிலும் கேரளத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வந்து குடியேறினர். கேரளத்தில் மக்களோடு ஒன்றித்து வாழ அவர்களது மொழியாகிய மலையாளம் மிகவும் தேவையான ஒன்றாகக் காணப்பட்டது. மலையாள மொழி தெரிந்திருந்தாலே அவர்களால் அம்மக்களோடு, கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும் என்ற கட்டாயத்தின் பேரில் அம்மொழியைக் கற்று அதற்கு இலக்கணங்களும் எழுத முற்பட்டனர். அம்முயற்சியில் உருவானதே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மலையாள இலக்கணங்களாகும்.

1. ட்ருமண்ட் எழுதிய "Grammar of the Malabar Language"
2. ஸ்பிரிங் எழுதிய "Outlines of a Grammar of the Malayalim Language as spoken in the provinces of North and South Malabar and kingdom of Travancore and Cochin".
3. சோசப் பீட் எழுதிய "A Grammar of the Malayalim Language"
4. ஜார்ஜ் மாத்தன் எழுதிய "மலயாழ்மயுடெ வியாகரணம்"
5. கார்த்வெயிட் எழுதிய "மலையாள பாஷா வியாகரண சங்கிரகம்"

6. ஃப்ரொன்மேயர் எழுதிய "A Progressive Grammar of the Malayalam Llanguage for Europeans".

மேலே குறிப்பிடப்பட்ட மலையாள இலக்கணங்களில் ஜார்ஜ் மாத்தன மற்றும் கார்த்வெயிட் எழுதிய இலக்கணங்கள் மலையாள மொழியிலேயே பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக எழுதப்பட்ட இலக்கண நூல்களாகும். மற்ற இலக்கணங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்நூல்கள் மலையாள மொழி அறியாதவர்கள் அம் மொழி இலக்கணத்தை அறிந்து கொள்ளும் நோக்கிலும் மலையாள மொழி அறிஞர்களுக்கும் பயன்படும் நோக்கிலும் எழுதப்பட்டுள்ளன. ஐரோப்பிய அறிஞர்கள் மலையாள மொழிக்கு இலக்கணம் எழுதும் போது தங்களது மொழி இலக்கணப் பாகுபாட்டை மனதில் நிறுத்தி மொழியியல் பார்வையோடு எழுதியிருப்பதைக் காணலாம்.

எல்.வி. இராமசுவாமி ஐயர் எழுதிய "கிறித்தவர்களால் எழுதப்பட்ட பதினெட்டாம் நூற்றாண்டு மலையாள உரைநடை" என்னும் ஆங்கிலக் கட்டுரையின் வாயிலாக இலத்தீன் மொழியிலும் மலையாள இலக்கணங்கள் எழுதப்பட்டிருப்பது தெரிய வருகின்றது.

மேலே கூறப்பட்ட எல்லா இலக்கண நூல்களின் தோற்றம், அவற்றின் அமைப்பு முறைகள் மற்றும் உட்பிரிவுகள் இப்பகுதியில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. கால வரிசையின் அடிப்படையில் வெளிநாட்டவரால் எழுதப் பட்ட இலக்கணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இங்குத் தரப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்துக் கீழே காண்போம்.

## 1. ட்ருமண்ட்டின் மலபார் மொழி இலக்கணம்

இராபர்ட் ட்ருமண்ட்டின் Grammar of the Malabar Language என்னும் பழைய மலையாள இலக்கணம் 1799–இல் மும்பையிலுள்ள கௌரியர் அச்சகத்தால் வெளியிடப்பட்டது. தற்பொழுது இந்நூல் மிக அரிதாகவே காணப்படுகிறது. இந்நூலில் உள்ள விரிவான முன்னுரை மிகவும பயனுள்ள ஒன்றாகும். ஆசிரியர் மும்பையிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான மருத்துவ நிறுவனத்தில் மருத்துவராகப் பணி புரிந்தார். மைசூர் யுத்தத்திற்குப் பிறகு மலபார், கம்பனியின் ஆளுகைக்குள் வந்தபொழுது நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் செல்வதற்கு உள்நாட்டு மொழியாகிய மலையாளம் தெரிந்திருப்பது மிகவும அவசியமாகக் காணப்பட்டது. ட்ருமண்ட் என்பவர் மலையாளம் அறிந்திருந்தார். அவா தனது மலையாள அறிவை மேலும்

வளர்த்துக்கொள்ள விரும்பிக் கேரளாவுக்கு வந்து கொச்சியில் லூயிஸ் என்னும் பாதிரியாருடன் 1796–இல் வந்து தங்கினார். பாதிரியார் மலையாளத்தில் மிகவும் புலமை பெற்றவராக விளங்கினார். இவர் தனது லத்தீன் குறிப்புகளை ட்ருமண்ட்டுக்கு தாராள மனதுடன் படைத்தார். கோழிக் கோட்டிலுள்ள படிப்புர வீட்டில் இராமசாமி என்பவரால் 1799-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16–ஆம் தேதி இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் 131 பக்கங்களைக் கொண்டுள்ளது.

## இந்நூலின் தொகுப்புரை

முதல் பகுதியாகிய எழுத்தியலைத் தவிர்த்து மற்ற பகுதிகள் 13 பாடங்களை அல்லது விரிவுரைகளைக் கொண்டு காணப்படுகிறது. எழுத்ததிகாரம் 4 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது (ப.1-8). ட்ருமண்ட் கூறும்போது மலபார் மொழியும் சமஸ்கிருத மொழியும் 51 எழுத்துக்களைக் கொண்டு விளங்குகிறது எனக் கூறுகிறார். இதில் உயிர் எழுத்துகள் 16 என்றும் மெய்யெழுத்துக்கள் 35 எனவும் குறிப்பிடுகிறார். நெடில், குறில் எழுத்துக்கள் குறித்து முதலாவது அதிகாரத்திலும், இரண்டாவது அதிகாரத்தில் மெய்யெழுத்துக்கள் உயிர் எழுத்துக்களுடன் வருவது குறித்தும் கூறப்பட்டுள்ளன. கூட்டெழுத்துக்கள் குறித்து மூன்றாம் அதிகாரம், தெளிவு படுத்துகிறது. நான்காம் இயலில் மெய்யெழுத்துக்கள் இரட்டித்து வருவது குறித்துக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சில்லு என அழைக்கப்படும் அரை மெய்யெழுத்துக்களாகிய ன், ர், ல், ள், ண் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் சரியான உச்சரிப்பைப் பேச்சு வழக்கின் மூலம் உணாந்து கொள்ள முடியும் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். ழ, ற ஆகிய எழுத்துகள் மிகவும் பயனுள்ள ஒன்றாகும். ஆனால், இவை மலபார் எழுத்தியலில் கூறப்படவில்லை.

எண் பற்றிய ஒரு பட்டியல் அடுத்தபடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லிலக்கணத்திற்குள் வரும்போது ஆசிரியர் ஸ்பிரிங் மற்றும் பீட் ஆகியோரைப் பின்பற்றி செல்வதைக காண முடிகிறது. எடுத்துக்காட்டுகள் கூட அதே எடுத்துக்காட்டுகளாகவே இருக்கின்றன. பெயர்கள் குறித்தும் அவற்றில் ஒருமை, பன்மைகளில் வரும் வேற்றுமைகள் குறித்தும் தனது முதல் விரிவுரையில் விளக்குகின்றார்.

இரண்டாவது விரிவுரை நான்கு பாகங்களாகக் காணப்படுகிறது.

பெயரடை (Adjectives) பற்றி இப்பாகங்கள் கூறுகின்றன. மூன்றாம் விரிவுரையில் மறுபெயர்கள் (Pronouns) குறித்து 5 பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. மூலிடப் பெயர்கள் போன்றன இவ்வுரையில் விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

மலபார் மொழியிலுள்ள எல்லா வினைகளும் காலங்களை வெளிப்படுத்தும் தன்மைகள், நான்காம் விரிவுரையில் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் விரிவுரையில் வினைகளில் ஏற்படும் அமைப்பு முறைகள் விளக்கட் ட்டுள்ளன. இதுவே இந்நூலின் முக்கியமான பகுதியாகக் கருதப்படுகின்றன. இறந்தகாலம் தோன்ற 10 வகை விதிகள் குறித்துக் கூறுவதையும் இவ்விரிவுரையில் காணலாம்.

ஆறாம் விரிவுரை காரணவினைகள் குறித்துக் கூறுகின்றது. ஆறு விதிகள் இதில் கூறப்பட்டுள்ளன. ஏழாம் விரிவுரை செயப்பாட்டு வினை உருவாக்கம் குறித்து விளக்குகிறது. எட்டாம் விரிவுரை தன்மை, முனனிலை, படர்க்கை என்ற மூவிடங்களில் ஒன்றிற்குரிய வினை உருவாக்கம் குறித்து விளக்குகின்றது. இறந்த காலம் மற்றும் வருங்கால வடிவங்களும் விளக்கப் பட்டுள்ளன.

ஊனககிரியைகள் குறித்துப் பிற்கால இலக்கண ஆசிரியரான குண்டர்ட் கூறியிருப்பது குறித்து ஒன்பதாம் விரிவுரை எடுத்துரைக்கின்றது. ஊனக்கிரியைகள் என்பதனை Defective Verb என அழைப்பர். உடன்பாட்டு வினைகள் (Affirmative Verbs) மற்றும் எதிர்மறை வினைகள் எனக் குறை வினைகள்(Defective Verbs) பிரிக்கப் பட்டிருப்பதையும் இவ்விரிவுரையில் காணலாம்.

பத்தாம் விரிவுரை துணை வினைகள் (Auxiliary Verbs) குறித்துக் கூறுகிறது. பதினொன்றாம் விரிவுரை மிக முக்கியமான ஒன்றாகக் கருதப் படுகின்றது. இதில் தொடரியல் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றது. ஒவ்வொரு வேற்றுமைகளும் தனித்தனியாக எடுக்கப்பட்டு அவை வினைக் கட்டுப்பாட்டில் எவ்வாறு காணப்படுகின்றன என்பன குறித்து சரியான எடுத்துகாட்டுகளுடன் விவரிக்கப்பட்டுள்ளன. வினையடைகள் (Adverbs) குறித்தும் இப்பகுதியில் விளக்கபபடடுள்ளன.

பதினொன்றாம் விரிவுரை சந்தி அல்லது புணர்ச்சி விதிகள் குறிதது எடுததுரைக்கின்றது. பன்னிரண்டாம் விரிவுரை இலக்கணத்தோடு தொடர்புடையதாகக் காணப்படாவிடினும்

இப்பகுதியில் பொதுவான பொருள்கள் குறித்துக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். பொதுவான கருத்துக்கள் எனக் கூறும்போது ஒரு ஆண்டின் பருவ நிலைகள், மாதத்தின் பெயர்கள், வாரத்தின் நாட்கள் முதலியன குறித்து இப்பகுதி எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு ஆசிரியர் இலக்கணத்தை விவரிக்கப் புதுமுறைகளைக் கையாள்வதைக் கவனிக்கலாம். பொதுவாக இலக்கணத்தை எழுதும் ஆசிரியர் அதனை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என வகைப்படுத்தி எழுதும் போது இவ்வாசிரியர் அதனை விரிவுரைகளாகக் கொடுத்திருப்பது சிந்தித்தற்குரியது. ஒரு இலக்கண ஆசிரியர் எப்படி இலக்கணம் எழுத வேண்டுமோ அவ்வகையைப் பின்பற்றாமல் ஆசிரியர் அனைத்து இலக்கணப் பகுதிகளையும் ஒன்று விடாமல் தனது விரிவுரைப் பகுதியில் கூறியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது. தன் நடையிலேயே இலக்கணம் படைத்துள்ள ஆசிரியரின் அடிப்படையில் பிற்காலத்தில் மேலை நாட்டு முறையில் மலையாளத்தில் இலக்கணம் எழுதிய ஆசிரியர்கள் ட்ரூமண்ட்டின் இலக்கணத்தையே அடிப்படையாக வைத்து இயற்றியுள்ள உண்மை வெளிப்படுகிறது. அதில் ஒரு சில இடங்களில் திருத்தங்கள் அங்கு மிங்கும் மேற்கொண்டு பிற்கால இலக்கண ஆசிரியர்கள் தங்களது இலக்கணங்களைப் படைத்துள்ளனர். குண்டர்ட்டின் இலக்கணம் இவ்விலக்கணத்தின் பிரதிபலிப்பாகவே காணப்படுகின்றது. மேலே கண்ட கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும்போது ட்ரூமண்டின் இலக்கணம் முக்கியமான கருத்துக்களைக் கூறுகின்றது எனலாம். இவரது நடை அல்லது இலக்கண அமைப்பு பிற்கால எழுத்தாளர்களை மிகவும் பாதித்துள்ளதாகத் தெரிகிறது.

## 2. ஸ்பிரிங்கின் மலையாள இலக்கணம்

அச்சுப் பணி தொடங்கிய கால கட்டத்தில் ஐரோப்பிய அறிஞர்கள் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய மொழிகளில் இலக்கண நூல்களை எழுதத் தொடங்கினர். கி.பி. 1838ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனியில் துணை மேலாளராக இருந்த எஃப். ஸ்பிரிங் அவர்கள், "Out-lines of a Grammar of the Malaylim Language as a spoken in the provinces of North and South Malabar and kingdom of Travancore and Cochin"

என்னும் இலக்கண நூலை வெளியிட்டார். இந்நூல் ஆர். டப்ளியூ.

தீரோப் என்பவரால் வேப்பேரி மிஷன் அச்சுக் கூடத்தில் வெளியிடப்பட்டது. இந்நூல் ஆளுநரின் தூண்டுதலால் வெளியிடப்பட்டது. அரசு அலுவலர்களுக்கு நிருவாகப் பணி செய்வதில் தாய்மொழி அறிவு மிகவும் இன்றியமையாதது என ஆளுநர் கருதியதால் இந்நூல் இயற்றப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டையில் அன்று ஆளுநராக இருந்த பிரபு எல்பின்ஸ்டன் என்பவருக்கு இந்நூல் அர்ப்பணம் செய்யப்பட்டது. 94 பக்கங்களைக் கொண்டது இந்த இலக்கணம். நூலின் தலைப்பிலே ஆசிரியர் மலையாளம் என்பதற்கு மலையாளிம் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

நூலின் அறிமுகத்தில் ஆசிரியர் குறிப்பிடும் போது ஏழி மலையிலிருந்து கன்னியாகுமரி வரையும் மலையாள மொழி பேசப்படுவதாகவும் ஆனால் இம்மொழி, அறிஞர்கள் மத்தியில் பேசப்படாமல் சாதாரண மக்களின் பயன்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்று கூறுகிறார். மேலும் ஆசிரியர் குறிப்பிடுகையில் இம்மொழியை வளமையுள்ளதாக மாற்றினால் இது ஒரு சிறந்த கிளை மொழியாக விளங்கும் எனக் குறிப்பிடுகிறார். தொடர்ந்து குறிப்பிடுகையில் ஒரு தனிப்பட்ட தமிழ் மற்றும் தென்னிந்திய மொழிகளின் ஒப்புமையுடைய மொழியாக விளங்குகிறது எனவும் இம்மொழியிலுள்ள சொற்களை ஒப்பீட்டு முறையில் அணுகும்போது வடமொழிச் சொற்களைவிட திராவிட மொழிச் சொற்களே அதிகம் காணப்படுகின்றன எனவும் கூறுகிறார். ஆசிரியர் கூறுகையில் அவருக்கு முன்பு மும்பை நிறுவனத்திலிருந்து ட்ருமண்ட் என்பவர் மலையாள மொழிக்கு ஒரு இலககணம் எழுத முயற்சித்ததாகவும் அது நீண்ட காலமாக வெளியிடப்படாமல் இருந்ததாகவும் கூறுகிறார். இப்படிப்பட்ட இலக்கண நூல்கள் தாய்மொழி மக்களின் பயன்பாட்டுக்கும், ஐரோப்பியர்களின் மொழிக் கற்றலுக்கும் மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. மலையாளம் என்னும் சொல் மலை நாட்டைக் குறிப்பிடுகிறது எனவும், மலையாளர் என்னும் சொல் மலை நாட்டு மக்களைக் குறிப்பிடுவதாகவும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். மலையாளிம் என்பது மொழியைக் குறிக்கின்றது என்கிறார். கோழிக்கோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிப் புரிந்த பழைய சாமூதிரி மன்னன் ஆண்ட மத்திய கேரளத்தில் பயன்பாட்டில் இருந்த மொழியே சுத்தமான மொழியாகும் என ஆசிரியர் குறிப்பிடுகிறாா.

ஆசிரியர் மேலும் கூறுகையில் நான் தற்பொழுது எழுதி இருக்கும் நூலில் யாரும் அதிகப்படியான எதிாபார்ப்புக்களை எதிர்பார்க்காமல்

இந்நூல் ஒரு முன்னோடியான ஒன்று என்று கருதி மேலும் ஆய்வில் ஈடுபட்டு ஒரு முழுமை பெற்ற இலக்கணமாக இயற்ற வேண்டும் என்கிறார். இந்நூலில் விடுபட்ட கருத்துக்களை நிறைவு செய்யுமாறு ஆய்வாளர்களைக் கேட்டுள்ளார். ஆசிரியர் தனது நூலில் உள்நாட்டு அலுவலர் ஒருவர் இந்நூல் உருவாக்கத்திற்கு உதவியதற்காக நன்றியும் தெரிவித்திருக்கிறார்.

## நூலின் அமைப்பு முறை

இந்நூல் ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. முதல் இயலில் 5 பகுதிகள் எழுத்து, கூட்டெழுத்து, ஒலியியல் போன்றவை குறித்து விவரிக்கின்றன. 14 உயிர் எழுத்துக்கள் (7 குறில் எழுத்துக்கள், 7 நெடில் எழுத்துக்கள்) கணக்கிடப்பட்டுள்ளன. நெடில் எழுத்துக்களில் ‘ஏ’ மற்றும் ‘ஓ’ ஆகிய எழுத்துக்கள் குறிப்பிடப்படவில்லை. காரணம் அக்காலகட்டத்தில் குறில் நெடில் வடிவங்கள் எழுதும்போது வேறுபடுத்தப்படவில்லை. இருந்தாலும் மக்கள் அவைகளைச் சரியாக உச்சரித்து வந்தனர். மெய்யெழுத்துக்கள் மொத்தம் 51 எனக் குறிப்பிடுகிறார். ஆனால், இவ்வெழுத்துக்கள் எவ்வாறு ஒலிக்கப்பட வேண்டுமென விளக்கவில்லை. விளக்கப்பட்ட சில எழுத்துக்களும் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு இயல் முழுவதும் சந்தி குறித்து விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி 7 இயல்களைக் கொண்டுள்ளது. இங்குப் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், இடைச் சொற்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன. தன்னிலைப் பெயர்ச் சொற்கள், பெயரடைகள், மறுபெயர்கள், தொழிற்பெயர்கள், எச்சப் பெயர்கள் ஆகியன பெயர்ச்சொற்களில் அடக்கப் பட்டுள்ளன. பால், எண் ஆகியன 2 மற்றும் 3ஆம் இயல்களில் முறையே கூறப்பட்டுள்ளன. வேற்றுமையேற்கும் பெயர்கள் 4வது இயலில் கூறப்பட்டுள்ளன. எட்டு வேற்றுமைகளைக் கூறும் ஆசிரியர் வரிசை முறையில் மாற்றத்தை மேற்கொண்டுள்ளார். எழுவாய் வேற்றுமைக்குப் பின் உடைமை வேற்றுமையும், செயப்படு பொருள் வேற்றுமையாகிய இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமைக்குப் பின்னும் வரிசைப்படுத்தி இருப்பது மற்ற இலக்கண ஆசிரியர்களிலிருந்து இந்நூலாசிரியர் வேறுபட்டு நிற்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. இட வேற்றுமையும், நீங்கல் வேற்றுமையும், கருவி வேற்றுமையும், உடனிகழ்ச்சி வேற்றுமையும் ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளன. வேற்றுமைக்குப்

பல்வேறு விதிகள் கூறப்பட்டு எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. இயல் 6இல் ஒப்பீட்டு மதிப்பீடு விளக்கப் பட்டுள்ளது. இயல் 7 எண்ணுப் பெயர்கள் குறித்துக் குறிப்பிடுகின்றது.

பாகம் 3-இல் 4 இயல்கள் மறுபெயர்கள் குறித்துக் கூறகின்றன. பாகம் 4-இல் 12 இயலகளில் வினைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் வினைகள் குறித்துக் கூறும்போது மலையாள வினைகளின் அமைப்பு மிகவும் எளிமையானது எனக் கூறுகிறார். துணை வினைகள், வினையடைகள், எச்சவினைகள், இறந்த காலம் ஆகியன இப்பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

பாகம் 5-இல் 4 இயல்கள் இடைச் சொற்கள் குறித்தும் சொல்லுருபுகள் குறித்தும் கூறுகின்றன. வாக்கிய அமைப்பு பாகம் 6-இல் 4 இயல்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பின்னிணைப்பில் பல செய்திகள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு சொல்லின் அடியாகப் பிறந்த மற்றொரு சொல் (Derivative) பழமொழிகள், அற்புதக் கதைகள், கேரளோல்பத்தியின் சாராம்சம் போன்றன இதில் அடங்கும்.

## 3. சோசப் பீட்டின் மலையாள இலக்கணம்

சோசப் பீட் அவர்கள் எழுதிய இலக்கணத்தின் பெயர் "A Grammar of the Malayalim Language" என்பதாகும். ஸ்பிரிங் என்னும் ஆசிரியரைப் போன்றே பீட் அவர்கள் மலையாளம் என்பதனை மலையாளிம் என்று தனது நூலின் தலைப்பிலே கூறுவதைக் காணலாம். இவ்விலக்கணத்தின் முழுத் தலைப்பும் என்னவென்றால், "A Grammar of the Malayalim Language Spoken in the Principalities of Travancore and Cochin and the Districts of North and South Malabar" என்பதாகும். இந்நூல் மாவேலிக்கரையிலுள்ள மிஷனரி சபை சங்கத்தால் 1814-இல் கோட்டயத்திலிருந்து வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு 1854-இல் வெளிவந்தது. இந்நூல் திருவிதாங்கூர் இளவரசருக்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்டது. இந்நூல் 218 பக்கங்களைக் கொண்டு இருமொழியத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஆசிரியர் தனது முகவுரையில் குறிப்பிடுபோது: படித்த கல்வி கற்றவர்கள் மத்தியில் தாய்மொழி செல்வாக்கிழந்து காணப்பட்டதாகவும், இம்மொழியை வளர்க்கவோ அல்லது பயன்படுத்தவோ அவர்கள் முயற்சிக்க வில்லை எனவும் கூறுகிறார். சாதாரண மக்களின்

பயன்பாட்டிற்குத் தாய்மொழியில் இலக்கணம் எழுதவில்லை (பக்கம் V) . ஆசிரியர் மேலும் கூறுகையில் எழுத்திலும் சரி, சொல்லிலும் சரி, 'மலையாளிம்' (மலையாளம்) மொழி தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் கடன்பட்டிருக்கிறது. படித்த முன்னேற்றமடைந்த மக்கள் வேறு மொழிகளிலிருந்து கடன் பெற்றுத் தங்களது மொழி வளத்தை அதிகரித்தனர். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது இம்மொழி வடமொழியைச் சார்ந்ததென்றோ, தமிழ் மொழியைச் சார்ந்ததென்றோ கூறமுடியாத ஒரு புதிய மொழியாகக் காட்சி அளிப்பதாகக் கூறுகிறார்.

நாட்டின் உட்பகுதிகளில் அதாவது வடக்கு மற்றும் தெற்கு மலைத்தொடரை அடுத்துள்ள பகுதிகளில் பேசப்படும் மலையாளம் சுத்தமான மலையாளமாகக் காணப்படுகிறது. ஸ்பிரிங் என்பவர் கோழிக்கோட்டைச் சுற்றிப் பேசப்படும் மொழி நல்ல மொழியாகும் என்கிறார். ஆனால், இந்நூலின் ஆசிரியர் அக்கருத்தை வலியுறுத்தவில்லை.

பீட் கூறும்போது: கடந்த 20 ஆண்டுகளில் ஐரோப்பிய மிஷனரி பணியாட்கள் இம்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளனர் என்பதில் சந்தேகம் இல்லை. இந்நூலின் கைப்பிரதி அச்சுப் பணிக்குத் தயாராகப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ரோமிஷ் பிஷப் (Romish Bishop) என்னும் தொகுப்பாளரிடம் 1799-இல் வழங்கப்பட்டது என்கிறார்.

இலக்கணத்தின் நோக்கம் ஒரு மெ 'யை நிலை நிறுத்துவதற்கு விதிகளைக் கொடுப்பதல்ல. பயன்பாட்டு மொழியில் ஏற்கனவே காணப்படும் விதிகளைப் பயன்படுத்தி அம்மொழி வளர்ச்சிக்கும், கற்றலுக்கும் உதவி செய்வதேயாகும் (Preface IX) . ஆசிரியர் அந்நாட்டில் மேற்கொண்ட நீண்ட பயணம் அவருக்கு தாய் ாழி இலக்கணம் எழுதப் பெரிதும் துணை நின்றதாகக் குறிப்பிடு..ஙார். இந்நூல் எழுதுவதற்கு இரு காரணங்களை ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஒன்று பிற மொழியினர் மலையாள மொழி இலக்கணத்தை அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது மலையாள மொழியினர் தங்களது தாய்மொழி இலக்கணத்தை ஆங்கில மொழி அறிவுடன் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியரின் நோக்கம் என்னவென்றால் ஒரு இலக்கணம் எழுதும் போது அம்மொழியின் தனித்திறம் சுட்டிக் காட்டப்பட வேண்டுமென்பதே. ஆசிரியர் இந்த இலக்கண நூலை

ஐரோப்பியர்களுக்காகவே எழுதியதாகவும் வித்தியாசமான திட்டத்திலும் நடையிலும் இவ்விலக்கணம் மேற்கொள்ளப் பட்டதாகவும் முகவுரையில் கூறுகிறார் (XI).

## நூலின் உட்கூறுகள்

முதன் முதலாக நூலில் எழுத்தியல் கூறப்பட்டுள்ளது. மலையாள மொழிக்கு 53 எழுத்துக்கள் உண்டென்றும் அவற்றில் 16 எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் என்றும் 37 எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் என்றும், ஆசிரியர் குறிப்பிடுகிறார். 34 தேவனாகரி எழுத்துக்களைத் தவிர்த்து ள, ழ, ற ஆகிய எழுத்துக்களும் இம்மொழிக்கு உண்டு. எழுத்துக்களைக் கூறிய ஆசிரியர் அவ்வெழுத்துக்களின் உச்சரிப்பு விளக்கத்தையும் முதல் இடை கடை ஆகிய உயிரெழுத்துக்களின் வருகை முறையையும் சுட்டிக் காட்டுகிறார். அதனை அடுத்து மெய்யெழுத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. சொல்லின் இறுதியில் வரும் ண், ன், ர் போன்ற மெய்யெழுத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் 'சில்லு' என்னும் சொல் பயன்படுத்தப்படவில்லை. உயிரெழுத்துப் புணர்ச்சிக்கு ஆசிரியர் 14 விதிகளை வகுத்துள்ளார்.

அடுத்து சொல்லிலக்கணம் கூறப்படுகிறது. இதனை ஆசிரியர் 'Etymology' என அழைக்கிறார். மலையாள மொழியிலுள்ள எல்லா சொற்களையும் ஆறு பிரிவுகளில் அடக்கலாம் என ஆசிரியர் கூறுகிறார்.

1. இடைச்சொற்கள் (Particles)
2. பெயர்ச் சொற்கள் (Nouns)
3. மறு பெயர்கள் (Pronouns)
4. வினைச் சொற்கள் (Verbs)
5. பெயரடைகள் (Adjectives)
6. வினையடைகள் (Adverbs)

சொல்லுருபுகள் (Prepositions), இணையிடைச் சொற்கள் (Conjunctions) மற்றும் வியப்பிடைச் சொற்கள் (Interjections) போன்றன முதல் பிரிவாகிய இடைச் சொற்களில் சேர்க்கப்பட்டுள்ளன. சார்புடைகள் (Articles) இங்குக் குறிப்பிடப்படவில்லை.

ட்ருமண்ட் இலக்கணத்தில் குறிப்பிடட படியே வேற்றுமைகள மரபு வழி இலக்கண ஆசிரியர்கள் கூறிச் செல்லும் வரிசை முறையில் இருந்து வேறுபட்டு வரிசைப் படுத்தி எட்டு வேற்றுமைகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

1. எழுவாய் (Nominative)
2. உடைமை (Genitive)
3. கொடை வேற்றுமை (Dative)
4. செயப்படுபொருள் வேற்றுமை (Accusative)
5. முதலாவது நீங்கல் வேற்றுமை (Ist Ablative)
6. இரண்டாம் நீங்கல் வேற்றுமை (Second Ablative)
7. மூன்றாம் நீங்கல் வேற்றுமை (Third Ablative)
8. நான்காம் நீங்கல் வேற்றுமை (Fourth Ablative)

5 முதல் 8 வரையுள்ள வேற்றுமைகளை நீங்கல் வேற்றுமையாகவே ஆசிரியர் கருதி அவற்றை வகுத்திருப்பதை மேலே பார்த்தோம். முதலாம் நீங்கல் வேற்றுமை – கருவி வேற்றுமையாகவும் அதன் உருபு – ஆல் எனவும், இரண்டாம் நீங்கல் வேற்றுமை உடனிகழ்ச்சி வேற்றுமையாகவும் அதன் உருபு `ஒடு` எனவும், மூன்றாம் நீங்கல் வேற்றுமை இட வேற்றுமையாகவும் அதன உருபு –இல் எனவும், நான்காம் நீங்கல் வேற்றுமை நீங்கல் வேற்றுமையாகவும் அதன் உருபு –இல் நிந்நு எனவும் கொள்ள முடிகின்றது. ஆசிரியர் விளி வேற்றுமையை இங்குக் குறிப்பிடவில்லை. மூன்றாம் வேற்றுமையாக மரபு வழியாகக் கூறப்பட்டு வந்த கருவி வேற்றுமையையும் உடனிகழ்ச்சி வேற்றுமையையும் ஆசிரியர் தனித்தனியாக வகைப்படுத்தியுள்ளார்.

பீட்டின் இலக்கணத்தில் இயற்கையிலே பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இருந்தாலும் அவரது இந்த அரிய முயற்சி பாராட்டுக்குரிய ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நூல் நாட்டு மக்களுக்கும் அயலகத்தினருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. 150 ஆண்டுகளுக்கு முன்னர்க் கிடைத்த ஒரு

அருமையான மலையாள இலக்கண நூலாக இந்நூல் மிளிர்கிறது எனலாம். ஃப்ரோன் மேயர் (Frohnmeyer) குறிப்பிடும்போது:

"A nativie will scarecely derive encouragement or information from the book. Some of the most essential grammatical forms are either misconceived or ignored (eg the adverbial participle, the use of -aru, the conditional, the concessive, etc) No real service is done to a European student by making a language, based on a system entirely different from European languages as far as possible, agree with English Grammar Such a procrustean method will never do justice to the pecularity of a foreign language" (cf. the chapter on adjectives, relative pronouns etc). L J. Frohnmeyer, A Progressive Grammar of the Malayalam Language for European, Mangalore, 1913, introduction p. XIV.

## 4. ஜார்ஜ் மாத்தனின் மலயாழ்மயுடெ வியாகரணம்

மலையாள இலக்கண உலகில் அருட்திரு ஜார்ஜ் மாத்தன் அவர்கள எழுதிய மலயாழ்மயுடெ வியாகரணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மலையாளத்தின் இலககணம் எனபது இதன் பொருள். மலையாள மொழியிலே மலையாள மொழிக்கு எழுதப்பட்டது இவ்விலக்கணம். குண்டர்ட்டின் இலக்கணம் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படடது. ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டது குண்டாடடின் இலக்கண நூலாகும். குண்டர்ட் எழுதிய இலக்கணத்தின் முதல் பாகம் 1851-இல் வெளியிடப்பட்டது. முழுமை பெற்ற நூல் 1868-இல் வெளிவந்தது. ஜார்ஜ் மாத்தனின் இலக்கணம் 1863-இல் அறிமுகமானாலும் இந்நூல் குண்டர்ட் அவர்களின் இலக்கணம் வெளிவருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே முழுமை பெற்று வெளிவந்துள்ளது. இந்நூலின் காலம் குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துககள நிலவுகின்றன. இந்நூல் 1852-இல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் நூலின் முதல் பதிப்பின் (1863) முகவுரையில குறிபபிடும்போது இந்நூலின் கையெழுத்துப் பிரதி பள்ளிப் புத்தகச் சஙகததிடம (School Book Society) நீண்ட காலங்களுக்கு முன்பே அளிக்கப்படடும் எதிர்பாரா காரணத்தால் அது வெளியிடப்படாமலே இருந்ததால் ஆசிரியரே அதனை வெளியிட முயற்சி மேற்கொண்டதாகக குறிப்பிடுகிறார். மேலும் கூறுகையில் குண்டர்டின் இலக்கணம் பல நிறைகளைக் கொண்டிருந்தாலும் தனது இலககண நூலை விடச் சிறந்து

காணப்படவில்லை என்றும, இந்நூல் முறறிலும் மாறுபடட அணுகுமுறை மற்றும் விளககத்தில் அமைந்துள்ளதாகவும குறிப்பிடுகின்றாா. இந்நூலில் மககளின் அன்றாடப் பேச்சு வழக்கு அதிகமாக வலியுறுத்தபபட்டுள்ளது. ஆனால், குண்டாடடின் இலக்கணம், இலக்கிய வழக்குக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதை இந்நூலாசிரியா வெளிப்படுத்துகிறார்.

ஜார்ஜ் மாத்தன் அவர்கள 1819–ஆம் ஆண்டு செபடம்பா திங்கள 25–ஆம் நாளில் பிறந்து 1870–ஆம் ஆண்டு மாாச் திங்கள 4–ஆம் நாள் கோட்டயத்தில் மரித்தார். இவர் ஒரு பேரறிஞா ஆவார். மொழியியல் அறிவும் மிக்கவர். ஆங்கிலம, கிரேக்கம், லத்தீன, எபிரேயம, சிரியாக, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, இந்தி போன்ற மொழிகளில பாண்டித்துவம் பெற்றவர். இவர் கணிதம, கடடடக்கலை, வானூல போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். இவர் வேதியல நூலாகிய ஜோஸப் பட்லரின் (Joseph Bultor) "The Analogy of Religion, Natural and Revealed to Constitution and course of Nature" எனனும நூலை 'சம்யுக்தி' என்னும் தலைப்பில் மலையாளததில் மொழி பெயர்த்தாா. ஆசிரியர் ஒரு சிறந்த சமூகப புரட்சியாளராகவும், கலவியியலாளராகவும் விளங்கினாா. இவா இரு அறிஞர்களாலும் மிகவும மதிககபபடடாா. இவரது மலையாள இலககணம பெரிதும புகழபபடடது. இந்நூலை வெளியிடத் திருவிதாங்கூர் அரசின் நல்கை கிடைக்கபபெறறது.

ஜாாஜ் மாத்தன் தனது மலையாள இலக்கணத்தின முகவுரையில குறிப்பிடும்போது பல கருத்துககளுக்கு இந்நூல் ஒளி வீசுவதாக உளளது என்கிறார். இந்நூல் 475 பகுதிகளைக கொண்டு விளஙகுகிறது. அநேக விளக்கவுரைகளையும் கொண்டுள்ளது. மலையாள இலக்கணம மலையாள மொழியிலே எழுதப்பட வேண்டும்மெனற எலலோருடைய விருப்பம்தான இந்நூலை எழுதத் தன்னைத தூண்டியதாக ஆசிரியா கூறுகிறார்.

பிராமணர்கள் அதாவது நமபூதிரிகள சமஸகிருத மொழியின அறிவைப் பெறுவதிலே ஆர்வம் கொண்டு மலையாள நாடடின பழைய இலககியஙகளுககு முககியத்துவம அளிககாமல அதைத கவனிககாதபடி சமஸ்கிருத மொழிக்கே முக்கியத்துவம கொடுதது இலக்கண இலககியங்களைப படைத்ததுவும மலையாள இலககணததை மலையாள மொழியிலே எழுத வேண்டுமெனற ஒரு உநதுதலை அளித்ததாகவும ஆசிரியர் குறிப்பிடுகிறாா. இந்தச் சூழ்நிலையில் வெளிநாடடவரால இமமொழி ஆய்வுக்குட படுததபபட்டுப் பாாத்தபோது இலககண ரீதியில

மிகவும் பினதள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டதை அறிந்தனர். அம்மொழியில் இயற்கையான திறமைகள் வெளிப்படுவது மற்ற தென்னிநதிய மொழிகளைவிட இம்மொழிச் சிறந்ததாகும் எனவும் கூறுகிறாா. இம்மொழியை வளம் செய்யவும் அழகூட்டவும் இம்மொழிக்கு அமமொழியிலே ஒரு இலக்கணம் வெளிவரவேண்டும் என்ற கொளகையில ஆசிரியர் இந்நூலைப் படைத்தார்.

ஆசிரியா தான் எழுதிய இலககணத்தைக் குண்டர்ட்டின் இலக்கணத்தோடு இவ்வாறு ஒப்பீடு செய்கிறார். இவ்விரு இலக்கணங்களுமு ஒன்றுக்கொன்று முற்றிலும் கொள்கையிலும் அணுகுமுறையிலும் வேறுபட்டன. குண்டர்ட்டின் இலக்கணம் மலையாள மொழி அறிஞர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை மேற்கோளாகக் கையாண்டு விதிகளை அமைத்திருப்பது பாராடடுதறகுரியது. ஆனால், கொடுக்கப்பட்டிருக்கும் விதிகள் பொருததமுடையனவாகக் காணப்படவில்லை. இந்த இரு இலக்கணஙகளின முக்கிய வேறுபாடுகள் என்னவென்றால் ஒன்று கோடபாடடுறுதி மிக்கனவாகவும் குறைந்த விளக்கங்களைக் கொணடனவாகவும் காணப்படுகின்றது. இதில் மாணவர்கள் வெறும் விதிமுறைகளை மட்டும் கற்றுத் தெரிந்து கொளளமுடியும். இரண்டாவது அதற்குரிய காரணங்களை அந்தந்த விதிகளுடன் விளக்கமாகக் கூறுவதாகும. ஆசிரியரின இரண்டாவது முறையில் எழுதப்பட்ட இலககணம் மககளுக்கு எளிமையாக அவர்களது மனதில் புரியும் வணணம் அமைந்துளளது. ஆசிரியரின் இலக்கணம் தொகுப்பு நோக்குடையதும் (Synthetical) பகுப்பாரா.ய்ச்சி (Analytical) முறையைப் பின்பற்றுகிறதும ஆகக் காணப்படுகிறது. ஆனால், குண்டர்ட்டின் இலக்கணம் தொகுப்பு நோக்குடைய தாகவே காணப்படுகிறது. காரணம் அது கலலூரி மாணவர்களின் பாட நூலாக வைக்கப்பட்டிருப்பதேயாகும்.

மாத்தன தன்னுடைய இலக்கணத்தை இரு பாகங்களாகப் பிரித்துள்ளார். ஆனால, ஐரோப்பிய மரபு என்னவென்றால் நான்கு பாகஙகளாகப் பிரிப்பதாகும்.

முதல் பாகம அக்ஷரலக்ஷணம் எனறும், இரண்டாவது பாகம் பதலகஷணம எனறும் பெயரிட்டழைககப்படுகின்றன. முதல் பாகமாகிய அகஷரலகஷணத்தில் ஒலியியல குறித்து விரிவாகக கூறப்பட்டுள்ளது. இரணடாவது பாகமாகிய பதலகஷணத்தில் உருபனியல் மற்றும் தொடரியல் செய்திகள் கொடுககப்படடுள்ளன. தமிழ் இலக்கணச் சொலலதிகாரததில கூறப்படடுள்ள சொற்கள் குறித்த எல்லாக்

கருத்துக்களும் இந்நூலில் பின்பற்றப்பட்டுள்ளன. இம்முறையைப் பின்பற்றி எழுதினால் தான் மீண்டும் கூறல் மற்றும் நூலின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ள தன்மை ஆகியன ஏற்பட்டதாக ஆசிரியரே கூறுகிறார். ஆசிரியர் தமிழ் இலக்கணங்களைப் பின்பற்றி எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளன போன்று தமது இலக்கணத்தை அமைத்துள்ளார் எனலாம். எனவே தான் மரபுவழி வந்து ஐரோப்பிய இலக்கண ஆசிரியாகளின் முறையை இவர் பின்பற்றியுள்ளதற்குக காரணமாகும்.

ஒவ்வொரு மொழியிலும் மிகவும் கடினமான ஒன்றாகக் கருதப்படும் இடைச்சொற்களுக்கு (Particles) அதிகக் கவனம் செலுத்தி விளக்கி இருப்பதாக ஆசிரியரே கூறுகிறார். தமிழில் கூறப்பட்டுள்ள குற்றியலுகரத்திற்கு இணையான மலையாளக் குற்றியலுகரம் (Enunciative half - vowel) ஆசிரியர் அதிகமாக விளக்கிச் சொல்வதை அவரது இலக்கண நூலில் காணலாம்.

## கார்த்வெயிட்டின் மலையாளபாஷா வியாகரண சங்கிரகம்

ஒரு காலத்தில் கார்த்வெயிட் என்னும் ஆசிரியரால் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக எழுதப்பட்ட மிகவும புகழ்பெற்ற நூல் இநநூலாகும். இந்நூல 65 பகுதிகளைக கொண்டுளளது. ஆசிரியர் பகுப்பாராய்ச்சி முறையில் இந்நூலை இயற்றியுள்ளார். வாக்கு என்னும் சொல் மொழிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**நம்முடெ வாக்கினு மலயாள வாக்கு**

**என்னு பேர்**

**"நம் மொழிக்கு மலையாள மொழி**

**என்று பெயர்"**

என்று ஆசிரியர் கூறியிருப்பதின் வாயிலாக இவ்வுண்மையை அறிந்து கொள்ளலாம். எழுவாய் மற்றும் பயனிலை ஆகியவைகள் குறித்து முதல் பகுதியாகிய வாக்கியக் காண்டத்தில் (Syntax) கூறப்பட்டுள்ளது. பத காண்டம் (Morphology) அதற்கு அடுத்துக் கூறப்பட்டுள்ளது. சொற்கள் பெயா (Noun), வினை (Verb) மற்றும் உருமாற்றம் பெறாதவை (Indeclinable) என மூனறுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

நாமாதிகாரம் என்னும் பெயரதிகாரத்தில் ஆறுவகையாக பெயர்கள் கூறப்பட்டுள்ளன. பால், எண், வேற்றுமை ஆகியன அதன்பின் விளக்கப் படுகின்றன. மறுபெயர் (Pronoun) குறித்து ஒரு தனிப்பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது. ஒருமை மற்றும் பன்மைகளில் ஏற்படும் வேற்றுமைப் பாகுபாடுகள் (Declensions) இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. வேற்றுமைகளுக்கு மரபுவழிப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கடுத்துக் கூட்டுப் பெயர்கள் (Compound Nouns) விளக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் கூட்டுப் பெயர்களைக் குறித்துக் கூறும்போது பல்வேறு வகைகளை எடுத்துக் கூறுகிறார். அவர் சுட்டியிருக்கும் சுட்டுப் பெயராகிய அவன் என்பது கூட்டுப் பெயராகாது என்றும், ஆ தோட்டம், ஆ பலகை என்பது இணைந்து வரும் போதுள்ள சுட்டுப் பெயர்களே கூட்டுப் பெயர்களில் அடங்கும் என்றும் எழுத்தச்சன் (1975:657) கூறுகிறார். பல்வகைக்கூட்டுப் பெயர்களில் சூண்டு சமாசம் அதாவது சுட்டுப் பெயர் என்பதும் ஒன்று என்று ஆசிரியர் கூறுகிறார். பிற சுட்டுப் பெயர்களாக ஆசிரியர் கூறும்போது சோத்திய சமாசம் (வினாப் பெயர்) எ.கா. எந்நாள் ‘எந்த நாள்’, சாங்கியா சமாசம் (எண் பெயர்) எ.கா. ஓராள் ‘ஒரு மனிதன்’ ஆகியவற்றையும் கூறுகிறார்.

கூட்டுப் பெயர்களுக்கு அடுத்து வினைகள் இடம் பெற்றுள்ளன. வினையின் மூன்று காலங்களில் நிகழ் கால உருபாக ‘உன்னு’ என்பதும் இறந்த கால உருபாக ‘இ/து’ ஆகியனவும், வருங்காலம் இருவகையாக வகைப்படுத்தப்பட்டு முதல் வகை ‘உம்’ என்ற உருபையும் இரண்டாம் வகை உ, ஊ ஆகிய உருபுகளையும் எடுத்து வரும் என இந்நூலில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் வினைப்பகுதியில் கூறும்போது விதிரூபம் (ஏவல் வினை)

எ.கா. ‘வா’ (ஒருமை)

வருவின் (பன்மை)

ரம்பாவன வினை (சார்புநிலை குறித்த வினை)

எ.கா. வன்னால் ‘வந்தால்’ மற்றும் அனுவாதகம் (‘விட்டுக் கொடுக்கும் இயல்புள்ள வினை’)

எ.கா. வன்னாலும் ‘வந்தாலும்’ ஆகியனவும் வினைப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

பெயரெச்சம், தொழிற் பெயர் ஆகியனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. குண்டர்ட் தனது இலக்கண நூலில் கூறியிருக்கும் வன்திரிபியலான வினை (Strong verb) மற்றும் மென்திரிபியலான வினை (Weak verb) ஆகியவற்றை இந்நூலாசிரியர் பலபிரத்யய என்றும் அபலபிரதயய எனறும் முறையே கூறிச் செல்கிறார். உடன்பாடடு வினையை அனுசரணம் என்றும், எதிர்மறை வினையை நிஷேதம் என்றும் கூறகிறார். குறை வினைகளாகிய 'உண்டு' 'இல்ல' முதலியவற்றை ஊனகிரியா என்பதில் கூறுகிறார். செய்வினை செயப்பாட்டு வினை ஆகியவையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பெயரடைகள் குறித்துக்கூறும்போது அடைமொழித் (Attribute) தொடர் பெயரடையாக வரும் என்று இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. தொடர்கள் அதாவது வாக்கியங்கள் அடைமொழிகளாக வரலாம்.

ஆசிரியர் ஒலியியலை அதாவது அக்ஷரக் காண்டத்தை இறுதியில் விளக்குகிறார் (ப.24). காரணம், வாக்கியங்கள்தான் ஒரு மொழிக்கு அடிப்படை மூலககூறு என்று ஆசிரியர் கருதுவதாகும். இது மரபு வழி இலக்கணத்தில இருந்து வேறுபட்டுச் செல்வதைக் காணலாம். மரபுவழி இலக்கணங்களில் ஒலிகள், சொற்கள், தொடர்கள், பொருள் என்ற பாகுபாடடில் இலக்கணம் அமைந்திருக்கும். ஆனால், இந்நூலில் எதிர்மறையாகக் கூறப்பட்டுள்ளது. எழுத்துக்கள் குறித்துக் கூறும்போது மரபுவழியாகக் கூறப்பட்டு வந்துள்ள எழுத்துக்களையே கூறுகிறார். இதனை அடுத்துப் புணர்ச்சி விதிகள் விளக்கப்படடுள்ளன.

உண்மையிலேயே இந்நூல் மலையாள இலக்கணக் கொள்கைகளையும் அனுபவப் பயன்பாட்டினையும் விளக்கும் நூலாகக் காட்சியளிக்கிறது.

## 6. எல்.ஜே. ஃப்ரொன்மேயரின் மலையாள இலக்கணம்

ஃப்ரொன்மேயர் எழுதிய மலையாள இலக்கண நூலின் பெயர் 'A Progressive Grammar of the Malayalam Language for Europeans' என்பதாகும். இதன் முதல் வெளியீடு 1889–இலும், திருத்தம செய்யப்பட்ட இரண்டாம் பதிப்பு 1913–இலும் வெளிவந்தது. இந்நூல் 300 பக்கங்களைக் கொண்டது. மலையாள மொழி அறிஞர்களால் குறிபபிடப்படாத பல அரிய கருத்துக்களை ஆசிரியர் இந்நூலில் வெளிப்படுத்துகிறார். ஐரோப்பிய மாணவர்களின் பயன்பாட்டுக்காகவே எழுதப்பட்டது இந்நூல். ஆங்கிலம், ஜெர்மன், இலத்தீன் மற்றும் கிரேக்க

மொழிகளில் மலையாள மொழியின் வாக்கியங்களும் விளக்கங்களும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. மலையாள அறிஞர்களாகிய கோவுண்ணி நெடுங்காடி மற்றும் சேஷகிரி பிரபு ஆகியோர் கூறிய வடமொழி இலக்கண விதிகளை ஆசிரியர் தனது நூலிலும் புகுத்தியுள்ளார். ஆசிரியரின் இலக்கணம் மலையாள மொழி அறிஞர்களுக்கே மிகவும் பயனுள்ள ஒன்றாக அமைந்துள்ளது. காரணம், இதில் பல்வேறு மொழியியல் கூறுகளும் இலக்கணக் கூறுகளும் ஐரோப்பிய மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் புலைய மக்களின் மொழி நடையும் பழமொழியும், விடுகதைகளும், குடிகாரர்களின் மொழி நடையும் விவரித்து கூறப்பட்டுள்ளன. அத்துடன் இலக்கிய கூறுகளையும், மதம் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் கூறப்படட்டுள்ளன. பல்வேறு பொருளிலான சொற்பட்டியல் ஒன்று இந்நூலில் இடம் பெற்றுள்ளது. மருத்துவம், கணிதம் ஆகியவற்றுக்குப் பழைய நூல்களிலிருந்து தரவுகள் தரப்பட்டுள்ளன. பழைய கலைச் சொற்கள் பல இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குண்டர்ட் தனது நூலுக்குத் தரவுகளை இலக்கிய நூல்களிலிருந்து தேர்வு செய்ய, இந்நூலாசிரியரோ தரவுகளைப் பேச்சு வழக்கிலிருந்து எடுத்திருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். குண்டர்ட்டின் இலக்கணம் மலையாள மொழியில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் முன்னுரையில் ஆசிரியர் மலையாள மொழியில் இலக்கண, இலக்கிய வரலாற்றை விரிவாகக் கூறியுள்ளார். ஆனால், அதில் பல தவறுகள் காணப்படுகின்றன. காரணம் இன்று வெளி வந்துள்ள பழைய மலையாள இலக்கியங்களோ, அகராதிகளோ அன்று வெளிவரவில்லை. லீலாதிலகம் வெளிவந்த பின்னர் தான் தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளோடு ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையில் மலையாளம் காணப்பட்ட போதிலும் மலையாள மொழியின் பழைய அறிஞர்களும் அரிய பல காரியங்களைச் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது. கால்டுவெல் மலையாள மொழி, தமிழ்மொழியின் குழந்தை மொழியாகுமெனவும் குண்டர்ட் அது தமிழ் மொழியின் சகோதரி மொழியாகுமெனவும் கூறுகின்றனர்.

சிரியன் கிறித்தவர்களும் யூதர்களும் பாதுகாத்து வந்த கல்வெட்டுகள் மற்றும் மலையாளப் புலவர்கள் படைத்த இலக்கியங்களைப் பார்க்கும்போது சுமார் 9ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்த் தமிழ் மொழியில் காணப்படும் திணை, எண், பால் விகுதிகள் மலையாள மொழியில் காணப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். தற்கால மலையாள மொழியில் இவ்விகுதிகள் கணக்கில் எடுத்துக்

கொள்ளப்படவில்லை. ஆனால், காலத்தைக குறிக்கும் விகுதிகள் மட்டும் பாதுகாக்கப்படடு வருகிறது. ஃப்ரொன்மேயர் குறிப்பிடும்போது மலையாள மொழியின் நவீன அணுகுமுறை ஐரோப்பியர் வருகையின் தாக்கத்தால தொடங்கப்பட்டது என்றும் மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் கிறித்தவ மிஷனரிகளின் வருகை இதற்கு முக்கிய காரணங்களாகும் என்கிறார். மலையாள வேதாகமம, நல்ல பள்ளிப் புத்தகங்கள, செய்தித்தாள்கள், மற்றும் பருவ இதழ்கள் ஆகியவை வெளிவர ஒரு தரப்பட்ட மலையாள மொழி தேவைப்பட்டது. குண்டர்ட் 1872-இல் எழுதிய மலையாளம் ஆங்கில அகராதி தென்னிந்திய மொழிகளில் முதன் முதலில் எழுதப்பட்ட அகராதி நூலாகும.

இந்நூலின் முன்னுரையில் ஆசிரியர் ஐரோப்பியர்களால் ஆஙகிலத்தில் வெளிநாட்டு மிஷனரிகளின் பயன்பாட்டிற்காக எழுதப்படட மலையாள இலக்கணங்கள் குறித்து விரிவாகக் கூறுகிறார். டருமண்ட் (1796), ஸ்பிரிங் (1839) ஜோசப் பீட் (1841), குண்டர்ட் (1868) ஆகிய அறிஞர்களின் நூல்கள் இந்நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். ஐரோப்பிய அறிஞர்களின் நூல்களை மட்டுமின்றி உள்நாட்டு அறிஞர்களாகிய ஜார்ஜ் மாத்தன் (1863), கோவுண்ணி நெடுங்காடி (1878), பாச்சு மூத்தது (1877), ராஜராஜவர்மா (1896), சேஷகிரி பாபு (1919, 3-வது வெளியீடு) போன்ற அறிஞர்களின நூல்களையும் குறிப்பிடுகிறார். ஸ்பிரிங், பீட் மற்றும் பிற ஐரோப்பிய அறிஞர்கள் எழுதிய மலையாள இலக்கணங்கள் முழுமை பெறாமல் காணப்படுவதால் அவை தவறான வழிக்கு நடத்திச் செல்கின்றன என்ற எண்ணத்தினால் ஆசிரியர் அந்நூற்களை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. அதனால்தான் ஆசிரியர் இந்நூலை இயற்றியதாகக் குறிப்பிடுகினறார். இந்நூல் இன்றும் வெளிநாட்டவருக்கு மலையாள இலக்கணத்தை அறிந்து கொள்வதற்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

இந்நூல் 21 வகைப்படுத்தப்பட்ட பாடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 19 மற்றும 20-வது வகைப் பாடங்கள் மேமபடட மொழிகளின் வடிவங்களையும் 21-வது வகை மலையாள மொழியின் செய்யுளையும் வடமொழியின் வடிவங்களையும கூறுகினறன. இதில் விதிகளும், குறிப்புகளும், பயிற்சிகளும், பல்வேறு வாசிப்பதற்கான பகுதிகளும மொழி பெயர்ப்பு துணுக்குகளும் காணப்படுகினறன. ஆசிரியர் விளககமுறையிலான மொழி பெயாப்பு துணுக்குகளும காணப்படுகின்றன. ஆசிரியர் விளக்கமுறையிலான மொழி பற்றிக் குறிப்பிடுவதோடு வரலாற்று மொழியியல் பற்றியும் இந்நூலில்

குறிப்பிட்டுள்ளார். இந்நூல் ஆங்கிலத்தில எழுதப்பட்டிருப்பினும் அம்மொழியில் சிறந்த பயிற்சி இல்லாதவர்களுக்கும் மலையாள மொழியைச் சரளமாகப் படிப்பவர்களுக்கும் பயன்படாத நிலையிலே காணப்படுகிறது.

## 7. இலத்தீன் மொழியில் மலையாள இலக்கணங்கள்

எல்.வி. இராமசுவாமி ஐயரின் "கிறித்தவர்களால் எழுதப்பட்ட பதினெட்டாம் நூற்றாண்டு மலையாள உரைநடை" என்னும் ஆங்கிலக் கட்டுரையின் வாயிலாக இலத்தீன் மொழியிலும் மலையாள இலக்கணங்கள் எழுதப்பட்டிருப்பது தெரிய வருகிறது. கிளெமன்ஸ் பீனியஸ் (Clemens Peanius) என்னும் இத்தாலிய மிஷனரியால் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட மலையாள இலக்கணமாகிய "Alphabeticum Grammatico Malabaricum" என்னும் நூலை இராமசுவாமி ஐயர் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். இலத்தீன் மிஷனரியாகிய கிளெமன்ஸ் மலையாள மொழியில் கிறித்தவ மதம் தொடர்பாக எழுதிய நூலாகிய "சம்ஷேபவேதாந்த்தம்" என்னும் நூல் 1772ஆம் ஆண்டில் ரோமில் அச்சிடப்படடது. மேலே குறிப்பிடப்பட்ட இராமசுவாமி ஐயரின் கட்டுரையில் "சம்ஷேபவேதார்த்தம்" (Samksepa vedartham) மலையாளத்தில் எழுதப்பட்ட முதல் பயண இலக்கியமாகிய "வர்த்தமான புஸதகம்" (Vartamana Pustakam) மும்பையில் 1810–இல் வெளியிடப்பட்ட மலையாள மொழி பெயர்ப்பாகிய "நான்கு சுவிசேஷங்கள்" (Four Gospels in Malayalam) மற்றும் "மலையாள எழுத்துக்கள்" (Alphabeticum Grammatico Malabaricum) ஆகிய நூல்கள் பற்றிய குறிப்பு உள்ளது. இவற்றில் இறுதியாகக் கூறப்பட்ட நூலே மலையாள எழுத்திலக்கணத்தைக் கூறும் இலக்கண நூலாக விளங்குகிறது. இந்நூலில் பல முக்கியமான கூறுகள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் J.C. Amadutius என்பவரால் எழுதப்பட்ட முகவுரையுடன் 11 இயல்களைக் கொண்டுள்ளது. இராமசுவாமி ஐயா தனது 'The Malayalam of the Missionaries' (BRRI. IX, Jan.1941, pp.1 - 10) என்னும் கடடுரையில் மிஷனரிகளால எழுதப்படும் உரைநடைகள் செயற்கையாகக் காணப்படுவதையும் அதனால கிறித்தவர்கள் அல்லாத பிற மத்தினர் அதனை 'மூப்பச்சன் மலையாளம்' அல்லது 'பாதிரி மலையாளம்' எனக் கேவலமாகக் கூறுவதாகவும் சுட்டிக்காட்டுகிறார். இந்து மத வாதிகள் வடமொழியாகிய சமஸ்கிருதத்தைப் பின்பற்றித் தங்களது படைப்புகளைப் படைக்க, கிறித்தவமிஷனரிகளோ இலத்தீன் மொழி நடையைப் பின்பற்றி செயற்கையாக மலையாள மொழிக்கு

இலககணத்தைப் படைத்துள்ளனர். இவ்விலக்கணங்களில் இலத்தீன மொழியின் தாக்கம் அதிகம் காணப்படுவதைக் காணலாம். "கேரள ராஜ்யத்திலே சத்திய வேத சரித்திரம்" மற்றும் 1903-இல் வெளியிடப்பட்ட இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட இலக்கணம ஆகியவற்றை ஐயா தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். மலையாள மொழியை வெளிநாட்டவர் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலே இலத்தீன், ஸ்பானிஷ் மற்றும் இத்தாலிய மொழிகளில் மலையாள மொழி இலக்கணங்கள் எழுதப்படுகின்றன.

# முடிவுரை

இலககணப் பாரம்பரியம் மிகுந்த நாடு இந்தியா. இருந்தாலும் இந்திய மொழி இலக்கணங்களில வடமொழி இலக்கண நூல்களுக்கே சிறப்பான இடம் கிடைத்துளளது. உலகில் பல்வேறு இலக்கண ஆசிரியர்களுமம வடமொழி இலக்கணங்களுக்கே முன்னுரிமை கொடுபபதைக காணலாம. காரணம் ஐரோப்பிய மொழிகள் பலவற்றோடு இன உறவு உடையதாக இது காணப்படுகிறது. திராவிட மொழிகளிலே சிறந்த இலககிய இலககணப் பாரமபரிய மிக்க தொன்மையான மொழியாகக் கருதப்படும் தமிழ மொழியின் கிளைமொழியாக உருபபெற்ற மலையாள மொழியும் தனது தாய்மொழியாகிய தமிழ் மொழியைப புறககணித்து விட்டு வடமொழியின் மோகத்தில் சிக்குண்டு தனது மொழி அமைப்பையே மாற்றிக் கொண்டது.

மலையாள இலககியங்கள் கி.பி.12–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டன. கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலே மலையாள மொழி ஒரு தனி மொழியாக உருபபெற்று விடடது. ஆரியர்கள் தென்னகத்தில் நுழைந்த பிறகு மிதமிஞ்சிய வடமொழிக் கலப்பால் மணிப்பிரவாள இலக்கியங்கள தோனறின.

ஆரியர்கள தெனனகத்தில் வந்தபோது ஆரிய மத ஆசாரங்களையும் ஆரியச் சீர்திருத்தங்களையும் நிலை நிறுத்திய சூழ்நிலையில் அவாகளின மொழியாகிய சமஸ்கிருதம் மலையாள மொழியில் பரவலான செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. வடமொழிச் சொற்களைக் கடன் வாங்குதல், வடமொழி வாககியங்களையுமா அணி வகைகளையுமா ஏற்றுக் கொள்ளுதல், வேற்றுமை உருபுகளையும், வினைமுற்றுகளையும், இடைச் சொற்களையுமா தத்தெடுத்துச் சேர்த்து மணிப்பிரவாளம் என்ற ஒரு புதிய இலக்கியத்தை உருவாக்கியது. இவை செய்யுள் மொழியைப் பாதித்ததே தவிரப் பேச்சு வழக்கைப் பாதித்துவிடவில்லை.

கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலே காணப்பட்ட மலையாள மொழியின் கல்வெட்டுக்கள் கொடுந்தமிழிலே காணப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் கிளை மொழியாகக் காணப்பட்ட கொடுந்தமிழ் ஒரு தனிமொழியாக அதாவது மலையாளமாக, கி.பி. 10–ஆம் நூற்றாண்டிற்குப் பின் மெதுவாக வளரத் தொடங்கியது. இவ்வாறு வளரத் தொடங்கிய மொழி கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் ஒரு தனித்துவம் பெற்றது. லீலாதிலகம் தோன்றிய பின்னரே எனலாம். காரணம் தமிழையும் வடமொழியையும் கொண்டு ஒரு புதிய மொழியாகிய மலையாளத்தைப் படைத்து மணிப்பிரவாள நடையில் எழுந்த முதல் இலக்கணமாக லீலாதிலகம் விளங்குகிறது.

மலையாள மொழிக்கு முதன் முதலில் எழுதப்பட்ட இலக்கணம் லீலாதிலகம் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. லீலாதிலகம் தூய மலையாள மொழிக்கு இலக்கணம் கூறுவதாக அமையவில்லை என்பது தெளிவு மட்டுமல்ல, அது எழுதப்பட்டதும் வடமொழியிலேயே. அன்றைய காலகட்டத்தில் பெருவழக்காயிருந்த மலைநாட்டுத் தமிழுக்கும், மணிப்பிரவாளத்திற்கும் இலக்கணம் கூறுவதாகவே அது அமைகின்றது. லீலாதிலகத்தின் நோக்கமெல்லாம் புதிய கூறுகளைத் தந்து மலையாளம் ஒரு புதிய மொழியாக உருவாகத் தொடங்கியுள்ளது என நிலை நாட்டுவதே ஆகும். எந்த ஒரு நூலையும் எழுதும் ஆசிரியனுக்கு முக்கியமான ஒரு குறிக்கோள் இருக்கும். பொதுவாக, இலக்கண நூல்களை எழுதுவோருக்கு மொழியின் அமைப்பை விளக்குவதே முக்கியமான குறிக்கோளாக இருக்கும். ஆனால், லீலாதிலக ஆசிரியரின் முக்கிய குறிக்கோள் தமிழ்மொழி வேறு, மலையாள மொழி வேறு என நிலைநாட்டுவதே ஆகும். கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் மலையாள மொழி தனி மொழிக்கான தனிப் பண்புகளைப் பெற்று வருகிற நிலையில் அதனை நிறுவுவதே தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தன்னுடைய நூலை ஆக்கியுள்ளார் எனக் கருதலாம். மிக நீண்ட இடைவெளிக்குப் பின் அதாவது கி.பி. 14–ஆம் நூற்றாண்டுக்குப் பின் கி.பி 19–ஆம் நூற்றாண்டில்தான் மலையாள மொழிக்கு இலக்கணங்கள் வெளிவந்துள்ளன. மலையாள மொழிக்கு அம்மொழியிலேயே முதன் முதல் இலக்கணம் கூறுவதாக அமைவது ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம் எனும் நூலாகும்.

மலையாள மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் எழுதிய லீலாதிலகத்திற்குப் பின் இலக்கணம் கூற எழுந்த நூல்களுள் ஹெர்மன் குண்டாட் (1851, 1868), ஜார்ஜ் மாத்தன் (1863), பாச்சு மூத்தது (1877, 1951),

கோவுண்ணி நெடுங்காடி (1878), ராஜராஜவர்மா (1895) திருந்திய பதிப்பு (1916) ஆகியோர் எழுதிய இலக்கணங்கள் குறிப்பிடத்தக்கவை.

குண்டர்ட் தம் நூலில் பெரும்பான்மை மலையாய்மை என்றழைக்கப்படும் மலையாள மொழிக்கும், சிறுபான்மை அதில் அமைந்த சமஸ்கிருதப் பகுதிகளுக்கும் இலக்கணம் தருகிறார். சமஸ்கிருதம் அதாவது வடமொழி இடையில் புகுந்த மொழி எனும் அடிப்படையிலேயே இவரது இலக்கணம் அமைந்துள்ளது. பேச்சு நடை மொழிச் சான்றுகள் தந்து சாதாரண மக்களுக்கும் பயன்படக்கூடிய விதத்திலேயே இவர் தம் நூலை அமைத்துள்ளார்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட லீலாதிலகம் கி.பி.1851-இல் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம் கி.பி. 1895-இல் எ.ஆர். ராஜராஜவர்மா எழுதிய கேரளபாணினீயம் ஆகியவற்றை மலையாள மொழியின் முக்கியமான மூன்று பேரிலக்கண நூற்கள் எனக் குறிப்பிடலாம். * அவற்றுள் இன்று கேரளத்தில் பள்ளிப் படிப்பு முதல் பட்டப்படிப்பு வரை மிகுந்த பயிற்சி பெற்று விளங்குவது கேரள பாணினீயமாகும். இந்நூல் வரலாற்றை அடிப்படையாக்கி இயற்றப்பட்ட ஒரு மலையாள இலக்கணமாயிருந்தது.

இவ்வாய்வில் மலையாள இலக்கணங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஒன்று மலையாள இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள், இரண்டு, ஐரோப்பியர்களால் எழுதப்பட்ட இலக்கணங்கள். இவற்றின் வேறுபாடுகள் என்னவென்றால் மலையாள இலக்கண ஆசிரியர்களால் இயற்றப்பட்ட இலக்கணங்கள் அவர்களது அன்றாட வாழ்க்கையின் பயன்பாட்டு அடிப்படையில் இயற்றப்பட்டவையாகும். ஐரோப்பிய இலக்கண ஆசிரியர்களால் எழுதப்பட்ட இலக்கணங்கள் மொழிக்கூறுகளைப் பாகுபாடு செய்து தொடர்புடைய மொழிகளோடு ஒப்பீட்டு நோக்கில் இயற்றப்பட்டவையாகும். முதல் வகை இலக்கணங்களில் இரண்டாம் வகை இலக்கணங்களைவிடக் கூடுதலான கோட்பாடு விவாதங்களைக் காணலாம். முதல் வகை இலக்கண ஆசிரியர்கள் அவாகளது மொழியின் வரலாற்றுத் தன்மைகளைப் பெருமளவில் எடுத்துச் கூறுவார்கள். ஆனால், இரண்டாம் வகை இலக்கண ஆசிரியர்கள் பிறமொழி எடுத்துக்காட்டுக்களை எடுத்தாள்வார்கள்.

## நூற்பட்டியல்

## BIBILIOGRAPHY


| | | |
|---|---|---|
| **Agesthialingom, S. & Kumarasamy Raja, N. (Ed.)** | 1978 | **Studies in Early Dravidian Grammars**, Annamalai Nagar. |
| **Antony, C.L.** | 1969 | **Bhasapatanannal**, Kottayam |
| **Antony, C.L.** | 1973 | **Keralapaniniya bhasyam**, Kottayam |
| **Balakrishna Pillai, P.** | 1934 | **Vyakarana Pravesika**, Trivandrum. |
| **Burrow, T. & Emeneau, M.B.** | 1961 | **A Dravidian Etymologi cal Dictionary**, Oxford. |
| **Burrow, T. & Emeneau, M.B.** | 1962 | **A Dravidian Etymological Dictionary Supplement**, Oxford. |
| **Burrow, T. & Emeneau, M.B.** | 1972 | 'Dravidian Etymological Notes' **JAOS**-92, pp. 397-418 |
| **Caldwell, R.** | 1956 | **A Comparative Grammar of the Dravidian or** South Indian Family of Languages, Madras. |

Cheriyan, K. & Gopinathan Pilla, V. 1956 **Bhasavyakaranadarpanam,** Mavelikkara.

Collins, Robert 1864 **A Short grammar and analysis of the Malayalam Language,** Kottayam.

Drummond, Robert. 1799 **Grammar of the Malabar Languages,** Bombay.

Emeneau, M.B. & Burrow, T. 1962 **Dravidian Borrowings from Indo Aryan,** Berkeley.

Ezhuthachan, K.N. 1975 **The history of the grammatical theories in Malayalam.** Trivandrum.

*Ezhuthachan, K.N.* *1979* **Gundert's *Malayalam* Grammar, in Ninth All India Conference of Dravidian Linguistics Souvenir,** pp.31-34, Calicut.

Frohnmeyer, L.J. 1913 **A Progressive grammar of the Malayalam Language for Europeans,** Mangalore Revised Edition.

Garthwaite, L. 1875 **First Course of Translation of Malayalam and English.** Mangalore.

Garthwaite, L. 1877 **Malayalabhasa VyakaranaSamgraham,** Mangalore.

George, K.M. 1954 **Valarunna kairali,** Kottayam

George, K.M 1956 **Ramacaritam and Study of Early Malayalam,** Kottayam.

George, K.M. 1958 **Sahitya Caritram prasthan annalilute,** Kottayam

George, K.M. 1968 'Lılatılakam and the Tamıl Malayalam Relatıonshıp' ın **Prof.M.B. Emeneau Sasta pu: rti volume.** pp95,98. Poona

Godavarma, K. 1946 **Indo-Aryan Loanwords in Malayalam,** Mavelikkara.

Godavarma, K. 1951 **Kerala bhasa vijnaniyam, part I,** Trivandrum.

Gopala Pillai, A.R. 1972 'A Critıcal review of the third Sılpa of Lilatilakam.' ın **Proceedings of the Second. All India Conference of Dravidian Linguistics.** Trivandrum.

Gopala Pillai, A.R. 1973 **Bibiliography on Lilatialakam,** Trıvandrum.

**Gopinathan Pillai, N.R.** 1970 **Bhasaniriksanam**, Kottayam

**Gopinathan Pillai, N.R.** 1971 'pa:ttu and manipravalam' in **proceedings of the first. All India Conference of Dravidian Linguistics,** Trivandrum

**Gopinathan Pillai, N.R.** 1972 **Ramacaritvavum pracina Malayalavum,** Kottayam

**Gopinathan Pillai, N.R.** 1978 'Bhasa content of Malayalam' in **Studies in Early Dravidian Grammars,** Aesthialingom and Kumarasamy Raja (Eds)Annamalainagar, pp 131-138

**Govinda Menon, A & Nedungadi, V.P.** 1961 **Malayala vyakaranam,** Calicut.

**Gundert, H.** 1872 **Malayalam - English Dictionary,** Mangalore

**Gundert, H.** 1962 **Malayala Bhasa vyakaranam Part-I,** Kottayam. (New Edition)

**Ilamkulam kunjan Pillai (Ed)** 1955 **Li:la:tilakam Manipravа:la Lakshanam**(Malayalam Translation) (6th Edition, 1969) Kottayam

Ilayaperumal, M. 1977 **Keralapaniniyam,** Tamil Translation. Thiruvananthapuram.

Krishnan, M. 1898 **Balavyakaranam enna Malayala Vyakarana Mulapathannal,** Mangalore

Kunjan Pillai Elamkulam, P.N. 1956 **Kerala bhasayute vikasa parinamannal,** Kottayam

Kunjunni Raja, K. 1962 **Bhasagavesanam,** Trichur

Meenakshi Sundaram, T.P. 1965 **'Lilatilakam - A few glimpses'** paper presented at the Seminar on **Grammatical Theories in Malayalam,** Trivandrum

Moothatu, Pachu 1876 **Keralabhasa vyakaranam,** Trivandrum

Muller, Rev. C. 1870 **A Malayalam and English Dictionary,** Mangalore

Nedungadi, T.M. Kovunni 1930 **Kerala Kaumudi,** Calicut (III Edition)

Padmanabha Pillai, G. 1902 **Malayala Vyakarana Codyottaram,** Trivandrum

Parameswara Aiyer, S. 1953 **Kerala Sahitya caritram,** Trivandrum

Peet, Rev. Joseph 1854 **A Grammar of Malayalam Language as spoken in the principalities of Travancore and Cochin and the Districts of North and South Malabar**, Kottayam (2nd Edition)

Prabhaharavariar, K.M. 1978 **'Li:latilakam on case' in Studies in Early Dravidian Grammars,** Agesthialingom and Kumarasami Raja (Eds) pp.139-53 Annamalainagar

Prabhaharavariar, K.M. 1979 'The roots of Malayalam Language' in **Ninth All India Conference of Dravidian Linguistics Souvenir,** pp. 47-53 Calicut.

Prabhaharavariar, K.M. (Ed) 1985 **A History of Malayalam Language,** Madras.

Prabhu, M. Seshagiri 1903 **Vyakaranadarsam,** Kottayam.

Prabhu, M. Seshagiri 1919 **Vyakaranamitram,** Calicut (3rd Edition)

Prabhu, M. Seshagiri 1925 **Balamrtam,** Ernakulam (2nd Edition)

Prabhu, M. Seshagiri 1925 **Sisu modakam,** Ernakulam (32nd Edition)

**Prabhu, M. Seshagiri & M. Krishnan** 1909 **Balavyakaranam** Mangalore (4th Edition)

**Prabodha Chandran Nair, V..R.** 1972 **Malayalam verbal Forms**, Trivandrum

**Prabodhachandran Nair, V..R.** 1973 **Malayalam-A linguistic description**, Kazhakuttam

**Raghavan Pilla, K.** 1968 **Malayalappiravi**, Kottayam

**Rajaraja Varma, A.R.** 1917 **Keralapa:nini:yam,** (Malayalam) Trivandrum

**Rajaraja Varma, A.R.** 1905 **Prathamavyakaranam,** Trivandrum

**Rajaraja Varma, A.R.** 1907 **Madhyamavyakaranam,** (2nd Edition) Trivandrum

**Rajaraja Varma, A.R.** 1908 **Sabdasodhini** Trivandrum

**Rajaraja Varma, A.R. & Ramakrishna Pillai, K.** 1904 **Balabodhini** 3rd Edition Quilon

**Ramakrrishna Pilla, K.** 1915 **Kerala bhasotpatti** Cochin

**Raman, P.P.** 1870 **Malayala Vyakarana Samgraham,** Calicut

**Ramaswamy Aiyar, L.V.** 1925 **A brief account of Malayalam Phonetics,** Calcutta

| | | |
|---|---|---|
| **Ramaswamy Aiyar, L.V.** | 1936 | **Evolution of Malayalam Morphology,** Ernakulam |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1937 | **Notes on Kerala Paniniyam,** Maharaja'a College. Magazine. XX. Sept |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1941 | **Malayalam of the Missionaries.** Bulletin of the Ramavarma Research Institute. IX January |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1942 | **Lilitilakam and Tamil grammatical works.** Bulletin of the Ramavarma Research Institute. Vol X. January |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1943 | **A Century Old Malayalam Grammar,** Bulleting of the Ramavarma Research Institute. XI. Trichur. |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1944 | **Grammar in Li:latilakam,** Trichur. |
| **Ramaswamy Aiyar, L.V.** | 1946-47 | 'Linguistics About a Century Age' in MCM 28. pp 32-35 |

**Ramaswamy Aiyar, L.V.** 1947 'Poets Malayalam Grammar' **Maharaja's College Magazine, March** Ernakulam

**Ravi Varma, L.V.** 1938 **Navina bhasa vyakaranam,** Trichur

**Sekkar, A.C.** 1953 **Evolution of Malayalam,** Poona

**Sekharan, N.C.** 1960 **Vyakarana nidarsanam,** Quilon

**Shanmugam, S.V.** 1971 **Dravidian Nouns: A Comparative Study,** Annamalainagar

**Shanmugam, S.V.** 1975 **'Malayala Moliyin urupperum Valarcciyum, Pulamai, 1.4,** pp.19-52

**Shanmugam, S.V.** 1976 'Malayaala Bhasayute rupikaranavum valarchiyum' in **Dravidabasha pathanam** (Prabhahara variyar, Translated Edited) Annamalainagar

**Shanmugam, S.V.** 1985 Lilatilakattin moliuravuk kotpatu **Tamilkkalai 3.3.4** pp 94-125

**Shanmugam, S.V.** 1985 **'Malayalam in Dravidian' in A History of Malayalam Language,** Prabhakara Variyar (Ed), pp 1-15

| | | |
|---|---|---|
| Shanmugam, S.V. | 1992 | **Malayala moliyin mutal Ilakkanam,** Madras |
| Sivathamby, K. | 1982 | **Ilakkanamum Samuka Uravukalum,** Madras |
| Somasekharan Nair, P. | 1973 | **Bhasa bheda vijnanam,** Kottayam |
| Spring, E. | 1839 | **Outlines of a Grammar of the Malayalam Language as spoken in the provinces of north and south Malabar and the kingdom of Travancore and Cochin.** Madras |
| Sreedhara Menon, M. | 1969 | **A Survey of Kerala History,** Kottayam |
| Subramaniyam, P.S. | 1971 | **Dravidian verb Morphology,** Annamalainagar |
| Subramanyan, S | 1977 | **The commonness in the metres of the Dravidian Language Dravidian Linguistics Association,** Trivandrum |

| | | |
|---|---|---|
| **Subramania Sastri, P.S** | 1934 | **History of Grammatical Theories in Tamil,** Madras |
| **Subramanian, V. I.** | | **'Malayalam verb Classification: Journal of the Kerala Oriental Manuscript Library, Vol.XII.** 63, Trivandrum. |
| **Sukumara Pillai. K.** | 1968 | **Adhunika Malayala Vyakaranam,** Chatayamangalam. |
| **Sukumara Pillai. K.** | 1985 | 'The languages of Manipravala literature' in **A History of Malayalam Language** (Ed.)pp. 55-79. |
| **Vaiyapuri Pillai, S.** | 1970 | 'Tamilum - Malayalamum tammil ulla bandham' (Tr.) **Sahitya Lokami - 4 Jan-Feb 1970,** Trichur. |
| **Vasudeva Bhattathiri, C.V.** | 1972 | **Kerala paniniyattilute** panthalam. |
| **Vasudeva Bhattathiri, C.V.** | 1978 | 'Sandhi in Lilatilakam' in **A Studies in Early Dravidian Grammars,** Agesthialingam & Kumaraswamy Raja (Eds), pp.167-188 |

| | | |
|---|---|---|
| **Velayudhan, S.** | 1971 | **Vowel duration in Malayalam An Accoustic Phonetic Study,** Trivandrum. |
| **Velayuthanpillai, P.U.** | 1968 | **Madhyakala Malayalam,** Trivandrum. |
| **Velayuthanpillai, P.U.** | 1973 | **Early Malayalam Prose,** Trivandrum |
| **Venugopalan, T.B.** | 1970 | **"Malayalattile Vyakarana Prasnannal** in Sahitya Lokam II 1 |